# APPOLO STUDY CENTRE

# வரலாறு

| | | |
|---|---|---|
| 8th term 1 | Unit 1. | ஐரோப்பியர்களின் வருகை |
| | Unit 2 | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை |
| | Unit 3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் |
| 9th term 1 | Unit -10 | pending |
| | Unit -11 | ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம் |
| 11th vol - 2 | Unit 16 | ஐரேப்பியரின் வருகை |
| | Unit 17 | ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள் |

## 8ம் வகுப்பு
## வரலாறு
## தொகுதி–I
## ஐரோப்பியர்களின் வருகை

**அறிமுகம்:**

18 மற்றும் 19ம் நூற்றாண்டுகளில் இந்தியாவிற்கு வருகை புரிந்த பல வெளிநாட்டு பயணிகள், வர்த்தகர்கள், சமய பரப்பாளர்கள் மற்றும் பொதுப்பணி ஊழியர்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் தாங்கள் பெற்ற அனுபவங்களையும், உணர்வுகளையும் விட்டுச்சென்றுள்ளனர். நவீன கால வரலாற்று நிகழ்வுகளை அறிய சர்வதேச, தேசிய மற்றும் வட்டார அளவில் நமக்கு ஏராளமான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

**நவீன இந்திய ஆதாரங்கள்:**

நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், சமூக – பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய நமக்கு உதவுகின்றன. தொடக்க காலத்திலிருந்தே போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டேனியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் தங்களுடைய அலுவலக செயல்பாடுகளை தங்களது அரசாங்கப் பதிவேடுகளில் பதிவு

செய்துள்ளனர். பராமரிக்கப்பட்ட அவர்களது பதிவுகள் இந்தியாவில் அவர்களது தொடர்பு பற்றி அறிய உதவும் மதிப்பு மிக்க ஆதாரங்களாக உள்ளன. லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் உள்ள ஆவணக் காப்பகங்கள் விலை மதிப்பற்ற வரலாற்றுத் தகவல்களின் பெட்டகமாகும்.

**சான்றுகளின் வகைகள்:**

நாம் வரலாற்றை எழுதுவதற்கு எழுதப்பட்ட மற்றும் பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன.

**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பிற்குப் பின் பல்வேறு மொழிகளில் எண்ணற்ற புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இதன் விளைவாக கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறிய முடிந்தது. இந்தியாவின் ஏராளமான செல்வத்தைப் பற்றி மார்க்கோபோலோ மற்றும் சில வெளிநாட்டுப் பயணிகளின் பயணக் குறிப்புகளிலிருந்து ஐரோப்பியர்கள் அறிந்து கொண்டனர். இக்குறிப்புகள் ஐரோப்பியர்களை இந்தியாவை நோக்கி ஈர்த்தது. தமிழ் வரலாற்றுக் குறிப்பு ஆவணங்களில் முக்கியமாக இருக்க வேண்டிய ஒரு பெயர் ஆனந்தரங்கம்.

இவர் பாண்டிச்சேரி பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக (Dubash) இருந்தார். 1736 லிருந்து 1760 வரை அவர் எழுதிய பிரெஞ்சு இந்திய உறவு முறை பற்றிய அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகள் அக்காலத்தைப் பற்றி அறிய உதவும் ஒரே எழுதப்பட்ட, சமய சார்பற்ற மதிப்பு மிக்க பதிவாக நமக்குக் கிடைத்துள்ளன. அவரது குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்றாதாரமாக உள்ளன. எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**ஆவணக்காப்பகங்கள்:**

வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) புதுடெல்லியில் அமைந்துள்ளது. இது இந்திய அரசின் ஆவணங்களைப் பாதுகாக்கும் முதன்மைக் காப்பகமாகும். இது கடந்த கால நிர்வாக முறைகளைப் புரிந்து கொள்வதற்கான அனைத்துத் தகவல்களுடன் தற்கால மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கும் ஒரு வழிகாட்டியாக இது விளங்குகிறது. இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அறிவியல் ரீதியான வாழ்க்கை மற்றும் மக்கள் நடவடிக்கைகள் குறித்து தெரிந்து கொள்வதற்கான உண்மையான சான்றுகள் இதில் அடங்கியுள்ளன. இது ஆசியாவில் உள்ள ஆவணக்காப்பகங்களிலேயே மிகவும் பெரியதாகும்.

| |
|---|
| ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் என்பவர் இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார். |

## தமிழ்நாடு ஆவணக்காப்பகம்:

தற்போது தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் "சென்னை பதிப்பாசனம்" சென்னையில் அமைந்துள்ளது. இது தென்னிந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். அங்குள்ள பெரும்பாலான ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. மேலும் அங்கு டச்சு, டேனிஷ், பாரசீக, மராத்திய நிர்வாக பதிவுகளின் தொகுப்புகள் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, தமிழ், உருது போன்ற மொழிகளிள் உள்ன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1642ம் ஆண்டு டச்சு பதிவுகளின் தொகுப்புகள் உள்ளன. இது கொச்சி மற்றும் சோழமண்டல கடற்கரையில் உள்ள இடங்களுடன் தொடர்புடையது. இந்த பதிவுகள் 1657 – 1845 காலப் பகுதியை உள்ளடக்கியது. டேனிஷ் பதிவுகள் 1777 – 1845 காலப்பகுதியை உள்ளடக்கியது. டாட்வெல் என்பவரின் பெரும் முயற்சியால் 1917 ஆம் ஆண்ட "சென்னை நாட்குறிப்பு பதிவுகள்" வெளியிடப்பட்டது. வரலாற்று ஆராய்ச்சியை ஊக்குவிப்பதில் அவருக்கு இருந்த மிகுந்த ஆர்வத்தைக் இது காட்டுகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயத்தை அவர் தொடங்கி வைத்தார்.

## பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்:

பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன. அவை தேசியத் தலைவர்களின் சாதனைகளையும், வரலாற்றுப் பிரமுகர்கள் பற்றிய தகவல்களையும் நமக்கு நிறைய தருகின்றன. இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பத்தின் சான்றாக புனித பிரான்சிஸ் ஆலயம் (கொச்சி), புனித லூயிஸ் கோட்டை (பாண்டிச்சேரி), புனித ஜார்ஜ் கோட்டை (சென்னை), புனித டேவிட் கோட்டை (கடலூர்), இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசுத் தலைவர் மாளிகை ஆகியன உள்ளன. சமய, கலாச்சார, வரலாற்று மதிப்பு மிக்க மற்ற பொருள் மூலங்கள் சேகரிக்கப்பட்டு அவை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இந்த அருங்காட்சியகங்கள் நமது கலாச்சாரத்தைப் பாதுகாத்து மேம்படுத்த உதவுகின்றன. டெல்லியிலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம் இந்தியாவின் மிகப்பெரும் தேசிய அருங்காட்சியகமாகும். இது 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாக நாணயங்கள் திகழ்கின்றன. நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியில் வெளியிடப்பட்டது. இராணி விக்டோரியாவுக்குப் பிறகு அரியணை ஏறிய மன்னர் ஏழாம் எட்வர்டு, தனது உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட்டார். ரிசர்வ் வங்கி 1935 ல் முறையாக நிறுவப்பட்டு இந்திய அரசின் ரூபாய் நோட்டுக்களை வெளியிடும் அதிகாரத்தைப் பெற்றது. மன்னர் ஆறாம் ஜார்ஜ் உருவம் தாங்கிய இந்தியாவின் முதல் 5 ரூபாய் நோட்டு ஜனவரி, 1938 ல் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது.

| 1690 ல் புனித டேவிட் கோட்டை ஆங்கிலேயரால் கடலூரில் கட்டப்பட்து |
|---|

## ஐரோப்பியர்கள் வருகை:

கி.பி. (பொ.ஆ) 1453 துருக்கியர்களால் கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பகுதி கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையிலான நிலவழி மூடப்பட்டது. துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது. இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

**போர்ச்சுக்கல்:**

ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும், போர்ச்சுக்கல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது. போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி பொதுவாக "மாலுமி ஹென்றி" என அறியப்படுகிறார். அவர் உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார். 1487 ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்தார். மன்னர் இரண்டாம் ஜான் அவரை ஆதரித்தார்.

**வாஸ்கோடகாமா:**

வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து, அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார். பின்னர் இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி (பொ.ஆ) 1498 ல் வாஸ்கோடாகாமா கள்ளிக்கோட்டையை அடைந்தார். அவரை மன்னர் சாமரின் வரவேற்றார். இரண்டாவது போர்ச்சுகீசிய மாலுமி பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல் என்பவர் வாஸ்கோடகாமாவின் கடல் வழியைப் பின்பற்றி 13 கப்பல்களில் சில 100 வீரர்களுடன் 1500 ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்.

வாஸ்கோடமாகா 1501 ல் இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார். அப்பொழுது கண்ணுனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார். பின்னர் கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையத்தை நிறுவினார். இதனால் கோபங்கொண்ட மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரைத் தாக்கினார். ஆனால் அவர் போர்ச்சுக்கீசிரியரால் தோற்கடிக்கப்பட்டார். பின்னர் கொச்சின் போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று. 1524 ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு டிசம்பர் 1524ல் கொச்சியில் காலமானார்.

**பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா (1505 – 1509):**

பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா என்பவர் இந்தியாவிலிருந்து போர்ச்சுக்கீசிய பகுதிகளுக்கு 1505ல் அனுப்பப்பட்ட முதல் ஆளுநர் ஆவார். இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது. அதற்காக அவர் பின்பற்றிய கொள்கை "நீலநீர்க்கொள்கை" எனப்பட்டது. இந்தியப் பெருங்கடலில் அரேபிய ஏகபோக வர்த்தகத்தை போர்ச்சுகீசியர் தகர்க்க முன்றபோது அது எதிர்மறையாக துருக்கி மற்றும் எகிப்தை பாதித்தது. பிஜப்பூர் மற்றும் குஜராத் சுல்தான்கள் போர்ச்சுகீசியருக்கு எதிராக, எகிப்து மற்றும் துருக்கி சுல்தான்களுக்கு ஆதரவளித்தனர். இதனால் துறைமுகங்களின் கட்டுப்பாட்டை விரிவுபடுத்துவது குறித்தும் போர்ச்சுகீசியர் கவலை அடைந்தனர். இந்நிலையில் சாவலுக்கு அருகில் நடைபெற்ற கடற்படை போரில் முஸ்லீம் கூட்டுப்படைகள் போர்ச்சுகீசியரைத் தோற்கடித்தன. இப்போரில் அல்மெய்டாவின் மகன் கொல்லப்பட்டான். பின்னர் டையூவில் நடைபெற்ற

கடற்போரில் அல்மெய்டா, முஸ்லீம் கூட்டுப் படைகளைத் தோற்கடித்தார். கி.பி. 1509ல் போர்ச்சுக்கீசியர் ஆசியாவில் கடற்படை மேலாண்மையைக் கோரினர்.

**அல்போன்சோ-டி-அல்புகர்க் (1509 – 1515)**

இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சோ-டி-அல்புகர்க் ஆவார். அவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510 ல் கோவாவைக் கைப்பற்றினார். 1515ல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார். அல்போன்சோ-டி-அல்புகர்க் இந்தியப் பெண்களுடனான போர்ச்சுகீசிய திருமணங்களை ஊக்குவித்தார். மேலும் விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டார்.

**நினோ-டி-குன்கா (1529-1538)**

அல்புகர்க்குவிற்குப் பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530 ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார். 1534ல் குஜராத்தின் பகதூர்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றினார். மேலும் 1537ல் டையூவைக் கைப்பற்றினார். பின்னர் குஜராத்தின் உள்ளூர்த் தலைவர்களிடமிருந்து டாமனைக் கைப்பற்றிய பின் சால்செட்டை 1548ல் ஆக்கிரமித்தார்.

இவ்வாறு போர்ச்சுக்கீசியர் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர். வங்காள கடற்கரையில் ஹுக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினர். போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் புகையிலை சாகுபடியை அறிமுகப்படுத்தினர். போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கினால் கத்தோலிக்க கிறித்துவம் இந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரையோர சில பகுதிகளில் பரவியது. 1556ல் போர்ச்சுக்கீசியரால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது. அச்சு இயந்திரத்தின் உதவியால் ஓர் ஐரோப்பிய எழுத்தாளர் 1563 ல் கோவாவில் “இந்திய மருத்துவ தாவரங்கள்“ என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார். 17 ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய அதிகாரம் படிப்படியாக டச்சுவிடம் வீழ்ச்சியடைந்தது. மேலும் 1739 ஆம் ஆண்டில் போர்ச்சுக்கீசிய அதிகாரம் கோவா, டையூ, டாமன் ஆகியவற்றோடு நின்று போனது.

**டச்சுக்காரர்கள்**

போர்ச்சுக்கீசியர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். 1602 ல் நெதர்லாந்து ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனம் தொடங்கப்பட்டு, கிழக்கிந்திய நாடுகளில் வர்த்தகம் செய்ய அரசிடமிருந்து அனுமதியும் பெற்றது. டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு அவர்களின் வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினம் என்ற இடத்தில் நிறுவினர். பின்னர் கி.பி. 1605ல் போர்ச்சுக்கீசியரிடமிருந்து அம்பாய்னாவை கைப்பற்றி இந்தோனேசியா தீவில் (Spice island) ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர். மேலும் போர்ச்சுக்கீசியரிடமிருந்து நாகப்பட்டினத்தைக் கைப்பற்றி, தென்னிந்தியாவில் தங்களை வலிமைப்படுத்திக் கொண்டனர். ஆரம்பத்தில் பழவேற்காடு (Pulicat) டச்சுக்காரர்களின் தலைநகராக இருந்தது. பின்னர் 1690ல் பழவேற்காட்டிலிருந்து தலைநகரை நாகப்பட்டினத்திற்கு மாற்றிக் கொண்டனர். இந்தியப் பொருட்களான பட்டு, பருத்தி, இண்டிகோ, அரிசி மற்றும் அபினி ஆகியவை டச்சுக்காரர்கள் வர்த்தகம் செய்த பொருட்களாகும். கருப்பு மிளகு மற்றும் மற்ற நறுமணப்

பொருட்கள் மீதான வியாபாரத்தில் அவர்கள் ஏகபோக உரிமை பெற்றிருந்தனர். இந்தியாவில் பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம்பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் போன்ற இடங்களில் அவர்களது முக்கிய வர்த்தக மையங்கள் இருந்தன.

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி 17ஆம் நூற்றாண்டு முழுவதும், டச்சு மற்றும் போர்ச்சுக்கீசியர்களுக்குப் போட்டியாக இருந்தது. இந்நிலையில் 1623 ல் டச்சுக்காரர்கள் அம்பாய்னாவில் பத்து ஆங்கில வியாபாரிகள் மற்றும் ஒன்பது ஜப்பானியர்களை இரக்கமின்றி கொன்றனர். இந்நிகழ்வு டச்சு மற்றும் ஆங்கிலேயர்களிடையே மேலும் பகைமையை வளர்த்தது. 1759ல் நடைபெறற்ற பெடரா போரில் ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்களைத் தோற்கடித்தனர். தொடர்ந்து டச்சு இறுதி வீழ்ச்சியை எட்டியது. ஒன்றன் பின் ஒன்றாக தனது குடியேற்றங்களை ஆங்கிலேயரிடம் இழந்த டச்சு க1795ல் முழுமையாக ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தது.

**தமிழ்நாட்டில் டச்சுக்காரர்கள்:**

1502 முதல் பழவேற்காட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திய போர்ச்சுக்கீசியர்கள் டச்சுக்காரர்களால் தங்களின் ஆதிக்கத்தை இழந்தனர். பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் 1613 ல் கெல்டிரியா கோட்டையைக் கட்டினர். இந்தக் கோட்டை ஒரு காலத்தில் டச்சு அதிகார மையத்தின் இருப்பிடமாக இருந்தது.

அக்காலத்தில் பழவேற்காட்டிலிருந்து வைரங்கள் மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப்பேட்டை (Porto Novo) கடலூர் மற்றும் தேவனாம்பட்டினம் ஆகியன டச்சுக்காரர்களின் கோட்டைகள் மற்றும் கைப்பற்றிய பகுதிகளாகும்.

**ஆங்கிலேயர்கள்:**

இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்டன் வர்த்தகர்கள் நிறுவனத்திற:கு 1600 டிசம்பர் 31 அன்று ஒரு அனுமதிப் பட்டயம் வழங்கினார். அந்த நிறுவனம் (கம்பெனி) ஒரு கவர்னர் மற்றும் 24 இயக்குநர்களைக் கொண்டிருந்தது. 1608 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகளைப் பெற அனுப்பிவைக்கப்பட்டார். அவர் சூரத் நகரில் ஓர் வணிக மையத்தை அமைக்க அனுமதி கோரினார். ஆனால் போர்ச்சுக்கீசிய தலையீட்டால் ஜஹாங்கீர் அனுமதி வழங்கவில்லை. ஆகையால் வில்லியம் ஹாக்கின்ஸ் ஏமாற்றத்துடன் இங்கிலாந்து திரும்பினார். இந்நிலையில் சூரத்து அருகே நடைபெற்ற கடற்போரில் ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சுக்கீசிய கடற்படையைத் தோற்கடித்தார். இதனால் மகிழ்ச்சியடைந்த பேரரசர் ஜஹாங்கீர், 1613 ல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார். இது ஆரம்பத்தில் ஆங்கிலேயரின் தலைமையகமாக இருந்தது. இந்நிலையில் 1614ல் கேப்டன் நிக்கோலஸ் டவுண்டன், போர்ச்சுக்கீசியரை வென்றார். இந்த சம்பவங்கள் முகலாயர் அவையில் ஆங்கிலேயரின் கௌரவத்தை அதிகரித்தன. 1615 ல் ஜஹாங்கீர் அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ் ரோ அனுப்பிவைக்கப்பட்டார். அவர் ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கி இருந்தார். மூன்றாம் ஆண்டு இறுதியில் பேரரசர் ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார். உரிமையைப் பெற்ற சர் தாமஸ் ரோ

புறப்படும் முன் ஆக்ரா, அகமதபாத் மற்றும் புரோச் ஆகிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்.

ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினத்தில் 1611ல் நிறுவினர். இது கோல்கொண்டா அரசின் ஒரு முக்கிய துறைமுகமாகும். 1639ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர், சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார். அங்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி புனித ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்படும் தனது புகழ்வாய்ந்த வணிக மையத்தை நிறுவியது. இது ஆங்கிலேயரால் கட்டப்பட்ட முதல் கோட்டையாகவும், கிழக்குப் பகுதி முழுமைக்குமான தலைமையிடமாகவும் விளங்கியது.

இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுக்கீசிய இளவரசி காதரினை திருமணம் செய்து கொண்டார். திருமண சீராக பம்பாய் தீவை போர்ச்சுக்கீசிய மன்னரிடமிருந்து பெற்றார். 1668 ல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆண்டுகள் 10 பவுண்டுகள் குத்தகை கொடுத்து பம்பாய் தீவை மன்னர் இரண்டாம் சார்லசிடமிருந்து பெற்றது.

1690 ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்பவரால் ஒரு வர்த்தக மையம் நிறுவப்பட்டது. கதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698 ல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது. இந்த மூன்று கிராமங்கள் பின்னாளில் கல்கத்தா நகரமாக வளர்ச்சி பெற்றது. 1696 ல் சுதாநுதியில் வலுவான ஒரு கோட்டை கட்டப்பட்டது. அது 1700 ல் வில்லியம் கோட்டை என அழைக்கப்பட்டது.

1757 ல் பிளாசி போர் மற்றும் 1764 பக்சார் போருக்குப் பிறகு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஓர் அரசியல் சக்தியாக மாறியது. இந்தியா 1858 வரை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் கீழ் இருந்தது. 1858 க்குப் பிறகு இந்தியா ஆங்கில அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**டேனியர்கள்:**

டென்மார்க் அரசர் நான்காம் கிரிஸ்டியன் 1616 மார்ச் 17ல் ஒரு பட்டயத்தை வெளியிட்டு டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்கினார். அவர்கள் 1620 ல் தரங்கம்பாடி (தமிழ்நாடு), 1676 ல் செராம்பூர் (வங்காளம்) ஆகிய இடங்களில் குடியேற்றங்களை நிறுவினர். செராம்பூர், டேனியர்களின் இந்தியத் தலைமையிடமாக இருந்தது. டேனியர்கள் இந்தியாவில் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளத் தவறி விட்டனர். எனவே 1845ல் டேனியர்கள் இந்தியாவிலிருந்த தங்கள் குடியேற்றங்கள் அனைத்தையும் ஆங்கில அரசுக்கு விற்றனர்.

| |
|---|
| தரங்கம்பாடியை டேனியர்கள் டானஸ்பெர்க் என அழைத்தனர். சீகன்பால்கு என்பவரை டென்மார்க்கின் அரசர் இந்தியாவிற்கு அனுப்பினார். அவர் தரங்கம்பாடியில் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார். |

**பிரெஞ்சு**
**கால்பர்ட்**

பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம், மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664ல் உருவாக்கப்பட்டது. 1667 ல் பிரான்காய்ஸ் கரோன் தலைமையின் கீழ் ஒரு குழு இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டது. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த ஐரோப்பிய நாடுகளுள் கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும். இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன் என்பவர் சூரத் நகரில் நிறுவினார். 1669-ல் மார்காரா என்பவர் கோல்கொண்டா சுல்தானில் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.

1673 ல் பிஜப்பூர் ஆட்சியாளர் ஷெர்கான் லோடிக்கு வழங்கப்பட்ட மானியத்தின் கீழ், மார்ட்டின் என்பவர் பாண்டிச்சேரியில் குடியேற்றத்தை நிறுவினார். பாண்டிச்சேரி இந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வளமான பிரெஞ்சு குடியேற்றமானது. பாண்டிச்சேரியில் செயின்ட் லூயிஸ் எனப்படும் கோட்டைய பிரான்காய்ஸ் மாட்டின் கட்டினார். வங்காளத்தின் முகலாய ஆளுநரான செயிஸ்டகானின் அனுமதி பெற்று 1673ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கல்கத்தாவுக்கு அருகே சந்திரநாகூர் என்ற நகரை நிர்மாணித்தது. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வர்த்தக மையங்களை நிறுவியது. குறிப்பாக கடலோரப் பகுதிகளான மாஹி, காரைக்கால், பாலசோர் மற்றும் காசிம் பசார் போன்ற இடங்கள் முக்கியமானவையாகும்.

1742 ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவரது நியமனத்தின் மூலம் பிரெஞ்சு அதிகாரம் மேலும் பலப்படுத்தப்பட்டது. அவருக்குப் பின் பாண்டிச்சேரியின் பிரெஞ்சு ஆளுநராக டூமாஸ் அனுப்பப்பட்டார்.

| |
|---|
| தூரக்கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்யும் நோக்கில் 1731ல் ஜோதன்பர்க் என்பவர் சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவினார். டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றி சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியின் தோற்றத்திற்கு ஊக்குவிப்பாக இருந்தது. |

**முடிவுரை:**

போர்ச்சுக்கீசியர்கள் டச்சுக்காரர்களால் முறியடிக்கப்பட்ட பின்னர் ஆங்கிலேயரால் வெளியேற்றப்பட்டனர். அதன்பின் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள், வர்த்தகம் மற்றும் அரசியல் ஆதிக்கப் போட்டியில் ஆங்கிலேயரை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் வர்த்தகத்தைப் புறக்கணித்து இந்தியா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுடன் போரில் ஈடுபட்டனர். அதன் விளைவாக ஆங்கிலேயருடன் நடைபெற்ற மூன்று கர்நாடகப் போர்களும் பிரான்சை நலிவடையச் செய்தன. இது ஆங்கிலேயரின் பிராந்திய விரிவாக்கத்திற்கு புத்தெழுச்சியைக் கொடுத்தது. போர்ச்சுக்கீசியர்கள் டச்சு, டேனிஷ் மற்றும் பிரெஞ்சு ஆகியவற்றின் மீதான ஆங்கிலேயரின் வெற்றிக்கு ஆங்கிலேயரின் வணிக ரீதியான போட்டி, உயர்ந்த தியாகம், அரசின் ஆதரவு, கடற்படை மேலாதிக்கம், தேசிய தன்மை, மற்றும் ஐரோப்பாவில் அவர்களின் அதிகாரம் ஆகியன காரணமாயின.

# அலகு – 2

## வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**அறிமுகம்:**

15ஆம் நூற்றாண்டில் நிலவழியாகவும், கடல் வழியாகவும் புதிய நிலவியல் கண்டுபிடிப்புகளின் சகாப்தமாக ஐரோப்பா விளங்கியது. 1498 ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த மாலுமி வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து இந்தியா வருவதற்கான புதிய கடல் வழியை கண்டுபிடித்தார். இத்தகைய புதிய நிலவியல் கண்டுபிடிப்புகளின் முக்கிய நோக்கம் வணிகத்தின் மூலம் அதிக லாபம் பெறுவதும் மற்றும் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதும் ஆகும். வங்காளத்தின் வெற்றிக்குப் பின் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் வலுவடைந்தது. இதன் முக்கிய நோக்கம் வணிகம் மற்றும் ஆட்சி அதிகாரத்தை விரிவுபடுத்துவதே ஆகும்.

**ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி நிறுவப்படுதல்:**

**பிளாசிப் போர் (1757)**

வங்காள நவாப் அலிவர்திகான் 1756ல் இறந்த பின்பு அவரது பேரன் சிராஜ்-உத்-தௌலா வங்காளத்தின் அரியணை ஏறினார். சிராஜ்-உத்-தௌலாவின் பலவீனத்தையும், புகழ்பெற்ற நிலையையும் தனக்கு சாதகமாக்கிய ஆங்கிலேயர்கள் அவரது அதிகாரத்தை கைப்பற்ற முனைந்தனர். ஆங்கிலேயரின் இவ்வெண்ணத்தை புரிந்துகொண்ட சிராஜ்-உத்-தௌலா அவர்களுக்கு பாடம் புகட்ட எண்ணினார். கல்கத்தாவிலுள்ள அவர்களது குடியேற்ற பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி, வங்காளத்தின் காசிம் பஜாரில் அமைந்துள்ள வணிக மையத்தை கைப்பற்றினார். 1756 ஜுன் 20 அன்று ஆங்கிலேயரின் வில்லியம் கோட்டை நவாப்பிடம் சரணடைந்தது. ஆனால் ஆங்கிலப் படைத்தளபதி ராபர்ட் கிளைவ் கல்கத்தாவை மீட்டார்.

**இருட்டறை துயரச் சம்பவம் (1756)**

சிராஜ்-உத்-தௌலாவின் படை வீரர்கள் 146 ஆங்கிலேயர்களை சிறைப்பிடித்து கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் காற்று புகாத ஒரு சிறிய இருட்டறையில் ஓர் இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்தனர். மறுநாள் காலை அறையை திறந்தபோது அவர்களுள் 123 பேர் மூச்சு திணறி இறந்திருந்தனர். இது வரலாற்றில் “இருட்டறை துயரச் சம்பவம்“ என்றழைக்கப்படுகிறது.

இறுதியாக, 1757 பிப்ரவரி 9ஆம் நாள் நடைபெற்ற அலிநகர் உடன்படிக்கையின் படி சிராஜ்-உத்-தௌலா, இராபர்ட் கிளைவின் நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றார். பின்னர் மார்ச் 1757ல் பிரெஞ்சுக் குடியேற்றமான சந்திர நாகூரை ஆங்கிலேயர் கைப்பற்றினர். பிளாசிப் போரானது சிராஜ்-உத்-தௌலா, பிரெஞ்சுக் கூட்டணிக்கும் மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையே 1757 ஜீன் 23 ஆம் நாள் நடைபெற்றது. இப்போரில் சிராஜ்-உத்-தௌலாவின் படைகளை இராபர்ட் கிளைவ் தலைமையிலான ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் படைகள் தோற்கடித்தன. இப்போரின் முடிவில் ஏற்பட்ட குழப்பத்தால் கம்பெனி வங்காள கருவூலத்தின் மூலம் கிடைக்க பெரும் செல்வத்தைக் கொண்டு இராணுவத்தை பலப்படுத்தியது. பிளாசிப் போர் வெற்றி ஆங்கிலேயரது அரசியல் அதிகாரத்தை இந்தியாவில் தொடங்கிவைத்தது

மட்டுமல்லாமல் அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு அவர்களது ஆதிக்கத்தை நீடிக்கவும் செய்தது.

**பக்சார் போர் (1764)**

1757 ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் ஆங்கிலேயர்கள் தடையில்லா வணிக உரிமை பெற்றனர். வங்காளத்தின் 24 பார்கானா எனும் பகுதியை அங்கிலேயர் பெற்றனர். பிளாசிப் போருக்கு பின் வங்காளத்தின் அரியணை ஏறிய மீர்ஜாபர் (1757 – 1760) ஆங்கிலேயர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தவறியதால் அவரை கட்டாயப்படுத்தி பதவியிலிருந்து நீக்கி விட்டு அவரது மருமகன் மீர்காசிம் என்பவரை வங்காள நவாப் ஆக்கினர்.

மீர்காசிம் ஆங்கிலேயருக்கு புர்த்வான், மிட்னாபூர், சிட்டகாங் ஆகிய பகுதிகளை வழங்கினார். அவர் வங்காளத்தின் தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து மாங்கீர்க்கு மாற்றினார். தஸ்தக் என்றழைக்கப்படும் சுங்கவரி விலக்கு ஆணையை தவறாக பயன்படுத்திய ஆங்கிலேயர் மீது மீர்காசிம் கோபடைந்து கலகத்தில் ஈடுபட்டார். ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட அவர் அயோத்திக்கு தப்பி ஓடி அடைக்கலம் புகுந்து அங்கு சுஜா-உத்-தௌலா மற்றும் இரண்டாம் ஷா ஆலம் ஆகியோருடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டமைப்பை உருவாக்கினார்.

பீகார் பகுதியின் பாட்னாவிற்கு மேற்கே 130 கி.மீ தொலைவில் கங்கை நதிக்கரையில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட ஒரு சிறிய நகரமே பக்சார் ஆகும். 1764 ஆம் ஆண்டு அக்டோபர் 22ல் இங்கு நடைபெற்ற போரில் சுஜா-உத்-தௌலா, இரண்டாம் ஷா ஆலம், மீர்காசிம் ஆகியோர் ஆங்கிலப்படைத் தளபதி ஹெக்டர் மன்றோ-வால் தோற்கடிக்கப்பட்டனர். இது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் தீர்க்கமான வெற்றியாக அமைந்தது. போரின் முடிவில மீண்டும் மீர்ஜாபர் வங்காள அரியணையில் அமர்த்தப்பட்டார்.


மீர்ஜாபரின் இறப்புக்கு பின் அவரது மகன் நிஜாம் உத்-தௌலா வங்காள நவாப் ஆனார், 1765 பிப்ரவரி 20ல் நடந்த அலகாபாத் உடன்படிக்கையின் படி பக்சார் போர் முடிவுக்கு வந்தது. அதன்படி வங்காள நாவாப் தன்னுடைய இராணுவத்தின் பெரும் பகுதியை கலைத்துவிட வேண்டும் எனவும், கம்பெனியால் நியமிக்கப்பட்ட துணை சுபேதார் மூலம் இனி வங்காளம் நிர்வகிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. இராபர்ட் கிளைவ் அயோத்தி நவாப் சுஜா-உத்-தௌலாவுடனும், முகாலயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்துடனும் தனித்தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டார். இவ்வாறாக இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் இரட்டையாட்சி முறையை கொண்டு வந்தார்.

**கர்நாடகப் போர்கள்:**

18ஆம் நூற்றாண்டில் மூன்று கர்நாடகப் போர்கள் பல்வேறு இந்திய ஆட்சியாளர்களிடையே நடைபெற்றது. இதில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியும் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியும் எதிர் எதிர் அணியில் இருந்தது. பாரம்பரியமாக, ஐரோப்பாவில் பிரிட்டனும், பிரான்சும் போட்டி நாடுகள் ஆகும்.

அந்நிலை இந்தியாவிலும் வணிகம் செய்வதிலும், ஆட்சி செய்வதிலும் தொடர்ந்தது. இதன் விளைவாக தொடர் இராணுவ போட்டி தென்னிந்தியாவின் கர்நாடக பகுதியில் நடைபெற்றது. அவை கர்நாடகப் போர்கள் எனப்படுகின்றன.

இவை 1746 முதல் 1763 வரை நடைபெற்றது. இப்போரின் விளைவாக ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் அதிகாரம் வலுபெற்றது.




**முதல் கர்நாடகப் போர் (1746 – 1748)**

ஐரோப்பாவில் ஏற்பட்ட ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் பிரிட்டனும், பிரான்சும் எதிர் எதிர் அணிகளில் இருந்தன. இந்த பகைமை இந்தியாவிலும் எதிரொலித்தது.

**அடையாறு போர் (1746)**

சென்னையின் அடையாறு நதிக்கரையில் அமைந்துள்ள சாந்தோம் என்ற இடத்தில் கர்நாடக நவாப் அன்வாருதீனுக்கும் பிரெஞ்சுப் படைக்கும் இடையே இப்போர் நடைபெற்றது. அன்வாருதீன் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். கேப்டன் பாரடைஸ் தலைமையிலான மிகச் சிறிய பிரெஞ்சுப் படை மாபூஸ்கான் தலைமையிலான மிக வலிமை வாய்ந்த நவாப் படையினை தோற்கடித்தது. நன்கு பயிற்சி பெற்ற ஐரோப்பிய படை இந்திய படையை வெற்றி பெற்று தங்கள் மேலாண்மையை நிலைநாட்டிய முதல் நிகழ்வு இதுவே ஆகும்.

**அய்-லா-சப்பேல் உடன்படிக்கை (1748)**

ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் முடிவில் ஏற்பட்ட அய்-லா-சப்பேல் உடன்படிக்கையின் மூலம் முதல் கர்நாடகப் போர் முடிவுக்கு வந்தது. இதன் படி மதராஸ் (சென்னை) ஆங்கிலேயரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மாறாக வட அமெரிக்காவின் சில பகுதிகளை பிரான்சு பெற்றது.

**இரண்டாம் கர்நாடகப் போரி (1749 - 1754)**

கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் ஆகிய பகுதிகளில் எற்பட்ட வாரிசுரிமை பிரச்சனையே இப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது. கர்நாடக நவாப் பதவிக்கு அன்வாருதீனும், சந்தா சாகிப்பும் உரிமை கோரினார். அதே போல் ஹைதராபாத் நிசாம் பதவிக்கு நாசிர் ஜங்கு முசாபர் ஜங்-ம் உரிமை கோரினர். இதனால் தக்காண பகுதியில் பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிப்பிற்கும், முசாபர் ஜங்-க்கும் உதவி செய்தனர். ஆங்கிலேயர்கள் அன்வாருதீனுக்கும், நாசிர்ஜங்-கும்

உதவினர். இப்போர் மூலம் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் எண்ணினர்.

**ஆம்பூர் போர் (1749)**

இதன் விளைவாக, ஆகஸ்ட் 3, 1749ல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே, சந்தா சாகிப், முசாபர் ஜங் ஆகியோரின் கூட்டுப் படைகளால் கர்நாடக நவாப் அன்வாருதீன் தோற்கடிக்கப்பட்டு, கொல்லப்பட்டார். அன்வாருதீனின் மகன் முகமது அலி திருச்சிராப்பள்ளிக்கு தப்பி ஓடினார். சந்தாசாகிப்பை பிரெஞ்சுக்காரர்கள் கர்நாடக நவாப் ஆக்கினர். அதற்கு ஈடாக பாண்டிச்சேரியை சுற்றியுள்ள 80 கிராமங்களை வெகுமதியாக பிரெஞ்சுக்காரர்களுக்கு அவர் வழங்கினார்.

தக்காணத்திலும் பிரெஞ்சுக்காரர்களால் நாசிர் ஜங் தோற்கடிக்கப்பட்டு, கொல்லப்பட்டார். முசாபர் ஜங் ஐதராபாத்தின் நிசாம் ஆனார் புதிய நிசாம் பிரெஞ்சுக்காரர்களுக்கு போதிய வெகுமதி வழங்கினார். அவர் கிருஷ்ணா நதியின் தென் பகுதிகள் அனைத்திற்கும் டியூப்ளே-யை ஆளுநராக நியமித்தார். 1751ல் தன் மக்களால் முசாபர் ஜங் படுகொலை செய்யப்பட்டார். நாசிர் ஜங்-ன் சகோதரர் சலபத் ஜங் பிரெஞ்சுப் படைத் தளபதி புஸ்ஸியின் உதவியுடன் ஹைதராபாத் நிசாம் ஆனார். அவர் குண்டூர் மாவட்டத்தை தவிர வட சர்க்கார் முழுவதும் பிரெஞ்சுக்காரர்களுக்கு வழங்கினார். இதன் மூலம் டியூப்ளே-ன் அதிகாரம் உச்ச நிலையை அடைந்தது.

**ஆற்காட்டுப் போர் (1751)**

**இராபர்ட் கிளைவ்**

இத்தருணத்தில் டியூப்ளே, முகமது அலி தஞ்சம் புகுந்த திருச்சி கோட்டையை முற்றுகையிட ஒரு படையை அனுப்பினார். இம்முயற்சியில் சந்தா சாகிப்பும் (கர்நாடக நவாப்) தன்னை பிரெஞ்சுப் படைகளோடு இணைத்துக் கொண்டார். இச்சமயத்தில் ஆற்காட்டை தாக்க இராபர்ட் கிளைவ் கம்பெனியிடம் அனுமதி கோரினார். ஆங்கிலேய கவர்னர் சாண்டர்ஸ் இராபர்ட் கிளைவ்-ன் திட்டத்திற்கு அனுமதி வழங்கினார். 200 ஆங்கில படையினர், 300 இந்திய படை வீரர்களுடன் கிளைவ் ஆற்காட்டை தாக்கி கைப்பற்றினார். லாரன்ஸ் உதவியுடன் கிளைவ் ஆரணி, காவேரிபாக்கம் ஆகிய இடங்களில் பிரெஞ்சுப் படைகளை தோற்கடித்தார். அதேசமயத்தில், சந்தாசாகிப் திருச்சியில் கொலை செய்யப்பட்டார். அன்வாருதீனின் மகன் முகமது அலி ஆங்கிலேயரின் உதவியுடன் ஆற்காட்டு நவாப் ஆனார். இத்தோல்வியால் பிரான்சு நாட்டு அரசாங்கம் டியூப்ளே-வை பாரிசுக்கு திரும்ப அழைத்தது.

**பாண்டிச்சேரி உடன்படிக்கை (1755)**

டியூப்ளேவைத் தொடர்ந்து பிரெஞ்சு ஆளுநராக பதவியேற்ற கோதேயூ ஆங்கிலேயருடன் பாண்டிச்சேரி உடன்படிக்கையினை செய்து கொண்டார். இதன் படி இரு நாடுகளும் தங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது எனவும், போருக்கு முன்னர் இருந்த பகுதிகள் அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் எனவும் கூறப்பட்டது. மேலும் புதிய கோட்டைகளை கட்டக் கூடாது எனவும் கூறப்பட்டது. இவ்வுடன்படிக்கை மூலம் ஆங்கிலேயர் மேலும் வலிமை பெற்றனர்.

இரண்டாம் கர்நாடகப் போர் ஒரு முடிவுற்ற நிலையை உணர்த்தியது. முகமது அலியை கர்நாடக நவாப் ஆக நியமித்ததின் மூலம் ஆங்கிலேயர்கள்

இந்தியாவில் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டினர். ஹைதராபாத்தில் பிரெஞ்சுக்காரர்கள் வலிமையுடன் காணப்பட்டாலும் இப்போர் அவர்கள் தக்காணப் பகுதியில் வலிமை குன்றியவர்கள் என்பதை நிரூபித்தது.

**மூன்றாம் கர்நாடகப் போர் (1756 – 1763)**

ஐரோப்பாவில் வெடித்த ஏழாண்டுப் போர் இந்தியாவில் மூன்றாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது. இச்சமயத்தில் ஆங்கில படைத் தளபதி இராபர்ட் கிளைவ் பிளாசிப் போரின் மூலம் வங்காளத்தில் ஆங்கில ஆதிக்கத்தை நிறுவியதுடன் மூன்றாம் கர்நாடகப் போருக்கு தேவையான நிதியையும் வழங்கினார்.

இப்போரில் பிரெஞ்சு படைகளை வழிநடத்த கவுண்-டி-லாலியை பிரெஞ்சு அரசாங்கம் நியமித்தது அவர் கடலூரில் உள்ள செயிண்ட் டேவிட் கோட்டையை எளிதாக கைப்பற்றினார். கர்நாடகப் பகுதியிலிருந்து ஆங்கிலேயரை விரட்ட தன்னுடன் இணையுமாறு புஸ்ஸிக்கு, கவுண்-டி-லாலி உத்தரவிட்டார். புஸ்ஸி ஐதராபத்திலிருந்து புறப்பட்ட தருணத்தை பயன்படுத்த வட சார்க்கார் (ஆந்திர பிரதேசம், ஒடிசா) பகுதிகளை கைப்பற்ற கர்னல் போர்டை வங்கத்திலிருந்து இராபர் கிளைவ் அனுப்பினார்.

**வந்தவாசிப் போர் 1760**

1760 ஜனவரி 22ல் நடைப்பெற்ற இப்போரில் ஜெனரல் அயர் கூட் தலைமையிலான ஆங்கிலேயப் படை லாலி தலைமையிலான பிரெஞ்சுப் படையை முற்றிலும் தோற்கடித்து. பின்னர் ஓர் ஆண்டுகள் இந்தியாவிலிருந்த அனைத்துக் குடியேற்றங்களையும் பிரெஞ்சுக்காரர்கள் இழந்தனர். கவுண்டிலாலி பிரான்சு நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டு சிறையிலிடப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டார்.

ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போர் பாரிசு உடன்படிக்கையின் படி முடிவுக்கு வந்தது. அதன்படி பாண்டிச்சேரி உட்பட இந்தியாவிலிருந்த பிரெஞ்சு குடியேற்றங்கள் அனைத்தும் பிரெஞ்சுக்காரர்கள் வசம் திரும்ப கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் தங்கள் பகுதிகளை பலப்படுத்தவும், படைகளை பெருக்கவும் தடைவிதிக்கப்பட்டது. இதன் மூலம் பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

**மைசூரும், ஆங்கிலேய ஆட்சி விரிவாக்கத்திற்கு எதிர்ப்பும்:**

ஹைதர் அலியின் தலைமையில் மைசூர் சமஸ்தானம் தென்னிந்திய வரலாற்றில் மிகப்பெரிய எழுச்சியை பெற்றது. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி விரிவாக்கத்திற்கு எதிராக ஹைதர் அலியும், அவரது மகன் திப்பு சுல்தானும் முக்கிய பங்காற்றினர். இருவரும் வீரதீரத்துடன் ஆங்கிலேயரை எதிர்த்தனர். 1761 ல் ஹதர் அலி மைசூர் சமஸ்தானத்தின் உண்மையான ஆட்சியாளரானார். மேலும் அவர் ஆங்கிலேயருக்கு வலிமைமிக்க எதிரியாகவும் திகழ்ந்தார்.

**முதல் ஆங்கிலேய – மைசூர் போர் 1767 – 1769):**

**காரணங்கள்:**

ஹைதர் அலியின் வளர்ச்சி, அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு ஆகியன ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் எதிர்ப்புக்கு காரணமாகின.

ஹைதர் அலிக்கு எதிராக மராத்தியர்கள், ஹைதராபாத் நிசாம், ஆங்கிலேயர்கள் இணைந்து முக்கூட்டணியை ஏற்படுத்தினர்.

**போரின் போக்கு:**

தளபதி ஜோசப் ஸமித் தலைமையிலான ஆங்கிலப் படை உதவியுடன் ஹைதராபாத் நிசாம் 1767 ல் மைசூர் மீது படையெடுத்தார். ஆங்கிலப் படையை ஹைதர் அலி தோற்கடித்து மங்களூரை கைப்பற்றினார். 1769 மார்ச் மாதம் ஹைதர் அலி மதராஸ் மீது படையெடுத்தார். இதனால் ஆங்கிலேயர்கள் 1769 ஏப்ரல் 4ல் அவரிடம் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

**மதராஸ் உடன்படிக்கை (1769):**

போரின் முடிவில் மதராஸ் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன்படி போருக்கு முன்னர் இருந்த பகுதிகளை இருதரப்பினரும் திரும்பப்பெற்றனர். மற்ற நாடு தாக்கும் பட்சத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்வது என உறுதி செய்துகொள்ளப்பட்டது.


**இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர் (1780 – 1784)**

**காரணங்கள்:**

- 1769 ல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றத் தவறினர்.
- 1771ல் மராத்தியர்கள் ஹைதர் அலி மீது படையெடுத்த போது மதராஸ் உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் ஹைதர் அலிக்கு உதவவில்லை.
- ஹைதர் அலியின் ஆட்சிக்குப்பட்ட பிரெஞ்சு குடியேற்ற பகுதியான மாஹியை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். இந்நிகழ்வு ஆங்கிலேயருக்கு எதிராக ஹைதர் அலி, ஹைதராபாத் நிசாம், மராத்தியர்களின் முக்கூட்டணியை உருவாக்கியது.

**போரின் போக்கு:**

1781ல் ஆங்கிலேய படைத் தளபதி சர் அயர்கூட் ஹைதர் அலியை பரங்கிப்பேட்டை (போர்டோ நோவா) என்ற இடத்தில் தோற்கடித்தார். மேலும் மைசூர் படைகள் சோளிங்கர் என்ற பகுதியிலும் தோல்வியை தழுவியது. போரின் போது புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஹைதர் அலி 1782 ல் இறந்தார். அவரின் இறப்புக்குப் பின் அவரது மகன் திப்பு சுல்தான் ஆங்கிலேயருக்கு எதிராக போரினைத் தொடந்தார். 1783 ல் திப்பு ஆங்கிலேய படைத்தளபதியான பிரிகேரியா மேத்யூஸ் மற்றும் அவரது படை வீரர்களையும் கைது செய்தார். இது பின்னாளில் திப்புவுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.




**மங்களூர் உடன்படிக்கை (1784)**

- 1784 மார்ச் 7ல் ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்கும் இடையே இப்வுடன்படிக்கை கையெழுத்தானது. இருபிரிவினரும் போரில் கைப்பற்றிய பகுதிகளை திரும்ப அளிப்பதும், போர்க் கைதிகளை ஒப்படைப்பதும் என உடன்பாடு ஏற்பட்டது.

- இதன் மூலம் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் புதிதாக உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் ஆதிக்கத்தை வலிமை மிக்க எதிரிகளான மராத்தியர்கள் மற்றும் ஹைதர் அலியிடம் இருந்து பாதுகாத்துக் கொண்டார். இச்சமயத்தில் அமெரிக்காவில் தங்கள் குடியேற்றங்களை பிரிட்டன் இழந்தபோதிலும், வாரன் ஹேஸ்டிங்ஸ் எதையும் இந்தியாவில் இழக்கவில்லை. மாறாக இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளை ஒருங்கிணைத்தார்.

**மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் 1790 – 1792)**
**காரணங்கள்:**

- மங்களூர் உடன்படிக்கைக்குபின் ஆங்கிலேயருக்கு எதிராக வெளிநாடுகளுடன் கூட்டணி அமைக்கும் பொருட்டு பிரான்சு, மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு திப்பு சுல்தான் தன்னுடைய தூதுவர்களை அனுப்பினார்.

- ஆங்கிலேய கூட்டணியில் இருந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தை திப்பு சுல்தான் 1789 ல் தாக்கினார்.

- இச்சமயத்தில் திப்பு சுல்தானுக்கு எதிராக ஆங்கிலேயர்கள், ஹைதராபாத் நிசாம் மற்றும் மராத்தியர்களுடன் இணைந்து மூவர் கூட்டணியை உருவாக்கினர்.

**போரின் போக்கு:**

- இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற இப்போரில் திப்பு சுல்தான் தனியாக எதிர்த்து போராடினார். இப்போர் மூன்று கட்டங்களாக நடைபெற்றது. தளபதி மேடோஸ் தலைமையிலான தாக்குதல் தோல்வியில் முடிந்தது. ஆகையால் 1790ல் தலைமை ஆளுநர் காரன்வாலிஸ் தானாகவே படையை வழிநடத்தினார். ஸ்ரீரங்கப்பட்டினத்தை தாக்குவதற்கு தடையாக இருந்த அனைத்து மலைக் கோட்டைகளையும் அவர் கைப்பற்றினார். நம்பிக்கை

இழந்த சுல்தான் ஆங்கிலேயரிடம் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டார். அதனை ஏற்றுக்கொண்ட காரன்வாலிஸ் 1792ல் ஸ்ரீரங்கபட்டிண உடன்படிக்கையை திப்பு சுல்தானுடன் செய்து கொண்டார்.

**ஸ்ரீரங்கபட்டிண உடன்படிக்கை (1792)**

- இவ்வுடன் படிக்கையின்படி, திப்பு தன்னுடைய ஆட்சிப்பகுதியில் பாதி பகுதியை ஆங்கிலேயருக்கு ஒப்படைத்தார்.

- போர் இழப்பீட்டு தொகையாக 3.6 கோடி செலுத்த வேண்டும் என்றும், தன்னுடைய இரண்டு மகன்களை ஆங்கிலேயரிடம் பிணைக் கைதிகளாக ஒப்படைக்க வேண்டும் என திப்பு சுல்தான் கட்டாயப்படுத்தப்பட்டார்.

- இதன் மூலம் ஆங்கிலேயர்கள் மலபார், குடகு மலை, திண்டுக்கல் மற்றும் பாரமஹால் (கோயம்புத்தூர், சேலம்) ஆகிய பகுதிகளைப் பெற்றனர்.

**நான்காம் ஆங்கிலேய – மைசூர் போர் (1799):**

- திப்பு சுல்தான் 1792 ல் ஸ்ரீரங்கப்பட்டிண உடன்படிக்கையின் மூலம் காரன்வாலிஸ் பிரபுவால் அமெரியாதை செய்ததை மறக்கவில்லை.

**காரணங்கள்:**

- திப்பு சுல்தான் ஆங்கியேருக்கு எதிராக இம்முறையும் வெளிநாட்டு கூட்டணிக்காக அரேபியா, துருக்கி, ஆப்கானிஸ்தான் மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளுக்கு தன்னுடைய தூதர்களை அனுப்பினார்.

- அச்சமயத்தில் எகிப்து மீது படையெடுத்த நெப்போலியனுடன் திப்பு தொடர்பு வைத்திருந்தார்.

- பிரெஞ்சு அலுவலர்கள் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு வருகை புரிந்து அவர்கள் ஜாக்கோபியன் கழகத்தை நிறுவினார்கள். மேலும் அங்கு சுதந்திர மரம் ஒன்றும் நட்டப்பட்டது.

**போரின் போக்கு:**

- 1799-ல் வெல்லெஸ்லி பிரபு திப்புவின் மீது போர் தொடுத்தார். இது குறுகிய காலத்தில் நடந்த, கடுமையான போராக இருந்தது. திட்டமிடப்படி மைசூரியின் மேற்கே பம்பாய் இராணுவம் தளபதி ஸ்டூவர்ட் தலைமையில் படையெடுத்தது. இச்சமயத்தில் மெட்ராஸ் இராணுவம் தலைமை ஆளுநரின் சகோதரர் ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையில் திப்பு சுல்தானை தாக்கியது. திப்பு தன்னுடைய தலைநகரம் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு பின் வாங்கினார். 1799 மே 4ஆம் நாள் ஸ்ரீரங்கபட்டினம் கைப்பற்றப்பட்டது. திப்பு சுல்தான் வீரதீரமாக போரிட்டாலும் இறுதியில் கொல்லப்பட்டார். இவ்வாறாக நான்காம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது. மேலும் ஒட்டுமொத்த மைசூரும் ஆங்கிலேயர் முன்பாக சரணடைந்தது.

**போருக்கு பின் மைசூர்**


- கனரா, வயநாடு, கோயமுத்தூர், தாராபுரம் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் இணைத்து கொண்டனர்.

- மீண்டும் இந்து உயர் குடும்பத்தை சேர்ந்த மூன்றாம் கிருஷ்ண ராஜா உடையார் மைசூர் அரியணை ஏறினார்.

- திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டனர்.

**ஆங்கிலேய மராத்திய போர்கள்:**

மூன்றாம் பானிபட் போர் தோல்வியால் ஏற்பட்ட நெருக்கடியை சமாளிக்க மராத்தியர்கள் முயற்சித்தனர். அத்ன விளைவாக பத்தாண்டுகளுக்கு பிறகு தங்கள் மீதான டெல்லி முகலாயர்களின் கட்டுப்பாட்டை மீட்டனர். எனினும் பேஷ்வா கட்டுப்பாட்டில் இருந்த பழைய மராத்தாஸ் கூட்டமைப்பு கிட்டத்தட்ட ஐந்து சுதந்திரமான மாநிலங்களுக்கு வழிவகுத்தது. அவர்கள், புனாவில் பேஷ்வா, பரோடாவில் கெய்க்வாட், நாக்பூரில் போன்ஸ்லே, இந்தூரில் ஹோல்கர், மற்றும் குவாலியரில் சிந்தியா போன்றோர்களாவர். பேஷ்வா அரசாங்கம் உள்நாட்டு போட்டியாளர்களால் பலவீனப்படுத்தப்பட்டது. மற்ற நான்கு தலைவர்கள் ஒருவரையொருவர் அடிக்கடி விரோதமாக எதிர்த்தனர். இருந்தபோதிலும், மராத்தியர்கள் பலம் வாய்ந்த சக்தியாகவே இருந்தனர். மராட்டியர்களுக்கிடையிலிருந்த, இம்மோதல்களை பிரிட்டிஷார் அவர்களது விரிவாக்க கொள்கைக்கு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டனர்.'




**முதல் ஆங்கிலேய மராத்தியப் போர் (1775 – 1782)**

மராத்தியர்களின் பேஷ்வா, நாராயணராவின் இறப்புக்குப் பிறகு அடுத்த பேஷ்வா யார் என்ற உரிமை பிரச்சரனையில் ஆங்கிலேயர்கள் முதன் முதலில் தலையிட வேண்டியிருந்தது. நராயண ராவ் இறந்த பிறகு, ரகுநாத ராவ் (ராகோபா) பேஷ்வா ஆனார். ஆனால் அவரது அதிகாரத்திற்கு எதிராக பூனாவிலிருந்த ஒரு குழு நானா பட்னாவில் தலைமையில் எதிர்ப்பு தெரிவித்தது. அக்குழு நாராயண ராவின் மறைவுக்குப்பின் அவரது மனைவியான கங்கா பாய்க்கு பிறந்த குழந்தையை (இரண்டாம் பாதவ ராவ்) பேஷ்வாவாக அங்கீகரித்தது. மேலும் அவருடைய பெயரில் ஆட்சிக் குழுவொன்றும் அமைத்தது. அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியில் தோல்வியடைந்த ரகுநாத ராவ் பிரிட்டிஷ் உதவியை அணுகினார். இதன்படி, 1775 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் ரகுநாத ராவுக்கும் இடையே சூரத் ஒப்பந்தம்

கையெழுத்தானது. இருப்பினும், கல்கத்தா பிரிட்டிஷ் கவுன்சில் சூரத் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. பூனாவின் பாதுகாப்பரசுடன் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கல்கத்தா பிரிட்டிஷ் கவுன்சில் பூனாவுக்கு கா்னல் அப்டனை அனுப்பியது. அதன்படி, அப்டன் 1776 ஆம் ஆண்டு பூனாவின் பாதுகாப்பரசுடன் புரந்தா் ஒப்பந்தத்தை செய்து கொண்டார். ஆயினும், பம்பாயில் ஆங்கில அரசாங்கத்தின் எதிர்ப்பு காரணமாக இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை.

1781 ஆம் ஆண்டில், வாரன் ஹேஸ்டிங்ஸ் கேப்டன் பாப்ஹாமின் தலைமையின் கீழ் பிரிட்டிஷ் துருப்புக்களை அனுப்பினார். அவர் மராத்தியத் தலைவரான மகாதாஜி சிந்தியாவை பல போர்களில் தோற்கடித்து குவாலியரைக் கைப்பற்றினார். 1782ஆம் ஆண்டு மே 17 ஆம் நாள், வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் மகாதாஜி சிந்தியா இடையே சால்பை ஒப்பந்தம் கையெழுத்தானது.

**விளைவுகள்:**

- போரின் முடிவில் இரண்டாம் மாதவராவ் பெஷ்வாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ரகுநாத ராவுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

- பிரிட்டிஷ் அரசுக்கு சால்செட் பகுதி வழங்கப்பட்டது.

- இந்திய அரசியலில் சால்பை ஒப்பந்தம் பிரிட்டிஷாருக்கு செல்வாக்கை ஏற்படுத்தியது.

- பிரிட்டிஷாருக்கும் மராத்தியர்களுக்கும் இடையே அடுத்த இருபது ஆண்டுகளுக்கு சமாதான உறவு நீடித்தது.

**மராத்தியர்களின் உள்நாட்டு விவகாரம்**

- முதல் மராத்தியப் போரின் முடிவில் மராத்தியர்களின் உள்விவகார பிரச்சனை மேலும் மோசமடைந்தது. நானா பட்னாவிஸின் அதிகார வளர்ச்சியைக்கண்டு மகாதாஜி சிந்தியா பொறாமை கொண்டார். இதன் காரணமாக ஆங்கிலேயரின் ஆதரவை அவர் பெற முற்பட்டார். இளம் பேஷ்வாவான இரண்டாம் மாதவ ராவ் மராத்தியர்களிடையே நல்லுறவை மேம்படுத்த முறன்றார், ஆனால் அவரால் மராத்தியத் தலைவர்களின் ஆதிக்கப் போட்டியை தடுக்க முடியவில்லை. இந்நிலையில், மகாதாஜி சிந்தியா 1794 ல் இறந்தபின் அவருடைய மருமகன் தௌலத் ராவ் சிந்தியா பதவியேற்றார். சிந்தியாவின் மரணம் பூனாவில் நானா பட்னாவிஸின் அதிகாரத்தை இழக்கச் செய்தது. மேலும் ஆங்கிலேயர்கள் தங்களது செல்வாக்கை வடஇந்தியாவில் விரிவுபடுத்த வலிகோலியது. பேஷ்வா இரண்டாம் மாதவ ராவ் 1795 ஆம் ஆண்டுல் தற்கொலை செய்து கொண்ட பிறகு, ரகுநாதராவின் வலிமையற்ற மகனான இரண்டாம் பாஜிராவ் பேஷ்வா ஆனார். இத்தருணத்தில் 1800ல் நானா பாட்னாவில் மரணம் பிரிட்டிஷாருக்கு மேலும் நன்மை அளிப்பதாக இருந்தது.

- ஜஸ்வந்த் ராவ் ஹோல்கர் மற்றும் தௌலத் ராவ் சிந்தியா ஆகியோர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்த சூழ்நிலையில் பேஷ்வா ஹோல்கருக்கு எதிராக சிந்தியாவை ஆதிரிப்பதாகவும், பேஷ்வாவும் சந்தியாவும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாகவும் ஒப்புக் கொண்டனர். இதன் விளைவாக 1802 ல் ஹோல்கர், பேஷ்வாவுக்கு எதிராக படையெடுத்து, சிந்தியா மற்றும் பேஷ்வாவின் கூட்டுப் படைகளை தோற்கடித்தார். முடிவில் பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த வெல்லெஸ்லி பிரபுவை அணுகினார். பேஷ்வாவை வரவேற்ற வெல்லெஸ்லி பிரபு, அவரோடு 1802 பஸ்ஸீன் உடன்படிக்கையை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி துணைப்படை திட்டத்தை பேஷ்வா ஏற்றுக்கொண்டார். மேலுமட் ஆங்கிலேயர்கள் ஆர்தர் வெல்லஸ்லியின் படையெடுத்துச் சென்று மராத்தியத் தலைவர் ஹோல்கரின் படைகளை தாக்கி அழித்தனர்.

**இரண்டாம் ஆங்கிலேய – மராத்தியப் போர் (1803 – 1805)**

- பேஷ்வா துணைபடைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, தௌலத் ராவ் சிந்தியா மற்றும் ரகோஜி போன்ஸ்லே ஆகியோர் மராத்திய சுதந்திரத்தை காப்பாற்ற முயற்சித்தனர். ஆங்கிலேயரின் இராணுவம் ஆர்தர் வெல்லஸ்லியின் தலைமையில், அஸ்ஸே மற்றும் அரகான் பகுதியில் சிந்தியா மற்றும் போன்ஸ்லே ஆகியோரின் கூட்டுப் படைகளை தோற்கடித்து இவ்வெற்றிக்குப்பின் சிந்தியாவுடன் சுர்ஜீ-அர்ஜுகான் ஒப்பந்தத்தையும், போன்ஸ்லேவுடன் தியோகான் ஒப்பந்தத்தையும் 1803ல் ஆங்கிலேயர்கள் செய்துகொண்டனர். ஆனால் போரில் ஈடுபடாத யஸ்வந்த் ராவ் ஹோல்கர் (ஜஸ்வந்த் ராவ் ஹோல்கர் எனவும் அழைக்கப்படுகிறார்) இன்னும் ஆங்கிலேயர்களுக்கு அடிபணியவில்லை. பின்னர் 1804ல் ஜெய்ப்பூர் பிரதேசத்தை ஹோல்கர் சூறையாடும் போது ஆங்கிலேயர்கள் அவருக்கு எதிராக போர்தொடுத்தனர். ஆங்கிலேயருக்கு எதிராக யஷ்வந்த ராவ் ஹோல்கர் இந்திய ஆட்சியாளர்களை இணைத்து ஒரு கூட்டணியை உருவாக்க முயற்சித்தார். ஆனால் அவரது முயற்சி தோல்வியடைந்தது. இறுதியில் மராத்தியர்கள் தோற்கடிக்கப்பட்டு, ஆங்கிலேயர்களுக்கு கப்பம் செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மேலும் மராத்திய தலைவர்கள் ஒருவருக்கொருவர் பிரிக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டனர்.

**விளைவுகள்:**

- இப்போருக்கு பின் மராத்தியர்களின் வலிமை காலப்போக்கில் பலவீனமடைந்தது.

- இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தலையாய சக்தியாக மாறத் தொடங்கியது.

## மூன்றாவது ஆங்கிலேய மராத்தியப் போர் (1817 – 1818)

தங்களது மேலாண்மையை மீண்டும் பெற முயன்ற மராத்தியர்களோடு ஆங்கிலேயர்கள் மூன்றாவதாக ஒரு போரில் ஈடுபட்டனர். இப்போர், இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி மற்றும் மராத்திய சாம்ராஜ்யத்திற்கு இடையே இறுதி மற்றும் தீர்க்கமான மோதமாக அமைந்தது. இப்போர், ஆங்கில படைவீரர்கள் மராத்திய பகுதிகளை ஆக்கிரமிக்கும் போது தொடங்கியது. இந்த ஆக்கிரமிப்பில் தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்கு, ஜெனரல் தாமஸ் ஹிஸ்லாப் தலைமையின் கீழ் ஒரு படைப்பிரிவு உதவியது. பேஷ்வா இரண்டாம் பாஜி ராவின் படைகளை தொடர்ந்து, நாக்பூரின் இரண்டாம் மூதோஜி போன்ஸ்லேவும், இந்தூரின் மூன்றாம் மல்ஹர் ராவ் ஹோல்கரும் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். ஆனால் குவாலியரின் தௌலத் ராவ் சிந்தியா மட்டும் நடுநிலை வகித்தார். காட்கி, கோர்கான் ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் பேஷ்வா தோற்கடிக்கப்பட்டார். பேஷ்வாவின் படைகள் பல இடங்களில் அவர் பிடிபடுவதைத் தடுத்து நிறுத்தின. இதனைத் தொடர்ந்து சித்தாபால்டி போரில் போன்ஸ்லேவும், மகித்பூர் போரில் ஹோல்கரும் ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டனர்.

### விளைவுகள்:

- இப்போரின் முடிவில் மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது மற்றும் பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது.
- பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் பெரும்பாலான பகுதிகள் பம்பாய் மாகாணத்தோடு இணைக்கப்பட்டன.
- தோற்கடிக்கப்பட்ட போன்ஸ்லே மற்றும் ஹோல்கரின், மராத்திய பகுதிகளான நாக்பூர், இந்தூர் ஆகியவை ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டன.
- மராத்தியரின் கடைசி பேஷ்வாவான இரண்டாம் பாஜிராவிற்கு வருடாந்திர ஓய்வூதியம் 8 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

## இந்தியாவில் ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பு:

ஆங்கிலேயரின் இந்திய நிர்வாக அமைப்பு நான்கு முதன்மை நிறுவனங்களாக இயங்கியது. அவை குடிமைப்பணிகள், இராணுவம், காவல், மற்றும் நீதித்துறை ஆகும்.

### குடிமைப்பணிகள்

சிவில் சர்வீஸ் (குடிமைப்பணிகள்) என்ற வார்த்தை முதன் முதலில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியால் பயன்படுத்தப்பட்டது. இது குடிமைப் பணி ஊழியர்களை, இராணுவ அதிகாரிகளிடமிருந்து வேறுபடுத்தி காட்டியது. சட்டங்களை முறையாக செயல்படுத்துதல், வரி வசூலித்தல் ஆகியன குடிமைப் பணியின் முதன்மைப் பணியாக இருந்தது. ஆரம்பத்தில் வியாபார ரீதியாக இருந்த குடிமைப் பணிகள் பின்னர் பொதுப்பணியாக மாறியது. முதலில்

பொதுப்பணியின் நியமனங்கள் அனைத்தும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குநர் அவையின் தனியுரிமையாக இருந்தது. ஆனால், நியமனம் செய்யப்பட்ட பொது பணியாளர்கள் லஞ்சம், ஊழல், சட்ட விரோத வணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டனர். அதனால் தலைமை ஆளுநராக காரன் வாலிசு 1786 ல் பதவியேற்ற போது தனியார் வணிகத்திற்கு எதிராக சட்டங்களை இயற்றினார். கம்பெனி ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தி, உலகின் மிக உயர்ந்த ஊதியம் பெறும் அரசு ஊழியர்களாக அவர்களை மாற்றினார்.

1798ல் இந்திய கவர்னர் ஜெனரலாக பதவியேற்றுக் கொண்ட வெல்லெஸ்லி பிரபு, அரசு ஊழியர்களுக்கு தேவையான பயிற்சியை அறிமுகப்படுத்தினார். இவர் 1800 ல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையில் மொழி, இலக்கியம், அறிவியல் ஆகிய துறையில் பயிற்சி வழங்குவதற்காக ஒரு கல்லூரியை நிறுவினார், அதே வேளையில் கம்பெனியின் இயக்குநர்கள் இதனை ஏற்க மறுத்து, 1806ல் இங்கிலாந்தில் உள்ள ஹெய்லிபரி என்ற இடத்தில் கிழக்கிந்திய கல்லூரியை நிறுவினர்.

போட்டி தேர்வு மூலம் அரசு ஊழியர் நியமனம் என்ற கருத்தை முதன் முதலில் 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் அறிமுகப்படுத்தியது. ஆனால் கம்பெனியின் இயக்குநர் அவையால் நியமனம் செய்யப்படாதவர்கள் போட்டித் தேர்வினை எழுத தகுதியற்றவர்கள் எனப்பட்டது. எனவே இந்த முறையானது, நியமனம் மற்றும் போட்டித் தேர்வு முறை என்றழைக்கப்பட்டது. திறந்த முறையிலான போட்டித் தேர்வு முறையில் கம்பெனி ஊழியர்களை தேர்ந்தெடுப்பது 1853 ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை 1858 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்டது. போட்டித் தேர்வுகளுக்கான அதிகபட்ச வயது 23 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1858 ஆம் ஆண்டு ஹெய்லிபரியில் இருந்த கிழக்கிந்திய கல்லூரி அகற்றப்பட்டது. மேலும் குடிமை பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு குடிமைப்பணியாளர் தேர்வாணையம் வசமானது. 1860 ஆம் ஆண்டு ஒரு ஒழுங்கு முறை ஆணையின் மூலம் தேர்வெழுத அதிகபட்ச வயது 22 ஆக குறைக்கப்பட்டது. மேலும் 1866ல் 21 ஆகவும் 1876 ல் 19 ஆக குறைக்கப்பட்டது.

1861 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்திய ஆட்சிப் பணி சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் சில உயர் நிர்வாக பதவிகள் மற்றும் நீதித்துறை பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்திருந்தது. பின்னர் இப்பதவிகள் இந்திய ஆட்சிப் பணிகளாக மாற்றப்பட்டன. வயது வரம்பு குறைப்பு மற்றும் இலண்டனுக்கு சென்று தேர்வு எழுதுதுல் ஆகிய காரணங்களால் வசதி படைத்த இந்தியர்கள் மட்டுமே ஐ.சி.எஸ் தேர்வை எழுதக் கூடிய சூழ்நிலை நிலவியது. 1869 ல் சுநேந்திரநாத் பானர்ஜி, ரமேஷ் சந்திர தத், மற்றும் பிகாரி லால் குப்தா ஆகிய மூன்று இந்தியர்கள் ஐசிஎஸ் தேர்வில் வெற்றி பெற்றனர்.

| |
|---|
| 1863 ல் ஐசிஎஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் சத்தியேந்திரநாத் தாகூர். இவர் கவிஞர் இரபீந்திரநாத் தாகூரின் மூத்த சகோதரர் ஆவார். |

பின்னர், ஐசிஎஸ் தேர்விற்கான வயது வரம்பை உயர்த்துவும் தேர்வினை இந்தியாவிலேயே நடத்தவும் கம்பெனியிடம் இந்தியர்கள் கோரிக்கை வைத்தனர். இதன்விளைவாக 1892ல் குறைந்தபட்ச வயதினை 21ல் இருந்து 23 ஆக உயர்த்தப்பட்டது. மேலும் 1912ல் அரசு பணியைப்பற்றி ஆராய்வதற்காக

இஸ்லிங்டன் பிரபு என்பவரின் தலைமையில் ஒரு அரச ஆணையம் (ராயல் கமிஷன்) நிறுவப்பட்டது. இதன் உறுப்பினர்களாக இந்தியர்களான கோபால கிருஷ்ண கோகலே, சர் அப்துர் ரஹிம் மற்றும் நான்கு ஆங்கிலேயர்களும் இடம் பெற்றிருந்தனர். 1917 ல் இவ்வாணையம் தனது பரிந்துரையை வெளியிட்டது. அப்பரிந்துரைகள் இந்தியர்களின் கோரிக்கையை ஒரளவிற்கு பூர்த்தி செய்வதாக இருந்தது மட்டுமல்லாமல் குடிமை பணி தேர்வை இந்திய மயமாக்கியது.

1918 ல் இந்திய ஆட்சிப் பணியில் 33 சதவீதம் இந்தியர்கள் தேர்வு செய்ய வேண்டும் என்றும், படிப்படியாக இவற்றை அதிகரிக்கவும் மாண்டேகு மற்றும் செம்ஸ் போர்டு ஆகியோர் பரிந்துரைத்தனர். 1923ல் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு (ராயல் கமிஷன்) அரச ஆணையத்திற்கு லீ பிரபு இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி, இந்திய காடுகள் பணி ஆகிய அனைத்து நியமனங்களும் இந்தியாவுக்கான அரசுச் செயலரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றை உடனடியாக நிறுவுவதற்கும் லீ தலைமையிலான குழு பரிந்துரை செய்தது.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் மத்தியில் கூட்டாட்சி அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும், மாகாணங்களில் மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும் உருவாக வழிவகை செய்தது. அதேபோல் ஒரு சில மாகாணங்கள் ஒன்றிணைந்து மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணையம் உருவாக்கவும் வழிவகை செய்தது. ஆங்கிலேயருக்கு உதவி செய்யவே இந்த குடிமைப்பணி அமைப்பு உருவாக்கப்பட்டாலும், சுதந்திர இந்தியாவின் இந்திய ஆட்சிப் பணி அமைப்பு உருவாவதற்கு இந்த முறை அடித்தளமாக அமைந்தது.

**இராணுவம்:**

இது இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் இரண்டாவது முக்கிய தூணாக விளங்கியது. கிழக்கிந்திய கம்பெனி தன்னுடைய இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்தது. அதற்கு சிப்பாய் இராணுவம் என்று பெயர். இந்த இராணுவ வீரர்களுக்கு, ஐரோப்பிய அதிகாரிகளின் உத்தரவை போர்க்களத்தில் நிறைவேற்ற, ஐரோப்பிய இராணுவத்திற்கு இணையாக பயிற்சி அளிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் ஆரம்ப காலத்தில் வங்காளம், பம்பாய், மதராஸ் ஆகிய மூன்று மாகாணங்களிலும் தனித்தனியாக மூன்று படைப்பிரிவை ஏற்படுத்தியிருந்தனர். இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியினை நிறுவுதிலும், விரிவுபடுத்துவதிலும் இராணுவத்தின் பங்களிப்பு சிறப்பானதாகும். ஆங்கில சிப்பாய்களை விட இந்திய சிப்பாய்களுக்கு குறைந்த சம்பளமும், தினப்படியும் வழங்கப்பட்டது. உதாரணமாக, 1856 ஆம் ஆண்டு மூன்று இந்திய படைவீரர்கள் மாத சம்பளமாக மொத்த ரூபாய் 300 மட்டுமே பெற்றனர். 1857 ஆம் ஆண்டு கம்பெனி இராணுவம் 86 சதவீதம் இந்தியர்களை கொண்டதாக இருந்தது. இருந்த போதிலும் இராணுவ உயர் பதவி அனைத்தும் ஆங்கிலேயர் வசமே இருந்தன. இந்தியர்களுக்கான உயர் பதவி சுபேதார் மட்டுமே ஆகும்.

**ஆங்கில இராணுவத்தின் வலிமை**:

பிளாசிப் போர் 1757 : ஐரோப்பிள காலாட்படை 1950, ஐரோப்பிய பீரங்கி படை – 100, ஆங்கிலேய மாலுமிகள் - 50, இந்திய சிப்பாய்கள் - 2100, வங்காளத்தில், இருந்த ஆங்கில இராணுவம் - 6000.

1857 ல் இந்திய இராணுவத்தில் 3,11,400 வீரர்களில் 2,65,900 வீரர்கள் இந்தியர்களாக இருந்தனர். உயர் பதவி அலுவலர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள் ஆவர்.

**காவல் துறை:**

1765 ல் வங்காளத்தில் திவானி (வரிவசூல்) உரிமையை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி பெற்ற போது "சர்க்கார்" (கிராம மாவட்டங்கள்) என்ற ஆட்சிப் பிரிவுக்கு பொறுப்பு வகித்த பௌஜ்தார் வசம் முகலாய காவல்துறை சென்றது. அப்போது, நகரங்களை நிர்வகிக்கும் காவல் அலுவலர்களாக கொத்வால் இருந்தார். அதேவேளையில் கிராமங்கள் கிராம காவலாளிகளால் பாதுகாக்கப்பட்டது. அவர்களை ஜமீன்தார்கள் சம்பளம் வழங்கி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இந்தியாவில் முதன் முதலில் காவல் துறையை உருவாக்கியவர் காரன் வாலிஸ் பிரபு ஆவார். ஜமீன்தார்களை காவல் பணிகளிலிருந்து விடுவித்த காரன்வாலிஸ் 1791 ல் முறையான காவல் துறையை உருவாக்கினார். அவர் "தரோகா" என்பவரை தலைவராகக் கொண்ட சரகங்கள் அல்லது "தானாக்கள்" என்ற காவல் பகுதிகளை ஏற்படுத்தினார். அவர்கள் கிராமங்களிலும் காவல் பணி செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது. கிராமத்தை பரம்பரையாக நிர்வகித்து வந்த காவலர்கள் "சௌகிதார்கள்" என்றழைக்கப்பட்டனர். பெரு நகரங்களில் பழைய முறையான கொத்வால் காவல் பணியே தொடந்தது. மேலும் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு தரோகா நியமிக்கப்பட்டார். இந்த தரோகா முறை 1802 ல் மதராஸ் மாகாணத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பதவி உருவாக்குவதற்கு முன்னர், அனைத்து தானாக்களும் மாவட்ட நீதிபதியின் பொது மேற்பார்வையில் இருந்தது. அதன் பின் 1808 ல் ஒவ்வொரு தானாவிற்கும் ஒரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். பின்னர் காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. காவல் துறையில் முக்கிய பணியானது ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக சதி செய்வதை தடுத்தலும். குற்றங்களை கையாள்வதும் ஆகும்.

**நீதித்துறை அமைப்பு:**

1772 ல் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு வரிவசூல் செய்வதையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாக சிவில் நீதிமன்றம் என்றழைக்கப்பட்ட திவானி அதாலத் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் என்றழைக்கப்பட்ட பௌஜ்தாரி அதாலத் ஆகியன ஏற்படுத்தப்பட்டன. 1773 ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி கல்கத்தாவில் ஒரு உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்திற்கு ஒரு முதன்மை நீதிபதியும் மூன்று துணை நீதிபதிகளையும் பிரிட்டிஷ் மன்னர் நியமித்தார். இந்நீதிமன்றம் சிவில், குற்றவியல், திருச்சபை, மற்றும் பிரத்தியோக வழக்குகளை விசாரித்தது. கல்கத்தாவில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் மாதிரியில் 1801ல் மதராஸிலும், 1823 ல் பம்பாயிலும் உள்ள நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. 1832 ல் வில்லியம் பெண்டிங் பிரபு ஜூரி முறையை வங்காளத்தில் கொண்டு வந்தார். சட்டங்களை தொகுக்க இந்திய சட்ட ஆணையம் ஒன்றும் அமைக்கப்பட்டது. நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. 1861 ஆம் ஆண்டு இந்திய உயர்நீதி மன்ற சட்டத்தின்படி கல்கத்தா, பம்பாய், மதராஸ் ஆகிய இடங்களில் பழைய

உச்சநீதிமன்றங்களுக்கு பதிலாக மூன்று உயர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

| |
|---|
| வங்காளத்தின், வில்லியம் கோட்டையில் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.<br>மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி சர் திருவாரூர் முத்துசாமி ஆவார். |

**துணைப்படைத் திட்டம் (1798):**

இந்தியாவில் இருந்த சுதேச அரசுகளை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வெல்லெஸ்லி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே துணைப்படைத்திட்டமாகும். இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை விரிவுபடுத்தவும் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் இத்திட்டம் மிகச்சிறந்த கருவியாக பயன்படுத்தப்பட்டது. சுதேச அரசுகள் பாதுகாக்கப்பட்ட அரசுகள் என்றழைக்கப்பட்டது. அவ்வரசுகள் மீது “தலையாய அதிகாரம்“ செலுத்துபவராக ஆங்கிலேயர் இருந்தனர். படையெடுப்புகளிலிருந்து சுதேச அரசுகளை காப்பதும், உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுவதும் ஆங்கிலேயரின் கடமை என்ற நிலை உருவானது.

**துணைப்படைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

- இத்திட்டத்தில் இணையும் இந்திய அரசர் தன்னுடைய படையை கலைத்துவிட்டு ஆங்கிலேயரின் படையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- சுதேச அரசின் தலைமையகத்தில் ஆங்கிலேயரின் பிரதிநிதி ஒருவர் இருப்பார்.
- ஆங்கிலேயரின் படையை பராமரிக்கவும், படை வீரர்களின் ஆண்டுச் சம்பளம் வழங்குவதற்காகவும், நிரந்தரமாக சில பகுதிகளை அந்நாட்டு அரசர் ஆங்கிலேயருக்கு வழங்க வேண்டும்.
- ஆங்கிலேயரைத் தவிர மற்ற ஐரோப்பிய அலுவலர்கள் அனைவரும் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.
- சுதேச நாட்டு அரசர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அனுமதி பெற்ற பின்னரே அயல் நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
- அந்நிய அரசுகளின் தாக்குதல் மற்றும் உள்நாட்டு கலவரம் நடைபெறும்போது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி அந்நாட்டை பாதுகாக்கும்.

**ஆங்கிலேயருக்கு கிடைத்த நன்மைகள்:**

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி, இந்திய சுதேச அரசர்களின் செலவிலேயே தன்னுடைய படையை பராமரித்தது.

- சுதேச அரசர்களிடம் பணியில் இருந்த அனைத்து பிரெஞ்சுக்காரர்களும் நீக்கப்பட்டனர். பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் மீண்டும் எழுச்சி பெறும் அபாயம் முற்றிலும் நீங்கியது.

- கம்பெனி, சுதேச அரசுகளின் வெளியுறவுக் கொள்கையினை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

- வெல்லெஸ்லி பிரபுவின் இந்த இராஜதந்திர முயற்சி ஆங்கிலேயரை இந்தியாவில் தலையாய சக்தியாக மாற்றியது. இவர் "இந்தியாவில் ஆங்கிலேய பேரரசு" என்பதை இந்தியாவின் ஆங்கிலேய பேரரசு" என்று மாற்றினார்.

**சுதேச அரசுகளுக்கு ஏற்பட்ட இழப்புகள்:**

- துணைப்படைத் திட்டம் இந்திய சுதேச அரசர்களை பலவீனமானவர்களாகவும், பொறுப்பற்றவர்களாகவும் மாற்றியது.

- பிரிட்டிஷ் கம்பெனியால் பாதுகாக்கப்பட்ட அரசர்கள் தங்கள் குடிமக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்து, அவர்களை சுரண்டினர்.

| |
|---|
| துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்ட முதல் நாடு ஹைதராபாத் (1798). அதனை தொடர்ந்து ஏற்றுக்கொண்ட இந்தியா அரசுகள் தஞ்சாவூர் (1799) அயோத்தி (1801), பேஷ்வா (1802), போன்ஸ்லே (1803), குவாலியர் (1804), இந்தூர் (1817) ஜெய்பூர், உதய்பூர் மற்றும் ஜோத்பூர் (1818). |

**வாரிசு இழப்புக் கொள்கை (1848)**

டல்ஹௌசி பிரபு இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை உயர்த்துவதில் முதன்மை சிற்பியாக இருந்தார். அவர் ஓர் ஏகாதிப்பத்தியவாதி ஆவார். ஆங்கிலேய பேரரசை விரிவுபடுத்துவதற்காக அவர் வாரிசு இழப்புக் கொள்கை என்ற புதிய கொள்கையை கொண்டு வந்தார். 1848 ஆம் ஆண்டு அவர் அறிவித்த இக்கொள்கையின் படி, சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் அனுமதி இன்றி வாரிசுகளை தத்தெடுக்க நேரிடும் போது, மன்னரின் சொத்துக்கள் தத்தெடுத்த பிள்ளைக்கும், மன்னரின் ஆட்சிப்பகுதி ஆங்கிலேயரின் தலையாய சக்திக்கும் செல்ல நேரிடும் எனப்பட்டது. இக்கொள்கையினை இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர். 1857ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு இக்கொள்கை முக்கிய காரணமாக அமைந்தது.

| |
|---|
| வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி பிரபு இணைத்துக் கொண்ட பகுதிகள்: சதாரா (1848), ஜெய்த்பூர், சம்பல்பூர் (1849), பகத் (1850), உதய்பூர் (1852), ஜான்சி (1853) மற்றும் நாக்பூர் (1854) |

**இந்தியா ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்கள்:**

- மிகப்பெரிய கடல் வலிமை
- நெசவுத் தொழில் வளர்ச்சி

- அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்
- பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமைமிக்க இராஜதந்திரம்.
- இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள்
- இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை

**முடிவுரை:**

பிளாசிப் போர் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு அடித்தளம் அமைத்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகம் மக்களின் நலனில் அக்கறை செலுத்தவில்லை. இது ஏகாதிபத்திய, விரிவாக்க, மற்றும் சுரண்டல் கொள்கையை கொண்டிருந்தது. இக்கம்பெனி துணைப்படைத் திட்டத்தின் மூலமும், வாரிசு இழப்புக் கொள்கை மூலமும் இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகளை ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. இக்கொள்கைகள் 1800 – 01 ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்திற்கும், 1806 ஆம்ஆண்டு வேலூர் கலகத்திற்கும், 1857 ஆம் ஆண்டு பெருபுரட்சிக்கும் இட்டுச் சென்றது.

# அலகு – 3


# கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்

**அறிமுகம்:**

காலனி ஆதிக்கத்திற்கு முன் இந்தியப் பொருளாதாரமானது, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாக இருந்தது. இக்காலத்தில் வேளாண்மை மக்களின் முதல்நிலைத் தொழிலாக இருந்தது. நெசவுத்தொழில், சர்க்கரை தொழில், எண்ணெய் தொழில் இன்னும் பிற தொழில்கள் வேளாண்மையைச் சார்ந்தே நடைபெற்றன. ஆங்கில அரசானது இந்தியாவின் பழமையான வேளாண்மை முறையையும் மற்றும் நிலவருவாய் கொள்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. நிலையான நில வருவாய் திட்டம், மகல்வாரி திட்டம், இரயத்துவாரி திட்டம் என்னும் மூன்று பெரிய நிலவருவாய் மற்றும் நில உரிமை திட்டத்தை ஆங்கில அரசு இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கெதிரான பொருளாதார சுரண்டல் முறை பிற்காலத்தில் அவர்களை ஆங்கிலேயருக்கு எதிராக புரட்சியில் ஈடுபட வைத்தது.

**ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் நிலவருவாய் கொள்கை:**
**நிலையான நிலவரி திட்டம்:**
**காரன்வாலிஸ் பிரபு**

1765 ல் இராபர்ட் கிளைவ் வங்காளம், பீகார் மற்றும் ஒரிசா ஆகிய பகுதிகளில் வரி வசூலிக்கும் உரிமையை பெற்ற பின்பு அங்கு அவர் ஓராண்டு நில வருவாய் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அதன் பிறகு வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநராக பதவியேற்ற பின்பு ஓராண்டு நிலவருவாய் திட்டத்தை ஐந்தாண்டு நில வருவாய் திட்டமாக மாற்றி பின்பு ஓராண்டு திட்டமாக மாற்றினார். ஆனால் காரன்வாலிஸ் பிரபு தலைமை ஆளுநரான பிறகு இத்திட்டத்தை பத்தாண்டு நில வருவாய் திட்டமாக 1793ல் மாற்றினார். இத்திட்டம் நிலையான நிலைவருவாய் திட்டம் என்றழைக்கப்படுகிறது.




இத்திட்டம் வங்காளம், பீகார், ஒரிசா, உத்திர பிரதேசத்தில் வாரணாசி பகுதி மற்றும் வடக்கு கர்நாடகம் ஆகிய பகுதிகளில் கொண்டுவரப்பட்டது.

ஆங்கில இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19மூ நிலப்பரப்பில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த இத்திட்டம் ஜமீன்தாரி, ஜாகீர்தாரி, மல்குஜாரி மற்றும் பிஸ்வேதாரி என்னும் பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

**நிலையான நிலவரி திட்டத்தின் சிறப்பு கூறுகள்:**

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு முறையாக வரி செலுத்தும் வரை ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.
- விவசாயிகளிடமிருந்து வரியை வசூல் செய்யும் அரசின் முகவர்களாக ஜமீன்தார்கள் செயல்பட்டனர்.
- ஜமீன்தார்கள் வணிகக்குழுவிற்கு செலுத்தி வந்த வரி நிலையாக நிர்ணயிக்கப்பட்டு, எந்த சூழ்நிலையிலும் உயர்த்தப்படமாட்டாது. என உறுதியளிக்கப்பட்டது.
- விவசாயிகளிடமிருந்து வசூலித்த $10/11$ பங்கு வரியினை ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு செலுத்தினர்.
- ஜமீன்தார்கள், விவசாயிகளுக்கு பட்டா (எழுதப்பட்ட ஒப்பந்தம்) வழங்கினர். இதன் மூலம் விவசாயிகள் அந்நிலத்தை உழும் காலம் வரை குத்தகைதாரர்களாக கருதப்பட்டனர்.
- அனைத்து நீதித்துறை அதிகாரங்களும் ஜமீன்தாரர்களிடமிருந்து திரும்ப பெறப்பட்டது.
- ஆங்கில அரசுக்கு நிலையான வருவாயை கிடைப்பதை உறுதி செய்தது.

**குறைகள்:**

- ஆங்கிலேய அரசு விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவில்லை.
- விவசாயிகளின் உரிமைகள் மறுக்கப்பட்டதோடு, ஜமீன்தார்களின் பொறுப்பில் விடப்பட்டனர்.

**விவசாயிகள் பெரும்பாலும் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர்.**

- இந்த திட்டத்தினால் ஜமீன்தார்கள் சோம்பேறிகளாகவும், ஆடம்பரப் பிரியர்களாகவும் மாறினர்.
- வங்காளத்தின் பல கிராமப்புறங்களில் ஜமீன்தார்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே பல மோதல்கள் ஏற்பட்டன.

**இரயத்துவாரி முறை:**
**தாமஸ் மன்றோ**

இரயத்துவாரி முறை 1820ல் தாமஸ்மன்றோ மற்றும் கேப்டன் ரீட் என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை மதராஸ், பம்பாய், அசாம் பகுதிகள் மற்றும் கூர்க் ஆகிய இந்திய மாகாணங்களில் கொண்டுவரப்பட்டது. இம்முறையின் மூலம் நிலத்தின் உரிமையானது விவசாயிகளின் வசம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் நிலத்தின் உரிமையாளராயினர். ஆங்கிலேய அரசு நேரடியாகவே விவசாயிகளிடமிருந்து வரிவசூலைப் பெற்றது. தொடக்கத்தில் நிலவருவாயனது விளைச்சலில் பாதி என நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இது தாமஸ் மன்றோ அவர்களால் விளைச்சலில் மூன்றில் ஒரு பங்காக குறைக்கப்பட்டது. இம்முறையில் நில வருவாயானது மண் மற்றும் பயிரின் தன்மையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

பொதுவாக 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலத்தின் மீதான குத்தகை மாற்றியமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் விவசாயிகளின் நிலைமை மிகவும் பாதுகாப்பானதாக இருந்தது. உண்மையில், அரசு விவசாயிகளிடமிருந்து நிலவருவாயை வரியாக அல்லாமல் குத்தகையாகவே பெற்றுக் கொண்டது.

**இயத்துவாரி முறையின் சிறப்பு கூறுகள்:**

- **வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்துகொள்ளப்பட்டது.**
- **நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டது.**
- **அரசு, விளைச்சலில் 45 லிருந்து 50 சதவீதம் வரை வரியாக நிர்ணயம் செய்தது.**

**இரயத்துவாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள்:**

- **பெரும்பாலா பகுதிகளில் நிலவருவாய் மிக அதிகமாக நிர்ணிக்கப்பட்டது. சிறப்பான பருவக் காலங்களில் கூட விவசாயிகள் நிலவரி செலுத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டனர்.**
- **அரசு ஜமீன்தார்களுக்குப் பதிலாக விவசாயிகளை சுரண்டியது.**

**மகல்வாரி முறை:**
**வில்லியம் பெண்டிங் பிரபு**

மகல்வாரி முறை, என்பது ஹோல்ட் மெகன்சி என்பவரது சிந்தனையில் உதித்த, ஜமீன்தாரி முறையின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமே ஆகும். கங்கைச் சமவெளி, வடமேற்கு மாகாணங்கள், மத்திய இந்தியாவின் சில பகுதிகள் மற்றும் பஞ்சாப் போன்ற பகுதிகளில் 1822ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இராபர்ட் மெர்தின்ஸ் பர்ட் என்பவரின் வழிகாட்டுதலின்படி 1833ல் வில்லியம் பெண்டிங் பிரபு இம்முறையில் சில அடிப்படை மாற்றங்களை கொண்டு வந்தார். மகல் அல்லது கிராம விளைச்சலின் அடிப்படையில் இம்முறையில் வருவாய் மதிப்பீடு செய்யப்பட்டது. மகல் பகுதியின் அனைத்து உரிமையாளர்களும் நிலவருவாய் செலுத்துவதற்கு கூட்டு பொறுப்புயவர்களாவர். தொடக்கத்தில், மொத்த விளைச்சலில் மூன்றில் இரண்டு பங்கு நிலவருவாய் அரசின் பங்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் வில்லியம் பெண்டிங் பிரபு மொத்த விளைச்சலில் நிலவருவாய் 50 சதவீதும் எனக் குறைத்தார். இம்முறையில் நிலவருவாயை கிராமம் முழுவதும் வசூல் செய்து அரசுக்கு செலுத்த ஒரு கிராமத் தலைவர் (Lambardar) நியமிக்கப்பட்டிருந்தார். இந்த முறை முதலில் ஆக்ரா, அயோத்தி போன்ற இடங்களில் அமுல்படுத்தப்பட்டது. பின்னர், ஐக்கயி மாகாணங்களின்

பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திலும் அதிகமான வரிச்சுமைகள் அனைத்தும் விவசாயிகள் மீதே விழுந்தது.

**மகல்வாரி முறையின் சிறப்பு கூறுகள்**

- **கிராமத் தலைவர் அரசுக்கும், கிராம மக்களுக்குமிடையே இடைத் தரகராக செயல்பட்டார்.**
- **இத்திட்டம் கிராமவாரியான மதிப்பீடாக இருந்தது. ஒரே நபர் பல கிராமங்களை தன் வசம் வைத்திருந்தார்.**
- **கிராம நிலங்களுக்கு, கிராமத்தை சேர்ந்த சமுதாயத்தினரே உரிமையாளராக இருந்தனர்.**

**மகல்வாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள்:**

- **கிராமத் தலைவர், சலுவைகளை தமது சொந்த விருப்பங்களின் அடிப்படையில் தவறாகப் பயன்படுத்தினார்.**

- **இம்முறையானது விவசாயிகளுக்கு இலாபகரமானதாக இல்லை.**

- **இம்முறையானது ஜமீன்தாரி முறையின் திருத்தியமைக்கப்பட்ட வடிவமாக இருந்தது. மேலும் இது கிராமத்தின் உயர் வகுப்பினருக்கு இலாபகரமானதாக அமைந்தது.**

**விவசாயிகளின் மீது ஆங்கில நிலவருவாய் முறையின் தாக்கங்கள்:**

அனைத்து நிலவரி முறைகளும் பொதுவாக, நிலத்திலிருந்து அதிகபட்ச வருமானம் பெறுவதாகவே இருந்தது. இதனால் நில விற்பனை அதிகரிப்பு மற்றும் விவசாயத் தொழில் அழிவிற்கு வழிவகுத்தது.

விவசாயிகள் அதிக வரிவிதிப்பினால் பாதிக்கப்பட்டனர். அதிக வரிச்சுமை மற்றும் பஞ்சத்தினால் மக்கள் வறுமையாலும், கடன்சுமையாலும் அவதிப்பட்டனர். இதனால் விவசாயிகள் நிலத்தை விலைக்கு வாங்குவோர் மற்றும் வட்டிக்குப் பணம் தருபவர்களை தேடிச் சென்றனர். அவர்கள் விவசாயிகளிடமிருந்த நிலத்தை விலைக்கு வாங்கி பெரும் செல்வந்தர்களாயினர்.

ஜமீன்தார்கள், வட்டிக்காரர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர்களால் ஏழை விவசாயிகள் சுரண்டப்பட்டனர்.

இந்திய கிராமங்களுக்கான நிலைப்புத் தன்மையும் தொடர்ச்சியான நிலையும் அசைக்கப்பட்டன.

ஆங்கிலேய இறக்குமதி பொருட்களால் இந்தியக் குடிசைத் தொழில்கள் மறைந்தன. விவசாயிகள் வருமானத்திற்கு வேறு வழியின்றி தவித்தனர்.

பழமையான பழக்க வழக்கங்கள் மாற்றப்பட்டு புதிய சட்ட அமைப்பு, நீதிமன்ற நடைமுறைகள் வழக்கத்திற்கு வந்தன.

நிலத்தின் உண்மையான உரிமையாளர்களாகவும், உற்பத்தியின் பெரும் பங்குதாரர்களாகவும் இருந்த விவசாயிகளுடைய உழைப்பின் பலனானது, ஆங்கிலேயரின் கொள்கையால், ஒரு குறிப்பிட்ட சலுகையை பெற்ற சமுதாயத்திற்கு மட்டுமே நன்மையளிப்பதாக இருந்தது.

**விவசாயிகளின் புரட்சிகள்:**

இந்தியாவில் ஆங்கில ஆட்சியானது வேளாண்மை முறையில் பல மாற்றங்களை கொண்டு வந்தது. புதிய வேளாண்மை யுக்திகளால் பழைய வேளாண் முறை மறைந்து போனது. ஜமீன்தார்கள் நில உரிமையாளர்களாக மாறினர், எந்தளவிற்கு முடியுமோ அந்தளவிற்கு, விவசாயிகளின் உழைப்பு ஜமீன்தார்களால் சுரண்டப்பட்டது. மேலும் விவசாயிகளின் வாழ்க்கை முறை மிகவும் துயரமானதாக இருந்தது. தாங்கள் எல்லையில்லா அளவில் சுரண்டப்படுவதை உணர்ந்த விவசாயிகள், இந்த சுரண்டலில் இருந்து பாதுகாத்து கொள்ள 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில், ஆங்கிலேயர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் எதிராக பல புரட்சி இயக்கங்களிலும், கலகங்களிலும் ஈடுபட்டனர்.

**சந்தால் கலகம் (1855- 56)**

1855 – 56 ல் விவசாயிகளின் எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் சந்தால் கலகமாகும். பீகாரில் உள்ள ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகிலுள்ள பகுதிகளில் சந்தால் மக்கள் வேளாண்மை செய்து வந்தனர். சந்தால்களின் அறியாமையை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட, நகர்ப்புற நிலக்கிழார்கள் மற்றும் வட்டிக்குப் பணம் தருவோர் சந்தால்களின் நிலங்களை அபகரித்துக் கொள்ள ஆரம்பித்தனர். இது அவர்களிடையே கசப்பான உணர்வை ஏற்படுத்தி 1856ல் ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு இட்டுச் சென்றது. இதனைத் தொடர்ந்து, சந்தால்கள் தங்களை அன்னிய நாட்டு ஆக்கிரமிப்பு சக்திகளிலிருந்து விடுவித்து கொள்வது மட்டுமல்லாமல் தங்களுக்கென்று ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள, சித்து மற்றும் கங்கு என்ற இரண்டு சந்தால் சகோதரர்களின் தலைமையின் கீழ் 10,000 வீரர்கள் ஒன்று கூடினர். இக்கூட்டத்தினரின் புரட்சி ஒரு மாதத்திற்குள் வலிமையான சக்தியினை பெற்றது. ஐரோப்பிய பண்ணையாளர்கள், ஆங்கிலேய அலுவலர்கள், இரயில்வே பொறியாளர்கள், ஜமீன்தார்கள் மற்றும் வட்டிக்குப் பணம் கொடுப்போர் ஆகிய அனைவரும் புரட்சியாளர்களால் தாக்கப்பட்டனர். புரட்சியானது பிப்ரவரி 1856 வரை தொடர்ந்தது. புரட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, கலகமானது கடுமையாக அடக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சந்தால்கள் வசித்த பகுதிகளை சந்தால் பர்கானா என அரசு அறிவித்தது. அதன்படி சந்தால்களின் நிலங்களும், அடையாளமும் அன்னிய ஆக்ரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாக்கப்பட்டன.

**இண்டிகோ கலகம் (அவுரி புரட்சி 1859 – 60)**

வங்காள அவுரி சாகுபடியாளர்களின் வேலை நிறுத்தம் அதிகளவில் பரவி தீவிர விவசாய புரட்சியாக மாறியது. ஐரோப்பிய இண்டிகோ தோட்டக்காரர்கள், விவசாயிகளுக்கு மிகவும் தீமை தரும் வகையில் இண்டிகோவை வளர்ப்பதற்கு குத்தகை விவசாயிகளை கட்டாயப்படுத்தினர். மேலும் குத்தகை விவசாயிகள்,

தாங்கள் விளைவிக்கும் அவுரியை தங்களுக்கு குறைந்த விலைக்கு விற்கும்படியும், குத்தகை முன்பணத்தை பின்னாளில் அவர்களுக்கு பயன்படும் வகையில் முன்கூட்டியே பெற்று கொள்ளும்படியும் வற்புறுத்தப்பட்டனர். மேலும், ஆள் கடத்தல், கொள்ளையடித்தல், கசையடி கொடுத்தல், எரித்தல் போன்ற சம்பவங்களும் நடந்தன.

செப்டம்பர் 1859ல் திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு சரண் பிஸ்வாஸ் ஆகியோரால் நாதியா மாவட்டத்தில் நடைபெற்ற கலகங்கள் ஐரோப்பிய பண்ணையாளர்களின் கடுமையான அடக்குமுறைகளால் கைவிடப்பட்டன. அதன் பின்னர் ஐரோப்பிய தொழிற்சாலைகள் எரிக்கப்பட்டு, கலகமானது வேறு இடங்களுக்கு பரவியது. நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர அரசு 1860 ல் ஒரு அவுரி ஆணையத்தை அமைத்தது. அந்த ஆணையத்தின் பரிந்துரைப்படி 1862 சட்டம் பாகம் ஆறினை (VI) (Part of the Act of 1862) உருவாக்கியது. ஐரோப்பிய பண்ணையாளர்களின் அடக்கு முறைக்கு பயந்து வங்காளத்தின் அவுரி விவசாயிகள் பீகார் மற்றும் உத்திரப் பிரதேசத்தில் குடியேறினர். இந்து தேசபக்தன் என்ற செய்தித்தாள் சாகுபடியாளர்களின் துயரங்களை பலமுறை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. அதேபோல, தீனபந்து மித்ரா என்பவர், வங்காள அவுரி சாகுபடியாளர்களின் துயரங்களை மக்கள் மற்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நீல் தர்பன் (Nil Darpan) என்ற ஒரு நாடகத்தை எழுதினார்.

**பாப்னா கலகம் (1873 – 76)**

பாப்னா விவசாய எழுச்சி என்பது விவசாயிகளால் நடத்தப்பட்ட, ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிரான இயக்கமாகும். இக்கலகம் வங்காளத்தின் பாப்னாவில் உள்ள யூசுப்சாகி பர்கானாவில் கேசப் சந்திரா ராய் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. ஜமீன்தார்கள், விவசாயிகளிடமிருந்து, சட்டத்திற்கு புறம்பான முறையில், வற்புறுத்தி வரி வசூலித்தல், அதிகப்படியான வாரம் (வரி) வசூலித்தல், மற்ற பிற வரிகளையும் வழக்கமாக வசூல் செய்தனர். விவசாயிகள் வாடகை செலுத்தவில்லை என்ற போலி காரணங்களை கூறி அடிக்கடி நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நாளடைவில் ஜமீன்தார்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெருங்கூட்டமாகக் கூடி கிராமங்கள் தோறும் சென்று ஜமீன்தார்களின் அச்சுறுத்தல்களை எடுத்துக்கூறி மற்ற விவசாயிகளும் தங்களுடன் இணையும்படி செய்தனர். போராட்ட செலவினங்களை கட்டுப்படுத்த விவசாயிகளிமிருந்து நிதி திரட்டப்பட்டது. போராட்டம் படிப்படியாக பாப்னா முழுவதும் பரவி, பின்னர் கிழக்கு வங்காளத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் பரவியது. அப்பகுதி எங்கும் விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டன. போராட்டத்தின் முதன்மை நோக்கம் சட்டத்தை எதிர்ப்பதாக இருந்தது.

ஜமீன்தார்கள் விவசாயிகளை கட்டாயப்படுத்திய போது மட்டும் மிகச் சிறிய அளவில் வன்முறை நடைபெற்றது. போராட்டத்தில், ஜமீன்தாரர்களின் வீடுகளை, கொள்ளையடித்ததாக சில நிகழ்வுகளே இருந்தன. நீதிமன்ற ஆணைகளை காவல் நிலையங்கள் செயற்படுத்த முயன்ற போது அதனை எதிர்த்து விவசாயிகள், ஒரு சில தாக்குதல்களை காவல் நிலையங்கள் மீதும் தொடுத்தனர். ஜமீன்தார்களும் ஜமீன்தார்களின் முகவர்களும் மிகவும் அரிதாகவே கொல்லப்பட்டனர் அல்லது காயப்படுத்தப்பட்டனர். போராட்டத்தின் வாயிலாக விவசாயிகள் சட்ட விழிப்புணர்வு மற்றும் அவர்களது சட்ட உரிமைகளை

மேம்படுத்தினர். மக்களை ஒருங்கிணைத்து சங்கங்களை உருவாக்கி அமைதியான முறையில் எதிர்க்கும் ஆற்றலையும், வலிமையையும், விழிப்புணர்வையும் வளர்த்துக் கொண்டனர்.

**தக்காண கலகம் (1875)**

1875 ஆம் ஆண்டு பூனா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஒரு கலத்தில் ஈடுபட்டனர். அது தக்காண கலகம் என்றழைக்கப்பட்டது. அப்பகுதி விவசாயிகள், ஆரம்பத்தில் தொடர்ந்து தங்கள் நிலங்களை அபகரித்துக் கொண்டிருந்த உள்ளூர் வட்டிக்காரர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் புரட்சி செய்தனர். பூனா மாவட்டத்தின் ஒரு கிராமத்தில், ஒரு வட்டிக்காரரின் சொத்துக்களை கைப்பற்றி, அவரை கிராமத்திலிருந்து வெளியேற்றிய பொழுது புரட்சி தொடங்கியது. மேலும் இப்புரட்சி படிப்படியாக 33 கிராமங்களுக்குப் பரவியது. விவசாயிகள் மார்வாரி சகுகாரர்களின் சொத்துகளை கொள்ளையடித்தனர். சகுகாரர்கள், காவலர்களின் உதவியை நாடியபோது போராட்டம் வன்முறையாக மாறியது. இராணுவம் வரவழைக்கப்பட்டு அப்புரட்சி கட்டுப்படுத்தப்பட்டது. இப்புரட்சியின் விளைவாக ”தக்காண விவசாயிகள் மீட்பு சட்டம்” நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் விவசாயிகளின் குறைகள் களையப்பட்டது.

**பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் (1890 – 1900)**

நகர்ப்புற வட்டிக்காரர்களிடம் கடனைப் பெற்று, கடனை திருப்பி செலுத்தத் தவறிய விவசாயிகள், தங்கள் நிலத்தின் மீது வட்டிக்கடைக்காரர்கள் மேற்கொண்ட ஒடுக்கு முறைகளை விரைந்து தடுக்கும் பொருட்டு பஞ்சாப் விவசாயிகள் புரட்சியில் ஈடுபட்டனர். ஆங்கிலேய அரசு இப்பகுதியில் எந்த ஒரு புரட்சி நடைபெறுவதையும் விரும்பவில்லை, ஏனெனில் அப்பகுதியில் இருந்துதான் ஆங்கிலேய இராணுவத்திற்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பஞ்சாப் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 1900ல் ”பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்” நிறைவேற்றப்பட்டு சோதனை முறையில் செயற்படுத்தப்பட்டது. பஞ்சாபில் இச்சட்டம் சிறப்பாக செயல்பட்டதால் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இச்சட்டத்தின் படி, பஞ்சாப் மக்கள் விவசாயிகள், சட்ட அங்கீகாரம் பெற்ற விவசாயிகள், வட்டிக்கடைக்காரர்கள் உட்பட இதர மக்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டனர். முதல் பிரிவு மக்களிடமிருந்து மற்ற இரண்டு பிரிவு மக்களுக்கும் நிலத்தை விற்பது மற்றும் அடமானது வைப்பது மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**சம்பரான் சத்தியாகிரகம் (1917 – 18)**

பீகார் மாநிலத்தில் உள்ள சம்பரான் என்ற இடத்தில் ஐரோப்பிய பண்ணையாளர்கள் சட்டத்திற்குப் புறம்பான மற்றும் மனிதத் தன்மையற்ற முறைகளில், மிகவும் நியாயமற்ற விலைக்கு அவுரி சாகுபடியை செய்தனர். சம்பரான் இந்திய விவசாயிகள் (அவுரி சாகுபடியாளர்கள்) தங்களது மொத்த நிலத்தில் 20ல் 3 பங்கில் மட்டும் அவுரியை சாகுபடி செய்து, அதனையும் ஐரோப்பிய தோட்டக்காரர்களுக்கு அவர்கள் நிர்ணயித்த விலைக்கே விற்க

சம்பரான் தீன்கதியா என்ற நடைமுறையின் கீழ் பிணைக்கப்பட்டிருந்தார்கள். மேலும் அவர்கள் ஐரோப்பிய பண்ணையாளர்களால் சட்டவிரோத பணம் பறிப்பு, மற்றும் அடக்கு முறை போன்ற நிகழ்வுகளுக்கு ஆளாகினர். இந்த

விவசாயிகளின் பிரச்சினையை அறிந்து கொண்ட மகாத்மா காந்தி அவர்களுக்கு உதவ முன்வந்தார். அரசு ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, மகாத்மா காந்தியை அக்குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொண்டது. விவசாயிகளின் குறைகள் விசாரிக்கப்பட்டு இறுதியில், மே, 1918ல் ”சம்பரான் விவசாயச் சட்டம்” நிறைவேற்றப்பட்டது.

**கோடா (கைரா) சத்தியாகிரகம் (1918)**

1918ல் குஜராத்தின் கேடா மாவட்டத்தில், இடையராத பஞ்சத்தின் காரணமாக விவசாயம் பொய்த்தது. ஆனால் நிலவரி முழுவதையும் செலுத்த விவசாயிகளை அரசு அறிவுறுத்தியது.

இதன் விளைவாக கேடா மாவட்டத்தில் உள்ளூர் விவசாயிகள் வரிகொடா இயக்கத்தை தொடங்கினர். அவ்வியக்கத்திற்கு காந்தியடிகள் தலைமை ஏற்றார்.

பஞ்சத்தின் நிலைகளை அரசுக்கு எடுத்துக்கூறி முழு பலத்துடன் சத்தியாகிரக முறையில் போராடும்படி காந்திஜி விவசாயிகளை ஆயத்தப்படுத்தினார். மேலும், விவசாயிகள் அச்சமின்றி எல்லா எதிர்ப்புகளையும் சந்திக்க ஊக்கமளித்தார். அவரது அழைப்புக்கு, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு விவசாயிகளின் ஆதரவு இருந்தது. மற்றும் அரசாங்கம் விவசாயிகளுடன் ஒரு தீர்வுக்கு வரவேண்டியிருந்தது. இக்காலக் கட்டத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு முக்கியமான தலைவராக உருவானார்.

**மாப்ளா கிளர்ச்சி (1921)**

மாப்ளா என்று அழைக்கப்பட்ட முஸ்லீம் விவசாயிகள் (கேரளா), இந்து ஜமீன்தார்கள் (ஜென்மிஸ்) மற்றும் ஆங்கில அரசால் அடக்கப்பட்டு சுரண்டப்பட்டனர். இதுவே இப்புரட்சிக்கு முதன்மை காரணமாக இருந்தது.

ஏப்ரல் 1920ல் நடைபெற்ற மலபார் மாவட்ட மாநாட்டின் மூலம் மாப்ளா விவசாயிகள் உத்வேகம் அடைந்தனர். அம்மாநாடு குத்தகைதாரர்களுக்கு ஆதரவளித்து, நிலக்கிழார் - குத்தகைதாரர் இடையில் உள்ள உறவினை ஒழுங்குப்படுத்த சட்டம் இயற்ற கோரியது. ஆகஸ்ட் 1921ல் மாப்ளா விவசாயிகள், ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சியின் ஆரம்பத்தில் மாப்ளா விவசாயிகள் காவல் நிலையங்கள், பொது அலுவலகங்கள், செய்தி தொடர்பு சாதனங்கள், அடக்கு முறையில் ஈடுபட்ட நிலக்கிழாரின் வீடுகள், வட்டிக்கடைக்காரர்கள் உட்பட அனைவரையும் தாக்கினர். ஆனால் 1921 டிசம்பர் வாக்கில் அரசு இரக்கமின்றி மாப்ளா கிளர்ச்சியை அடக்கியது. அரசின் அதிகாரப்பூர்வ மதிப்பீட்டின்படி, அரசு தலையீட்டின் விளைவாக 2337 மாப்ளா கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். 1650 பேர் காயமடைந்தனர் மற்றும் 45,000 க்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

**பர்தோலி சத்தியாகிரகம் (1929 – 30):**

1928 ல் 30 சதவீதம் அளவிற்கு அரசு நிலவருவாயை உயர்த்தியது. அதனால், பர்தோலி (குஜராத்) விவசாயிகள் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர். மேலும் விவசாயிகள்,

உயர்த்தப்பட்ட நிலவரியை செலுத்த மறுப்பு தெரிவித்து பிப்ரவரி 12, 1928 ல் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினர். இதில் பல பெண்களும் கலந்து கொண்டனர்.

1930 ல் பர்தோலியில் வரி செலுத்த மறுப்பு தெரிவித்த விவசாயிகள் தங்கள் நிலங்களை குறைந்த ஏலத்தில் விற்று இழப்பதற்கு தயாராக இருந்தாலும், நிலத்தை அரசுக்குத் தர மறுத்துவிட்டனர். ஆனாலும் அரசு அவர்கள் நிலத்தை கையகப்படுத்தி செய்து ஏலத்தில் விற்றது. இருப்பினும், 1937ல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபொழுது விவசாயிகளின் நிலம் அனைத்தும் அவர்களுக்கே திருப்பி தரப்பட்டது.

# 9TH வரலாறு
## பாடம் 10
## தொழில் புரட்சி

**அறிமுகம்:**

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உற்பத்தி முறையில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றம் மனிதகுல வரலாற்றையே மாற்றி அமைத்தது. இப்பரந்த மாறுதல் தொழிற்புரட்சிக் காலம் என்று அழைக்கப்படுகிறது. பொருட்கள் கைகளால் உற்பத்தி செய்யப்பட்ட நிலைமாறி, இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் பொருட்களின் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது. இது பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தியதோடல்லாமல், சமூகத்திலும் அரசியலிலும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியது. அதுவரை வேளாண்மை கைத்தொழில்கள் ஆகியவை சார்ந்து இயங்கிய பொருளாதாரம் தொழிற்புரட்சியைத் தொடர்ந்து தொழிற்சாலைகள் மற்றும் இயந்திர உற்பத்தியின் ஆதிக்கத்துக்கு உள்ளானது. தொழிற்புரட்சி முதன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கியது பின்னர் உலகம் முழுவதும் பரவியது. “தொழிற்புரட்சி“ என்ற சொல் முதலில் பிரெஞ்சு எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டதென்றாலும், இங்கிலாந்தின் பொருளாதாரத்தில் 1760 முதல் 1840 வரை ஏற்பட்ட வளர்ச்சியை குறிக்க ஆங்கிலப் பொருளாதார வரலாற்றாளர்கள் இதே சொல்லைப் பயன்படுத்தியபோது அது மிகவும் பிரபலமடைந்தது.

**தொழிற்புரட்சியின் பண்புகள்:**

- புதிய அடிப்படை மூலப்பொருட்களின் பயன்பாடு: இரும்பு, எ்.கு.
- புதிய எரிபொருள் மூலங்களின் பயன்பாடு, நிலக்கரி, மின்சாரம், பெட்ரோலியம்.
- இயந்திர நூற்புக் கருவி (Spinning Jenny) விசைத்தறி போன்ற புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்புகள், மனித ஆற்றலைக் குறைந்த அளவு பயன்படுத்தி உற்பத்தி அளவை அதிகரிக்க உதவின.
- தொழிற்சாலை முறை எனப்படும் புதிய அமைப்பின் உருவாக்கமானது வேலைப்பங்கீடு, சிறப்பு கவனத்துடனான தனித்திறன் வளர்ச்சி போன்றவற்றிற்கு வழிவகுத்தது.
- போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வளர்ச்சி
- அறிவியலை அதிக அளவில் தொழில்துறைக்குப் பயன்படுத்துதல்
- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

**தொடக்கம்:**

இங்கிலாந்தில் நிலவிய சில குறிப்பிட்ட புறக்காரணிகளே அங்குத் தொழிற்புரட்சி முதன் முதலில் உருவாக வகை செய்தன.

**அவையாவன:**

- இங்கிலாந்திற்கு ஏராளமான வளங்களும் காலனி நாடுகளும் இருந்தன. "இந்தியா அதன் மணிமகுடத்தில் ஓர் ஒளிவீசும் ரத்தினமாய் ஜொலித்தது".
- காலனி நாடுகளிலிருந்து நிலக்கரி, இரும்பு, பருத்தி ஆகிய மூலப்பொருள்கள் கிடைத்தன.
- நெதர்லாந்திலிருந்து இங்கிலாந்திற்குக் குடியேறியிருந்த கைவினைஞர்கள், நெசவு உற்பத்திக்குத் தேவையான உள்கட்டுமானத்தை ஏற்கெனவே உருவாக்கியிருந்தனர்.
- இங்கிலாந்து வளர்ச்சியடைந்த வங்கி முறையுடன், வளர்ந்துவந்த தொழில் முனைவோர் வகுப்பினர், வசதி படைத்த முதலீட்டாளர்கள் ஆகியோரையும் கொண்டிருந்தது.
- இங்கிலாந்தின் அரசவம்சம் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அதிக ஊக்கமளித்தது.
- இங்கிலாந்தில் அக்காலகட்டத்தில் நிலவிய நிலையான அரசியல்தன்மை தொழில் வளர்ச்சியில் முழுக் கவனம் செலுத்த உதவியது.

**நீராவி ஆற்றல் கண்டுபிடிப்பு:**

18ஆம் நூற்றாண்டில் சுரங்கங்களில் அதிகரித்த நீர்க்கசிவு, இங்கிலாந்தின் சுரங்க முதலாளிகளுக்கு பெரும் இடையூறாக இருந்தது. நிலக்கரியை வெட்டியெடுக்க நீரை வெளியேற்ற வேண்டியதாக இருந்தது. இதற்கென அவர்கள் கூடுதல் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தினர். இதனால் ஏராளமான பணம் செலவாகியது. இக்காலகட்டத்தில்தான் தாமஸ் நியூகோமன் என்ற பிரிட்டிஷ் பொறியாளர் நீராவி, நிலக்கரி ஆகியனவற்றைப் பயன்படுத்தி சுரங்கங்களிலிருந்து நீரை வெளியேற்ற உதவும் புதுவகையான நீரேற்று இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்தார். ஆனால், அவர் உருவாக்கிய இயந்திரம் அதிக எரிபொருளை விரயமாக்கியது. இந்நிலையில் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த பொறியாளர் ஜேம்ஸ் வாட் நிலையாகப் பொருத்தப்பட்ட நீராவி இயந்திரத்தினைச் சுழலும் நீராவி இயந்திரமாக மாற்றியமைத்தார். இது குறைவான எரிபொருளைப் பயன்படுத்தியது.

**நெசவுத்தொழில் வளர்ச்சி:**

தொழிற்புரட்சிக்கு முன்பு, நூல் நூற்பது, துணி நெய்வது ஆகியவை சொந்தப் பயன்பாட்டிற்கும் உள்ளூர் பயன்பாட்டிற்கும் மேற்கொள்ளப்பட்டன. வீட்டில் அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்ட சிறிய இடத்தில் இவை நடத்தப்பட்டன.

உற்பத்தி ஒரு குடிசைத்தொழிலாக நடந்தது. ஒரு கைத்தறி நெசவாளிக்குத் தேவைப்படும் நூலை நூற்க, நான்கு முதல் எட்டுத் தொழிலாளர்கள் நூற்புச் சக்கரத்தினைத் தம் கைகளால் இயக்க வேண்டியதாக இருந்தது. 1733 இல் ஜான் கே கண்டுபிடித்த கைகளால் இயக்கப்படும் 'Flying shuttle' எனப்படும் பறக்கும் நாடா நூற்பின் வேகத்தை அதிகரித்தது. 1764 இல் ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் இயந்திர நூற்புக் கருவியைக் கண்டுபிடித்தார். இது ஒரே சமயத்தில் எட்டு நூல்களை ஒன்றாகப் பின்னி நூற்றது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு ரிச்சர்ட் ஆர்க்ரைட் "நீர்ச்சட்டகத்தைக் (Water frame) கண்டுபிடித்தார். இந்த நூற்புச் சட்டகம் மனித ஆற்றலுக்கு மாற்றாக நீர் ஆற்றலைப் பயன்படுத்துவதாகும். இது வீட்டில் வைத்து இயக்க முடியாத அளவுக்கு அளவில் பெரியதாக இருந்தது. இவ்வாறாக, தொழிற்சாலை பிறந்தது. 1779 இல் சாமுவேல் கிராம்ப்டன் இயந்திர நூற்புக்கருவியையும் நீர்ச்சட்டகத்தையும் இணைத்துச் "ஸ்பின்னிங் மியூல்" என்ற நூற்பு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இது ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான நூல்களை நூற்று, எட்டு மெல்லிய மற்றும் கனமான நூல்களை நூற்றது. 1793 இல் எலி விட்னி என்பவர் பருத்தியிலிருந்து கொட்டையைத் தனியாகப் பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் எனப்படும் பருத்திக் கொட்டையை நீக்கும் கருவியைக் கண்டுபிடித்தார்.

நெசவுத் தொழில் உற்பத்தி தொழிற்புரட்சியின் இதயமாகத் திகழ்ந்தது. பிரிட்டன் ஐம்பதே ஆண்டுகளில் கைத்தறித் துணி உற்பத்தியிலிருந்து இயந்திர உற்பத்திக்கு முழுமையாக மாறியது. புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்பால் ஆலைகளின் துணி உற்பத்தி மிக அதிக அளவில் பெருகியது. டெர்பிஷையர், லங்காஷையர், செஷையர், ஸ்டா.ஃ.போர்டுஷையர், நாட்டிங்காம்ஷையர், யார்க்கைஷயர் ஆகியவை முக்கியத் தொழில் மையங்களாக மாறின. இதில் மிக முக்கியமானது மான்செஸ்டர். அங்கு 1802 ஆண்டில் 50 க்கும் மேற்பட்ட ஜவுளி ஆலைகள் இருந்தன. பெருமளவு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த தொழிற்கூடங்கள் வேலைப் பங்கீட்டுக் கோட்பாட்டின்படி அமைக்கப்பட்டிருந்தன.

**இரும்பு எ.ஃ.கு:**

இரும்பினைத் தகடுகளாகவும் பாளங்களாகவும் மாற்றுவதற்கான தொழிற்சாலையாக "ரோலிங் மில்" உருவானது. இரும்பைச் சுத்தியலால் அடித்துத் தகடாக்கும் முறையை விட இவ்வாலைகள் பதினைந்து மடங்கு வேகமாக இரும்பினைத் தகடாக மாற்றின. வெப்பம் மிகுந்த ஊதுலைகள் இரும்பு உற்பத்தியில் எரிபொருளின் திறனை அதிகரித்தன. 1856 இல் ஹென்றி பெஸ்ஸிமர் எ.ஃ.கு தயாரிக்க ஒரு விரைவான, சிக்கனமான முறையைக் கண்டுபிடித்தார். காலப்போக்கில் இரும்பு, எ.ஃ.கு ஆகிய இரண்டும் அனைத்துத் தொழில்களிலும். அனைத்து இயந்திரங்கள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டன.

**சுரங்கத் தொழில்:**

ஜேம்ஸ் வாட் மேம்படுத்திய நீராவி இயந்திரம் மட்டுமல்லாமல் ஆர்க்ரைட் வரவாலும் ஆலை உற்பத்தி முறையாலும் நிலக்கரிக்கான தேவை அதிகரித்துக் கொண்டே இருந்தது. இதன் விளைவாக நிலக்கரிச் சுரங்கங்கள் மேலும் மேலும் அழமாகத் தோண்டப்பட்டு, அபாயகரமான நிலைக்கு உள்ளாயின. சுரங்கங்களின் உள்ளே பணியாற்றும் போது தொழிலாளர்கள் எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தியதால் வெடிவிபத்துகள் ஏற்படும் வாய்ப்பு அதிகரித்து உயிரிழப்புகளுக்கு அவை இட்டுச்சென்றன. 1815 இல் சர் ஹம்ப்ரி டேவி எனும்

கண்டுபிடிப்பாளரால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு விளக்கினால் இந்த அபாயம் குறைந்தது.

| |
|---|
| இங்கிலாந்தில் 1750 இல் 4.7 மில்லியன் டன்களாக இருந்த நிலக்கரி உற்பத்தி 1900 இல் 250 மில்லியன் டன்களாக அதிகரித்தது. |

**போக்குவரத்தும் தொலைத்தெடர்பும்:**

போக்குவரத்து வசதி எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது என்பதைச் சார்ந்தே தொழிற்புரட்சியின் பரவலாக்கம் அமைந்தது. உற்பத்தி அதிகரிப்பினால் மூலப்பொருள்களை வெகுதொலைவிலிருந்தும் கொண்டுவரவேண்டியதாயிற்று. பொருள்கள் உற்பத்தியான பின்னர் அவற்றைச் சந்தைகளுக்குக் கொண்டுசெல்ல வேண்டியிருந்தது. எனவே புதிய கால்வாய்கள், சாலைகள், இருப்புப்பாதைகள் உருவாக்கப்பட்டன. மென்ஆடமைஸ்டு சாலை முறையும், ஜார்ஜ் ஸ்டீபன்சன்னின் நீராவி இயந்திர ரயில்களும் இங்கிலாந்து நாட்டில் சாலை, ரயில்போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தின.

ஜான் லவுடன் மெக்ஆடம் என்பவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த முன்னோடிப் பொறியாளர் ஆவார். இவரால் வடிவமைக்கப்பட்ட சாலை அமைக்கும் முறை உலகம் முழுவதும் சாலைகள் அமைக்கும் முறையை மாற்றியது.

இருப்புப்பாதைகள் கி.மு. (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் கோரினத்தில் அமைக்கப்பட்டன. அவை மனிதர்களாலும் விலங்குகளாலும் இயக்கப்பட்டன. ஜெர்மனியில் குதிரைகளால் இழுக்கப்பட்ட ரயில் போக்குவரத்து இருந்துள்ளது. நவீன ரயில் போக்குவரத்து 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் நீராவி என்ஜின்கள் வளர்ச்சி பெற்றதோடு தொடங்கிற்று.

முதல் ரயில்பாதை 1825 இல் இங்கிலாந்து நாட்டில் ஸ்டாக்டன், டார்லிங்டன் ஆகிய நகரங்களுக்கு இடையே அமைக்கப்பட்டது. அடுத்த நாற்பதாண்டுகளில் 15,000 மைல் தூரம் இருப்புப்பாதைகளால் இணைக்கப்பட்டன. அமெரிக்காவின் ராபர்ட் ஃபுல்டன் என்பவர் 1807 இல் கிளர்மோண்ட் என்ற நீராவிப் படகினைக் கண்டுபிடித்தார். இது நியூயார்க், ஆல்பனி ஆகிய நகரங்களுக்கு இடையே 150 மைல் தொலைவுக்கு இயக்கப்பட்டது. சில ஆண்டுகளில் ஆறுகளிலும் கடலோரங்களிலும் சரக்குகளை எடுத்துச்செல்ல நீராவிப் படகுகள் பயன்படுத்தப்பட்டன. 1830 ஆம் ஆண்டில் மான்செஸ்டர், லிவர்பூல் ஆகிய நகரங்களுக்கு இடையிலான 40 மைல் தூரம் ஒன்றரை மணிநேரத்தில் கடக்கமுடிந்தது.

**இங்கிலாந்தில் தொழில் புரட்சியால் ஏற்பட்ட விளைவுகள்:**

இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி வணிக விரிவாக்கம், உணவு உற்பத்தி அதிகரிப்பு, ஆலைத் தொழிலாளர்கள் எனும் ஒரு புதிய வர்க்கம் உருவாதல், நகரமயமாக்கம் ஆகிய வளர்ச்சிப் போக்குகளுக்கு இட்டுச் சென்றது. இதனால் ஏற்பட்ட புதிய நகரங்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சி, அமைப்பாகத் திரண்ட தொழிலாளர் இயக்கம், தொழிலாளர்களுக்கு வாக்குரிமை கோருதல், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பணி

நிலைமைகளை முறைப்படுத்தக் கோருதல் ஆகிய சமூகநிலைகள் அரசியலில் ஒரு புதிய சக்தியை உருவாக்கின.

**சுற்றுச்சூழல், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் ஏற்பட்ட தாக்கம்**

காற்று, நீர், விறகு ஆகியனவற்றுக்கு மாற்றாக வேதியியல் மற்றும் புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்தியமை, காற்று மற்றும் நீர் மாசு அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. இப்புவியின் சூழலியல், இயற்கைச் சுற்றுச்சூழலுக்கும் மனிதர்களுக்குமான உறவு ஆகிய இரண்டிலும் தொழிற்புரட்சி ஒரு மாபெரும் திருப்பு முனையாக அமைந்தது.

குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் வேலைவாய்ப்புகள் பெறத் தொழிற்புரட்சி உதவியது. எனினும், உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை துயரம்மிக்கதாக இருந்தது. குழந்தைகளுக்குக் குறைந்த கூலி கொடுத்தால் போதும் என்பதால் ஜவுளி ஆலைகளில் குழந்தைகள் அதிகமாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். நிலக்கரிச் சுரங்கத்தொழில் நிலைமை குறித்து 1842 இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஓர் அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கை சுரங்கங்கள் அறிக்கை என அழைக்கப்படுகிறது.

தொடக்கக் காலத்தில் சுரங்கங்களிலும் ஆலைகளிலும் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக மோசமாக இருந்தன. இயந்திரங்களால் ஏற்படும் காயங்கள், சிறு தீப்புண்கள், கை – கால்களில் காயம், விரல்கள் துண்டாவது, கை அல்லது கால் முழுமையாக அகற்றப்படுவது, மரணம் கூட நிகழ்வது என்று பல்வேறு விதமாக ஏற்பட்டன.

தொழிலாளர்கள் மிகவும் சிறிய, அழுக்கடைந்த, சுகாதாரமற்ற வீடுகளில் வாழ்ந்தனர். தொழிலாளர்கள் விரும்பினாலும் கூடத் தமது சுற்றுப்புறத்தைச் சுத்தப்படுத்தவோ மாற்றவோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. இதனால் டைஃபாய்டு, காலரா, பெரியம்மை போன்ற நோய்கள் பரவின.

**நகரமயமாக்கம்:**

தொழிற்புரட்சியின் வருகையைத் தொடர்ந்து, உலகின் தொழிற்பட்டறையாக இங்கிலாந்து மாறியது. வேளாண்மை உற்பத்தியில் பொதுவான வீழ்ச்சி காணப்பட்டது. இதனால் மக்கள் கிராமங்களிலிருந்து தொழில் நகரங்களை நோக்கிச் செல்லத் தொடங்கினர். மக்கள்தொகை அதிகரிப்பு, இடப்பெயர்ச்சி, நகரமயமாக்கம் ஆகியன தொழிற்புரட்சி எற்பட்ட இக்காலகட்டத்தின் முக்கியச் சமூக மாற்றங்கள் ஆகும். தொழிற்புரட்சிக்கு முந்தைய சமூகத்தில் 80 விழுக்காட்டுக்கும் அதிகமான மக்கள் கிராமப்புறங்களில்தான் வசித்தனர். கிராமப்பகுதிகளிலிருந்து இடப்பெயர்வு அதிகரிக்க, அதிகரிக்க, சிறிய நகரங்கள் பெருநகரங்களாயின. 1840 இல் இருபது இலட்சமாக இருந்த லண்டனின் மக்கள்தொகை நாற்பதாண்டுகளில் ஐம்பது இலட்சமாக உயர்ந்தது.

மான்செஸ்டர் நகரில் நிலவிய குளிர்ச்சியான காலநிலை ஜவுளி உற்பத்திக்கு உகந்த சூழ்நிலையை அளித்தது. மேலும் லிவர்பூல் துறைமுகம், லங்காஷையர் நிலக்கரிச் சுரங்கம் ஆகியனவற்றுக்கு அருகிலும் அது அமைந்து இருந்தது. இதனால் உலகின் ஜவுளி உற்பத்தித் தொழிலின் தலைநகரமாக மான்செஸ்டர் மாறியது. இது ஏராளமான மக்களை மான்செஸ்டர் நகரை நோக்கி ஈர்த்தது. 1771 இல் 22,000 மக்கள் மட்டுமே வசித்த மந்தமான நகரமாகத்தான்

மான்செஸ்டர் இருந்தது. இதே நகரம் அடுத்த ஐம்பதாண்டுகளில் 1,80,000 மக்கள்தொகை கொண்டதாக வளர்ந்தது.

**சமூக – பொருளாதாரப் பின்விளைவுகள்:**

விவசாயிகள் வறுமையிலும் தொழிலாளர்கள் துன்பத்திலும் ஆட்பட்டுக்கொண்டிருக்க, நடுத்தரவர்க்கம் தொழிலிலும் வர்த்தகத்திலும் மேலும் முதலீடு செய்து செல்வமிக்க வகுப்பாக வளர்ந்தது. இவ்வகுப்பினர் அக்கால அரசுகள் மீது ஆதிக்கம் செலுத்தினர். அனைத்துச் சட்டங்களும் அந்த வகுப்பாரின் நலன்களையே பாதுகாத்தன. தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைக்க அனுமதி இல்லை. இந்தச் சூழலில்தான் ஐரோப்பாவில் ஒருபுதிய தத்துவமாக சோஷலிசம் பிறப்பெடுத்தது. முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டல் கொள்கைகளிலிருந்து உழைக்கும் வர்க்கத்தைப் பாதுகாப்பதற்காக, கார்ல் மார்க்ஸ் அறிவியல்பூர்வப் பொதுவுடைமை (சோஷலிசம்) எனும் கோட்பாட்டினை முன்வைத்தார். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கு ஐரோப்பா முழுவதும் பொருளாதார, அரசியல் உரிமைகள் கோரி, வலுவான உழைக்கும் வர்க்க இயக்கங்கள் எழுந்தன.

**தொழிலாளர் இயக்கம்:**

1832 இல் சீர்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. சொந்தமாகச் சொத்து வைத்திருந்த நடுத்தர வர்க்கத்திற்கு மட்டுமே அச்சட்டம் வாக்குரிமை அளித்தது. இதனால் விரக்தியுற்ற உழைக்கும் வர்க்கம் லட்சக்கணக்கில் ஓரிடத்தில் கூடித் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய ஒரு சாசனத்தை உருவாக்கி பல லட்சம் சக தொழிலாளர்களின் கையொப்பம் பெற்றது. இந்த சாசனம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் கீழவையான மக்கள் அவையில் (House of Commons) தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ள கோரிக்கைகளைத் தொழிலாளர் இயக்கம் வலியுறுத்தியதால் அது “சாசன இயக்கம்“ (Chartism) எனவும். அதில் ஈடுபட்டவர்கள் சாசன இயக்கவாதிகள் எனவும் அழைக்கப்பட்டனர். இந்த இயக்கம் 1836 முதல் 1848 வரை உயிர்ப்போடு இயங்கியது. இருபத்தியோரு வயதான அனைவருக்கும் வாக்குரிமை, ரகசிய வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத் தேர்தல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தகுதியில் சொத்துரிமையை நீக்குதல், ஆண்டுதோறும் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல், சமமான பிரதிநிதித்துவம் ஆகிய கோரிக்கைகளை இவ்வியக்கத்தினர் வலியுறுத்தினர்.

**தொழிற்புரட்சி பரவுதல்**
**பிரான்ஸ் நாட்டில் தொழிற்புரட்சி:**

இங்கிலாந்து பெற்றிருந்ததைப் போன்று பிரான்ஸ் இயற்கைவளங்களைப் பெற்றிருக்கவில்லை. பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியன் மேற்கொண்ட நீண்டகாலப் போர்கள் ஆகியனவற்றின் விளைவாக ஏற்பட்ட அரசியல் நிலையற்ற தன்மை நாட்டைச் சீரழித்திருந்தது. புரட்சியின் போது பிரான்ஸ் நாட்டின் வணிகர்கள் பலரும் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்திருந்தனர். அவர்கள் நெப்போலியப் போர்கள் முடிவுக்கு வந்த பின்னர் பிரான்ஸ் திரும்பியபோது பிரிட்டிஷ் தொழில் நுட்பங்களையும் கொண்டுவந்து பயன்படுத்தினர். இது அவர்களது நாட்டில் தொழிற்புரட்சியை நிறைவேற்ற உதவியது. பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட நூற்புக்கதிர்களைப் பயன்படுத்தியதால்,

1830 – 1860 காலகட்டத்தில் பிரான்சின் ஜவுளி உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்தது.

பிரான்கோஸ் டி வெண்டல் என்பவர் பிரிட்டிஷ் தொழில்நுட்பத்தை லொரைனுக்குக் கொண்டு வந்தார். அவரது குடும்பம் நிலக்கரிச் சுரங்கத்தில் நீராவி இயந்திரத்தையும், இரும்பைப் பிரித்தெடுப்பதில் துழாவும் உலையையும் பிரான்சில் அறிமுகம் செய்தது. 1860 இல் வெண்டல் குடும்பத்திடம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர். வணிகத்தைப் பலதுறைகளுக்கு விரிவாக்கம் செய்ததன் மூலம் இருப்புப்பாதை அமைத்தல், கப்பல் கட்டுதல் போன்ற மற்ற கனரகத் தொழில்களைத் தொடங்கினர்.

அல்சாஸ் மாகாணத்தின் முல்ஹவுஸ் நகரம் இயந்திரம் செய்வதற்கான அச்சுகளால் புகழ்பெற்றது. இதனால் உலகின் பல பகுதிகளிலிருந்தும் வடிவமைப்பாளர்கள் இந்நகருக்கு வந்தனர். இந்த அடித்தளத்தைப் பயன்படுத்தி முல்ஹவுஸ் நிறுவனம் பல்துறைகளில் விரிவடைந்து கனரகத் தொழில்களில் ஈடுபட்டு முன்னோடி இயந்திரங்களின் உற்பத்தியாளராக உயர்ந்தது. செயிண்ட் - சாமோண்டில் இரும்பு உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டது. 1820 இல் வார்ப்பிரும்பினைச் சுத்திகரிக்கும் பிரிட்டிஷ் தொழில்நுட்பம் இந்த நகரத்தில் பயன்படுத்தப்படத்தொடங்கியது.

1832 இல் பிரான்ஸ் நாட்டின் செயின்ட் இடியன் - ஆந்திரிஜியோக்ஸ் ஆகிய நகரங்களிடையே முதல் பிரெஞ்சு ரயில்பாதை திறக்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் எண்ணற்ற ரயில்பாதைகள் அமைக்கப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாகன உற்பத்தியில் பிரான்ஸ் முன்னோடி நாடாக வளர்ந்தது. பிரான்ஸ் நாட்டில் இன்றளவும் புகழ்பெற்ற வாகன நிறுவனங்களாகத் திகழும் இரு நிறுவனங்கள் 1891 இல் தொடங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. அர்மான் பியூகாட் நிறுவனம், முதல் கட்ட வாகனங்களை உற்பத்தி செய்தது. 1898 இல் லூயி ரெனால்ட் என்பவர் நான்கு சக்கர வாகனத்தை உருவாக்கினார். தொடர்ந்து சொசைட்டெ ரெனால்ட் ஃபெரெர்ஸ் (ரெனால்ட் சகோதரர்கள் நிறுவனம்) தனது நிறுவனத்தின் மூலம் அதிக எண்ணிக்கையில் வாகனங்களைத் தயாரித்தார்.

| |
|---|
| 1806 இல் பிரான்சில் வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்ட மக்கள்தொகை 65.1 விழுக்காடாக இருந்தது. 1896 இல் இது 42.5 விழுக்காடாகக் குறைந்தது. அதே காலகட்டத்தில் தொழில் துறையில் வேலைவாய்ப்புகளின் பங்கு 20.4 விழுக்காட்டில் இருந்து 31.4 விழுக்காடாக அதிகரித்தது. |

**ஜெர்மனியில் தொழிற்புரட்சி:**

ஒரு தொழிற்புரட்சி உருவாவதற்குத் தேவையான இயற்கை வளங்கள் ஜெர்மனியில் இயல்பாகவே அமைந்திருந்தன. சார், ரூர், மேற்கு சைலேசியா, சாக்ஸனி ஆகிய பகுதிகளில் நிலக்கரிப் படிவுகள் இருந்தன. எர்சிபிர்ஜ், ஹார்ஸ் மலைகள், மேற்கு சைலேசியா ஆகிய இடங்களில் இரும்பு கிடைத்தது.

ஜெர்மனியின் முன்னேற்றத்துக்குப் பெரும் சவாலாக அமைந்தது இன்னமும் இலவச உழைப்பு முறைகொண்ட பண்ணையடிமை முறையும் அதன் நில உடைமை அடிப்படையிலான சமூக அரசியல் அமைப்பும், தொழில் தொடங்கக் கடைபிடிக்கப்பட்ட கடுமையான உரிம முறையும் தான். பிரெமன், ஹாம்பர்க்

ஆகிய இரு பெரிய துறைமுகங்கள் தான் வடகடலில் இருந்த பாதுகாப்பான துறைமுகங்களாகும். ஆனால், இவை அனைத்தையும் விட ஜெர்மனியில் தொழிற்புரட்சி ஏற்பட்ட மிக முக்கியமான சவாலாக அமைந்தது அதன் அரசியல் அமைப்புதான். 1871 ஆம் ஆண்டுக்கு முன்புவரை ஜெர்மனி என்பது எண்ணற்ற ஜெர்மானிய அரசுகளால் உருவாக்கப்பட்டிருந்தது. அவற்றில் பிரஷ்யா மிகப் பெரிய அரசாகும்.

போட்டிகளைக் கட்டுப்படுத்தவும் விலை உயர்வைத் தக்கவைக்கவும் உற்பத்தியாளர்கள் அல்லது விநியோகிப்பாளர்கள் ஏற்படுத்திக்கொள்ளும் கூட்டமைப்பே கார்டெல் ஆகும்.

ஜெர்மனியில் தொழிற்புரட்சி உருவாவதிலும் ஜெர்மனி ஒரே நாடாக ஒருங்கிணைவதிலும் இருப்புப்பாதைகள் பெரிதும் உதவின. 1835 டிசம்பரில் நியூ ரெம்பர்க், ∴பர்த் நகரங்களுக்கிடையே முதல் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. இருப்புப்பாதைகள் அமைப்பதில் தனியார் துறை முன்முயற்சி எடுத்தது. ஆனால், மூலதனப் பற்றாக்குறை எழுந்தபோது அரசாங்கம் தலையிட்டு உதவியது. சில பகுதிகளில் இருப்புப்பாதை அமைக்கும் பணி தேசியமயமாக்கப்பட்டது. பிரஷ்யாவில் இருப்புப்பாதைகளை ஒருங்கிணைக்கும் பணியை அரசே முன்முயற்சி எடுத்து, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தியது. 1842 இல் இருப்புப்பாதை அமைக்கும் திட்டத்திற்கென்றே ரயில்வே நிதி எனத் தனி நிதி உருவாக்கப்பட்டது. பிரஷ்யாவில் ஒருங்கிணைந்த இருப்புப்பாதை மையமாக பெர்லின் நகரம் உருவானது. ஜோல்வேரேய்ன் ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் இருப்புப்பாதைகளால் இணைக்கப்பட்டதால் வணிக, வர்த்தக நடவடிக்கைகள் தீவிரமடைந்தன.

நீராவி இயந்திரப் பயன்பாட்டில் 1837 இல் 419 ஆக இருந்த பிரஷ்ய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1849 இல் 1,444 ஆக உயர்ந்தது. 1820 இல் பத்து இலட்சம் டன்களாக இருந்த நிலக்கரி உற்பத்தி, அடுத்த 30 ஆண்டுகளில் அறுபது இலட்சம் டன்களுக்கும் அதிகமாக உயர்ந்தது. 1810 இல் 46,000 டன்களாக இருந்த இரும்பு உற்பத்தி, 1850 வாக்கில் 5,29,000 டன்களாக அதிகரித்தது. 1850 இல் 3,638 மைல் நீளமாக இருந்த ரயில்பாதை 1870 இல் 11,600 மைல் நீளமாக அதிகரித்தது.

இறுதியாக 1871 இல் பிரஷ்ய அரசுகள் ஒன்றாக இணைந்து ஒரே ஜெர்மனி உருவானது. இதைத் தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் மிகப்பெரிய தொழில்மயநாடாக ஜெர்மனி உருவாகி, தொழில்மயமானதில் தொழிற்புரட்சி தோன்றிய இடமான இங்கிலாந்தைப் பின்னுக்குத் தள்ளி, அமெரிக்காவிற்குப் போட்டியாக உருவெடுத்தது. மின்பொருள் உற்பத்தயில் சீமென்ஸ் போன்ற நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. பொட்டாசியம், உப்பு, சாயங்கள், மருந்துப் பொருள்கள், செயற்கை இழைகள் போன்ற வேதிப்பொருள்கள் உற்பத்தியில் ஜெர்மனி தலைசிறந்து விளங்கியது. வேதிப்பொருள் துறையில் பேயர், ஹெஸ்ட் போன்ற ஜெர்மன் நிறுவனங்கள் தலைமை தாங்கின. வாகனத் தொழிலிலும் ஜெர்மனி ஒரு முன்னணி நாடாக விளங்கியது. உலகம் முழுவதிலும் ஜெர்மனியின் டெய்ம்லர், பென்ஸ் ஆகிய வாகனங்கள் மிகப் புகழ்பெற்றிருந்தன.

**அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சி:**

உடலுழைப்பிலிருந்து தொழில்நுட்பம் மற்றும் இயந்திரம் சார்ந்த உற்பத்திக்கு மாறியது அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தொடக்கமாகும். இங்கிலாந்தைச் சேர்ந்த சாமுவேல் சிலேட்டர் பத்து வயதிலிருந்து ஜவுளி ஆலைகளில் பணியாற்றி ஒரு ஆலையை நிர்வகிக்கும் அளவுக்கு அனுபவம் பெற்றிருந்தார். அமெரிக்கர்கள் புதிய தொழில்நுட்பங்களில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்று கேள்விப்பட்ட அவர், 1789 இல் அமெரிக்காவின் நியூயார்க்கில் சட்டவிரோதமாகக் குடியேறினார். ரோட்ஸ் தீவின் புகழ்பெற்ற தொழிலதிபர் மோசஸ் பிரௌன் என்பவரிடம் வேலைவாய்ப்பு கேட்டார். இவர் ஏற்கனவே ஒரு ஜவுளி ஆலை தொடங்கித் தோற்றவர். பிரௌன் இவரை வேலைக்குச் சேர்த்துக்கொண்டதும் அவரது ஆலை 1793 இல் மீண்டும் இயங்கத் தொடங்கியது. அமெரிக்க நாடுகளில் நீராற்றலின் மூலம் இயங்கிய முதல் ஜவுளி ஆலை அதுதான். 1800 வாக்கில், சிலேட்டரின் துணி ஆலையினை கண்டு மேலும் பல தொழில் முனைவோர்கள் துணி ஆலைகள் தொடங்கி வளமடைந்தனர். சிலேட்டரின் தொழில்நுட்பம் மேலும் மேலும் புகழடைந்தது. அமெரிக்க அதிபர் ஆண்ட்ரூ ஜாக்சன், சிலேட்டரை "அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை" என்று புகழ்ந்தார்.

19ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் உருவாக்குவதில் முனைந்தது. ராபர்ட் ஃபுல்டன் என்பவர் ஹட்சன் நதியில் நீராவிப் படகுப் போக்குவரத்தினைத் தொடங்கினார். சாமுவேல் F.B. மோர்ஸ் தந்தியைக் கண்டுபிடித்ததும், எலியாஸ் ஹோவே தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்ததும் அமெரிக்க உள்நாட்டுப் போருக்கு (1860 – 1865) முன்னர் நிகழ்ந்தவை ஆகும்.

| |
|---|
| 1846 இல் எலியாஸ் ஹோவே என்ற அமெரிக்கர் துணி தைக்கும் "தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். துணிகளை வெண்மையாக்குவது, சாயமிடுவது, அச்சிடுவது போன்ற புதிய முறைகளின் கண்டுபிடிப்புகளால் 19-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் பல்வேறு நிறங்களில் துணிகளைத் தயாரிக்க முடிந்தது. |

உள்நாட்டுப் போருக்குப் பிறகு தொழில்மயமாதல் மிகவும் தீவிரமடையத் தொடங்கியது. 1869 இல் கண்டங்களை இணைக்கும் முதல் ரயில்பாதை அமைக்கப்பட்டது. இது மக்கள் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து, மூலப்பொருட்களை எடுத்து வருதல் ஆகியனவற்றுக்குப் பயன்பட்டது. இதன் விளைவாக அமெரிக்காவில் எதிர்பாராவண்ணம் நகரமயமாக்கமும் எல்லை விரிவடைதல்களும் நிகழ்ந்தன. 1860 முதல் 1900 வரையான காலகட்டத்தில் மட்டும் உலகின் பல பகுதிகளிலிருந்து 1 கோடியே 40 இலட்சம் மக்கள் அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்து, பல்வேறு வகையான தொழிற்சாலைகளிலும் வேலை பார்த்தனர். தாமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கு கண்டுபிடித்தமை (1879), அலெக்சாண்டர் கிரஹாம்பெல் தொலைபேசி கண்டுபிடித்தமை (1876) ஆகிய நிகழ்வுகள் முழு உலகையும் அடையாளம் காணமுடியாத அளவிற்கு மாற்றின.

அமெரிக்காவின் பெரிய அளவிலான முதல் கனரக எஃகு உற்பத்தி ஆண்ட்ரூ கார்னேகி என்பவரால் தொடங்கப்பட்டது. இரும்புக்கான மூலப்பொருட்களை வழங்கிய சுரங்கங்கள், உற்பத்தி ஆலைகள், இறுதித் தயாரிப்பான இரும்புத்தகடுகளை உருவாக்கும் வெப்ப உலைகள், உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்லும் ரயில்பாதைகள். கப்பல் போக்குவரத்து என ஒவ்வொன்றையும் விலைக்கு வாங்கி, எஃகு உற்பத்தியின் ஒவ்வொரு

கட்டத்தையும் தனது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவந்தார். ஜான் டி ராக்ஃபெல்லர் என்பவர் பல பெரிய தொழிற்சாலைகளை இணைத்து அறக்கட்டளை ஒன்றினை நிறுவினார். அவரது ஸ்டாண்டர்ட் ஆயில் டிரஸ்ட் அத்துறையின் 90 விழுக்காட்டினை ஏகபோகமாக்கி, போட்டியைக் குறைத்தது. இத்தகைய ஏகபோகம் சிறிய நிறுவனங்களைப் பாதித்து அவற்றுக்கு அச்சுறுத்தலாக விளங்கியது. அமெரிக்க அரசும் ரயில்பாதைகள் அமைப்பதற்கான நிலங்கள் வழங்கி தொழில் வளர்ச்சியை ஆதரித்ததுடன் அமெரிக்க நிறுவனங்களுக்கு அந்நியப் போட்டியிலிருந்து பாதுகாப்பும் அளித்தது.

ஒரு கிராமப்புற சமூகமாகத் திகழ்ந்த அமெரிக்கா, நகர்ப்புறச் சமூகமாக மாறுவதைத் தொழிற்புரட்சி விரைவுபடுத்தியது. நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்புகள் உருவாவதைக் கண்ணுற்ற பண்ணைகளில் வளர்ந்த இளைஞர்கள், நகரங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர். இதேபோல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் லட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்துவந்தனர். இவ்வாறு நகரங்களில் குடியேறிய மக்களுக்கு வீட்டுவசதி அளிப்பது சிக்கலானது. இந்தப் புதிய தொழிலாளர்கள் நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்தார்கள். தெருக்களில் திறந்தவெளி சாக்கடைகள் ஓடின; குடிநீர் விநியோகம் போதுமானதாய் இல்லை; இதனால் தொற்றுநோய்கள் பரவின.

**உழைக்கும் வர்க்கப் போராட்டங்கள்:**

தொழிற்சாலைகளில் நிலவிய மோசமான பணிச்சூழல், நீண்ட வேலைநேரம், குறைந்த கூலி, பெண்களும் குழந்தைகளும் சுரண்டப்பட்டமை ஆகியன தொழிற்சங்கங்கள் உருவாக வழிவகுத்தன. அமெரிக்காவில் உள்நாட்டுப் போருக்குப் பின்னர், தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டனர். அவற்றுள் 1877 இல் வெடித்த இருப்புப்பாதைத் தொழிலாளர்களின் மாபெரும் வேலைநிறுத்தம் பெரும் நிகழ்வாக அமைந்தது. நீடித்த பொருளாதார மந்தம் காரணமாக ஊதியம் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டது. மேற்கு வெர்ஜீனியாவில் தொடங்கிய இந்த வேலைநிறுத்தம் 45 நாட்களிலேயே மேலும் மூன்று மாநிலங்களுக்குப் பரவியது. முதலாளிகளின் அடியாட்கள், தேசியப் பாதுகாப்புப்படை, இராணுவம், கூலிப்படைகள் ஆகியனவற்றைக் கொண்டு இந்தப் போராட்டம் நசுக்கப்பட்டது.

**ஹே மார்க்கெட் படுகொலை:**

சிகாகோவின் ஹே மார்க்கெட் சதுக்கத்தில் 1886 மே மாதம் 4 ஆம் தேதி ஒரு தொழிலாளர் ஆர்ப்பாட்டம் நடந்தது. நாளொன்றுக்கு எட்டு மணிநேர வேலை கோரிக்கையை முன்வைத்து அமைதியாகத் தொடங்கிய இக்கூட்டத்தில் காவல்துறை பல சுற்றுகள் துப்பாக்கிச் சூடு நடத்திப் பலரைச் சுட்டுச் கொன்றது. ஹே மார்க்கெட் தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மே 1 ஆம் நாள் இன்றளவும் சர்வதேச தொழிலாளர் நாளாகக் (மே தினம்) கடைபிடிக்கப்படுகிறது.

**இந்தியாவில் தொழிற்புரட்சியின் தாக்கம்:**

18 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை இங்கிலாந்து ஒரு வேளாண்மை நாடாகத்தான் இருந்தது. அதே நேரத்தில் இந்தியா வேளாண்மைக்காக மட்டுமல்லாமல் அதன் மிகச் சிறந்த உற்பத்திப்பொருள்களுக்காகவும்

அறியப்பட்டிருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் முதல் கால பகுதியில் இங்கிலாந்தில் குவிக்கப்பட்ட இந்தியப் பருத்தி இழைத் துணிகளுக்கும் பட்டு ஆடைகளுக்கும் தடைவிதித்தும் இங்கிலாந்தில் சட்டம் இயற்றப்பட்டது. காரணம், ஜான் கே என்பவரால் பறக்கும் நாடா கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்த 30 ஆண்டுகளில் ஹர்கிரீவ்ஸ், ஆர்க்ரைட், கிராம்டன் ஆகியோர் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளால் நூற்பு, நெசவுத் தொழில் ஆகியன இங்கிலாந்தில்

**தொழிற்புரட்சிக் காலகட்டத்தின் முக்கியக் கண்டுபிடிப்புகள்:**

| கண்டுபிடிப்பு | கண்டுபிடித்தவர் | ஆண்டு |
|---|---|---|
| ஊது உலை (இரும்பு மற்றும் எ.்.கு) | ஆப்ரஹாம் டார்பி | 1709 |
| நீராவி இயந்திரம் | தாமஸ் நியூகோமன் | 1712 |
| பறக்கும் நாடா (ஜவுளி) | ஜான் கே | 1733 |
| மேம்படுத்தப்பட்ட டார்பி முறை (இரும்பு மற்றும் எ.்.கு) | ஜான் ஸ்மீட்டன் | 1760 |
| இயந்திர நூற்புக் கருவி (ஜவுளி) | ஜேம்ஸ் ஹர்க்ரீவ்ஸ் | 1764 |
| நூற்பு நீர்ச்சட்டகம் (ஜவுளி) | ரிச்சர்ட் ஆர்க்ரைட் | 1769 |
| நியூகோமனின் நீராவி இயந்திர மறுவடிவாக்கம் | ஜேம்ஸ் வாட் | 1769 |
| ஸ்பின்னிங் மியூல் (ஜவுளி) | சாமுவேலி கிராம்ப்டன் | 1779 |
| விசைத்தறி (ஜவுளி) | எட்மண்ட் கார்ட்ரைட் | 1785 |
| பருத்தியிலிருந்து கொட்டை நீக்கம் (ஜின்) (ஜவுளி) | எலி விட்னி | 1793 |
| காற்றுப் பம்பு (சுரங்கங்களில்) | ரிச்சர்ட் ட்ரித்விக் | 1801 |
| ப.்பிங் டெவில் - முதல் நீராவி ரயில் என்ஜின் | ஜான் பண்டில் | 1807 |
| தி புட்சர் - ரயில் என்ஜின் | ஜார்ஜ் ஸ்டீ.்பன்ஸன் | 1814 |
| சுரங்கப் பாதுகாப்பு விளக்கு | ஹம்ப்ரி டேவி | 1815 |
| தையல் இயந்திரம் | சாமுவேல் மோர்ஸ் | 1844 |
| தந்தி – மோர்ஸ் கோட் (தகவல் தொடர்பு) | எலியாஸ் ஹோவே | 1846 |
| குறைந்த செலவிலான எ.்.கு தயாரிக்கும் முறை | ஹென்றி பெஸ்ஸிமர் | 1856 |
| தொலைபேசி | அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் | 1876 |
| கம்பியில்லாத் தகவல் தொடர்பு | தாமஸ் ஆல்வா எடிசன் | 1879 |
| ஒளிரும் மின்விளக்கு | மார்க்கோனி | 1899 |

பெரும் வளர்ச்சியடைந்திருந்தன. வங்கத்தில் ஒரு பிரதேச அரசாகக் காலூன்றிய ஆங்கிலேயரால் வங்கம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் கொள்ளையடிக்கப்பட்ட செல்வமே இங்கிலாந்தில் தொழிற்புரட்சிக்குத் தேவையான முதலீட்டை வழங்கி அதை வெற்றி பெற வைத்தது. வங்கத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் மற்றும் அவர்களின் முகவர் கரங்களில் சிக்கிப் பெரும் துன்பத்துக்கு ஆளாயினர். அவர்கள் முதலில், உற்பத்திப் பொருள்களை ஓரிடம் விட்டு வேறிடம் எடுத்துச்செல்ல போக்குவரத்துத் தீர்வை செலுத்த வேண்டும் என்று இந்திய நெசவாளர்கள் மீது கடும் சுமையைத் திணித்தனர். அடுத்து, இங்கிலாந்தின் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் வணிகப் பயிர்களை மட்டும் சாகுபடி செய்ய வற்புறுத்தினர். கைத்தறியில் நெய்யப்பட்ட பருத்தி ஆடைகளுக்கான சந்தை இழப்பால் இந்தியா பண்டைய உற்பத்தித் துறையில்

வகித்து இருந்த இடத்தை இழந்து மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக மட்டுமே மாறியது.

19 ஆம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் டாக்கா மஸ்லின் துணி இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டது. மேலும் அமெரிக்கப் போட்டியின் காரணமாக, இந்தியாவில் செய்யப்பட்ட கச்சாப் பருத்தி ஏற்றுமதியும் படிப்படியாகச் சரிந்தது. பிரிட்டன் துணி ஆலைகளில் உற்பத்தியான துணிகள் இந்தியச் சந்தைகளில் குறைவான விலைக்கு விற்கப்பட்டமையால் இந்திய நெசவாளர்கள் வேலையற்றுத் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து உணவுக்கும் வழியற்றவர்களாயினர்.

மதுரை ஆட்சியர் அளித்த ஓர் அறிக்கையில் சுமார் 5,000 கைத்தறி நெசவுக் குடும்பத்தினர் ஒரு வேளை உணவுகூடக் கிடைக்காமல் அவதியுறுவதாகப் பதிவு செய்துள்ளார். திருநெல்வேலி பகுதி நெசவாளர்கள் தமது ”வாழ்வாதாரங்கள் அழிந்துபோனதாலும் சாதி அமைப்பு வேறு தொழில்களில் ஈடுபட அனுமதிக்காததாலும்” துன்பப்பட்டதாகத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அக்காலத்தில் பதிவு செய்துள்ளார். பல லட்சம் மக்கள் பஞ்சத்தால் மடிந்தனர். பஞ்சத்தால் சாக விரும்பாத லட்சக்கணக்கான இந்திய விவசாயிகளும் கைவினைத் தொழிலாளர்களும் தாய்நாட்டை விட்டு வெளியேறி இங்கிலாந்தின் காலனி நாடுகளின் மலைத்தோட்டங்களில் மோசமான பணி மற்றும் வாழும் சூழல்களில் அடிமைகளாய், ஒப்பந்தக் கூலிகளாய் வாழ நேர்ந்தது.

**மீள்பார்வை :**

- தொழிற்புரட்சியின் முக்கியப் பண்புகள் பட்டியலிடப்பட்டுள்ளன.
- தொழிற்புரட்சி முதன் முதலாக இங்கிலாந்தில் தோன்றியதற்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன.
- ஜவுளி உற்பத்தியில் வளர்ச்சி ஏற்படுவதற்கு வழிகோலிய கண்டுபிடிப்புகள் விவாதிக்கப்பட்டுள்ளன.
- இரும்பு மற்றும் எஃகின் பயன்பாடு அனைத்துவகைத் தொழில்களையும் இயந்திரமயமாக்கியதும், அதனால் போக்குவரத்து, தகவல் தொடர்புத் துறைகளில் ஏற்பட்ட அதிவேக வளர்ச்சியும் விவரிக்கப்பட்டுள்ளன.
- தொழிற்புரட்சியானது சுற்றுச்சூழல் மீதும் மக்களின் வாழ்க்கை நிலைகள் மீதும் ஏற்படுத்திய தாக்கம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.
- தொழிற்புரட்சி பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பரவியமை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.
- போராட்டங்கள் மற்றும் தியாகங்கள் மூலமே உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் பெறப்பட்டன என்பதை உணர்த்தும் பொருட்டு, தொழிலாளர் இயக்கங்கள், அவற்றின் மீது அமெரிக்க அரசு மேற்கொண்ட அடக்குமுறை ஆகியவை மீது தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# 9TH சமூக அறிவியல்

## அலகு – 11
## ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம்

**அறிமுகம்:**

காலனியாதிக்கம் என்பது ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமை படுத்தி மேலாதிக்கம் செய்வதாகும். காலனியாதிக்கத்தைப் போல் ஏகாதிபத்தியமும் தன்னைச் சார்ந்திருக்கும் பகுதியின் அரசியலையும் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்துவதாகும். ஸ்டான்போர்டு தத்துவக் கலைக்களஞ்சியம் இவ்விரண்டையும் பின்வருமாறு வேறுபடுத்துகிறது. காலனி என்னும் சொல் “கலோனஸ்“ என்னும் லத்தீன் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் பொருள் விவசாயி என்பதாகும். காலனியாதிக்கம் என்பது மக்களை ஒரு புதிய இடத்தில் குடியேற்றுவது. குடியேறியவர்கள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி வாழ்வர். ஆனால் சொந்த நாட்டின் மீதே அரசியல் விசுவாசம் கொண்டிருப்பர் என்பதை இவ்வேர்ச்சொல் சுட்டுகிறது. மாறாக ஏகாதிபத்தியம் (இம்பீரியம் என்னும் லத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. ஆதிக்கம் செய்தல் என்று பொருள்) என்பது ஒரு நாடு, குடியேறுதல் மூலமாகவோ இறையாண்மை செலுத்துதல் மூலமாகவோ மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் வழிகளிலோ வேறொரு நாட்டின் மீது அதிகாரம் செலுத்துவதைக் குறிக்கும்.

உலக வரலாற்றில், நவீன ஐரோப்பாவைப் போல வேறு எந்தக் கண்டமும் பல காலனிகளைப் பெற்றிந்ததில்லை; அவ்வாறு உலகின் பல பகுதிகளுக்குச் செல்ல முடிந்ததை நாகரிகத்தைப் பரப்பும் செயல் என நியாயப்படுத்தியதுமில்லை. நடைமுறையில் மேலைநாடுகள் அல்லாத உலகம் முழுவதும் ஏதேனும் ஓர் ஐரோப்பிய சக்தியின் கீழ் நான்கு நூற்றாண்டுகள் இருந்துள்ளன. இரண்டாவது உலகப் போருக்குப் பின் காலனியாதிக்கம் நீக்கப்படும் வரை இந்தநிலை நீடித்துள்ளது.

இப்பாடத்தில் தென்கிழக்காசியா, ஆப்பிரிக்கா, இந்தியா ஆகியவை ஐரோப்பிய சக்திகளால் காலனிகள் ஆக்கப்பட்டதை விவாதிக்க உள்ளோம்.

**ஆசியாவில் குடியேற்றமடைதல் (தென் கிழக்காசியா):**
**தென்கிழக்காசியா:**
இரண்டாம் உலகப் போரிலிருந்துதான் “தென்கிழக்காசியா” என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. மலேயா, டச்சு கிழக்கிந்தியா, பர்மா, சயாம், பிரெஞ்சு இந்தோ சீனா, பிலிப்பைன்ஸ் ஆகிய பகுதிகளின் தொகுப்பையே இச்சொல் சுட்டுகின்றது. இவற்றில் சயாம் (தாய்லாந்து) மட்டும் சுதந்திர நாடாக இருக்க மற்ற பகுதிகள் டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரிடையே பங்கிடப்பட்டன.

**மலேயா தீபகற்பம்:**

ஐரோப்பிய வணிகர்கள் 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நறுமணப் பொருள்களுக்காக இந்தியப் பெருங்கடலைக் கடந்து தென்கிழக்காசியா சென்றனர். போர்த்துகீசியர் தங்கள் அரசருக்காக மலாக்காவின் மாபெரும் பன்னாட்டு வணிக வளாகத்தைக் கைப்பற்றியபோது ஸ்ரீவிஜய மற்றும் மஜபாகித

பேரரசுகள் சிதறுண்டு பல சிற்றரசுகளாயின. கோவாவையும் மலாக்காவையும் கைப்பற்றிய போர்த்துகீசிய வீரர் அல்புகர்க்கும் அவருக்குப் பின்வந்தோரும் நறுமணப் பொருட்கள் வணிகத்தில் ஆர்வம் கொண்டிருந்ததால் அந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு சங்கிலித் தொடர்போல் பாதுகாப்பு மதிற்சுவர்களுடன் கூடிய கப்பற்படைப் பாதுகாப்பு கொண்ட வணிக மையங்களை நிறுவினர். தொடக்கத்தில் சுதேச அரசுகளின் நிர்வாகத்தில் அவர்கள் தலையிடவில்லை. டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரின் வருகையானது போர்த்துகீசியரின் இருப்புக்குச் சவாலாக மாறியது. இம்மூன்று ஐரோப்பிய சக்திகளுக்கு இடையிலான ஆதிக்கப் போட்டிகள் பதினேழாம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகளாயின.

டச்சுக்காரர் 1641 ஆம் ஆண்டு மலாக்காவைக் கைப்பற்றி அங்கிருந்த போர்த்துகீசியக் குடியேற்றங்களை ஆக்கிரமிக்கும் பணியைத் தொடங்கினர். 1619 இல் பட்டாவியாவில் (தற்போதைய ஜகார்த்தா) ஒரு தளத்தை ஏற்படுத்திய பின்னர் அருகேயிருந்த சுதேச சுல்தானியரின் வாரிசுரிமைப் பிரச்சனைகளில் தலையிடத் தொடங்கினர். 1682 இல் ஆங்கிலேயரை பாண்டம் என்னுமிடத்திலிருந்து வெளியேற்றி, படிப்படியாக ஜாவாவைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர். அதற்கு முன்னதாகவே 1923 இல் அம்பாய்னா படுகொலைக்குப் பின்னரும் 1667 இல் மக்காசாரைக் கைப்பற்றியதன் மூலமாகவும் ஆங்கிலேயரை நறுமணத் தீவுகளிலிருந்து வெளியேற்றி, ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி சீனாவுடனான வணிகத்தில் தனது கவனத்தைத் திருப்புமாறு செய்திருந்தனர். மணிலாவை வெற்றிகொண்டதில் தொடங்கி, பின்னாளில் பரந்து விரிந்த ஸ்பானிய கிழக்கிந்தியப் பிராந்தியத்தை உருவாக்கி. ஸ்பெயின் நாட்டவர் தங்களை நிலைநிறுதிக் கொண்டனர்.

**ஆங்கிலேய – டச்சுக்காரர் போட்டி:**

பிரான்சிஸ் லைட் என்பவர் பினாங்குத் தீவை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். 1786 இல், பினாங்குத் தீவின் வடகிழக்கு முனையில் ஜார்ஜ் டவுன் என்ற பெயரில் ஒரு குடியேற்றம் உருவாக்கப்பட்டதோடு மலேயா தீபகற்பத்தில் ஆங்கிலேயரின் விரிவாக்கம் தொடங்கியது. டச்சுக்காரருடன் ஏற்பட்ட போட்டியின் விளைவாக 1819 இல் ஸ்டாம்போர்டு ரா∴பில்ஸ் என்பவர் சிங்கப்பூரை ஆங்கிலேயரின் முக்கிய வணிக மையமாக உருவாக்கினார். இருந்தபோதிலும் 1824இல் மேற்கொள்ளப்பட்ட ஆங்கிலோ – டச்சு உடன்படிக்கையால் போட்டி மனப்பாங்கு தணிந்தது. இவ்வுடன்படிக்கை தென்கிழக்காசியாவில் இவ்விரு சக்திகளின் விருப்பங்கள் எவை என்பதைத் தெளிவாக வரையறை செய்தது. 1826 வாக்கில் சிங்கப்பூரும் மலாக்காவும் பினாங்கோடு இணைக்கப்பட்டு நீரிணைப்பகுதி குடியிருப்புகள் (Straits Settlements) உருவாக்கப்பட்டன.

1874 முதல் 1895 வரை ஆகிய ஆண்டுகளுக்கிடையே எஞ்சியிருந்த ஐந்து சுதேச அரசுகளிடையே உள்நாட்டுப் போர் நடைபெற்றது. இப்பிரச்சனையில் தலையிட்ட ஆங்கிலேயர் ஒவ்வொரு சுல்தானோடும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஒவ்வொரு சுல்தானுடைய அவையிலும் ஓர் ஆங்கிலேய ஸ்தானிகர் (Resident) நியமிக்கப்பட்டார். ஆங்கிலேய ஸ்தானிகர்கள் வழங்கும் ஆலோசனைப்படி சுல்தான்கள் செயல்பட வேண்டியிருந்தது. 1896 ஆம் ஆண்டு இவற்றில் நான்கு அரசுகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஐக்கிய மலாய் நாடுகள்

உருவாக்கப்பட்டது. 1900 இல் நீரிணைப்பகுதி குடியிருப்புகள், ஐக்கிய மலாய் நாடுகள், ஜகோர் ஆகியவை ஆங்கிலேயர் வசமிருந்தன. இப்பகுதியின் மக்கள்தொகை பத்து இலட்சமாக இருந்தது. அதில் சரிபாதி மலாய் இன மக்களாவர். மற்றவர்கள் சீனர்களாவர். பெரும்பாலான வர்த்தகர்கள், பண்ணை வைத்திருப்போர், துறைமுகங்களிலும் பண்ணைகளிலும் பணி செய்யும் தொழிலாளர்கள் ஆகியோர் சீனர்களாவர். பொருளாதாரத்தில் மலேயா செழிப்புற்றுத் திகழ்ந்தது.

**இந்தோனேசியா:**

டச்சுக்காரர் 1640 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜாவாவையும் சுமத்ராவையும் ஆக்கிரமித்தனர். பதிதொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில்தான் கிழக்கிந்தியாவின் பிற வெளிப்புறத் தீவுகளில் ஆங்கிலேயர் வசமிருந்த வடக்கு போர்னியோ, புருனே, சராவக் பகுதிகளைத் தவிர்த்து ஏனையவற்றைக் கைப்பற்றினர். தொடக்கத்தில் அரசியலில் நாட்டம் கொண்டிராத டச்சுக்காரர் இந்தோனேசியாவை அரசியலில் நாட்டம் கொண்டிராத டச்சுக்காரர் இந்தோனேசியாவை இரக்கமின்றிச் சுரண்டினர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தங்களால் ஆளப்படும் மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பெரும்பாலான இந்தோனேசியர் மீனவர்களாகவும், சிறு விவசாயிகளாகவும் ஐரோப்பியரின் சர்க்கரை, புகையிலை, தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளர்களாகவும் இருந்தனர். பண்ணைகளிலும் ஏனைய தொழில்களிலும் செய்யப்பட்டிருந்த பெருமளவிலான முதலிடு, 1900 இல் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் வளம் ஆகியவற்றால் இந்தோனேசியா டச்சுக்காரர்களுக்குப் பெருமதிப்புள்ள காலனியாகியது.

**பர்மா:**

ஆங்கிலேயர் மூன்று போர்களைத் தொடுத்த பின்னர் பர்மாவைக் கைப்பற்றினர். 1886 முதல் 1937 வரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே பர்மா இருந்தது. ஒரு துணைநிலை ஆளுநரால் நிர்வகிக்கப்பட்டது. நியமன உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றக் குழு அவருக்கு உதவியது.

பர்மா தேக்கு பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மேலும் தனது செழிப்பு மிகுந்த மண்வளத்தால் அரிசி ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாகவும் திகழ்ந்தது. தென்னிந்தியாவின் பல பகுதிகள் பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசியைச் சார்ந்திருந்தன. இரண்டாம் உலகப்போரின் போது பர்மா ஜப்பானியர் வசமானபோது தென்னிந்தியாவில் அரிசிக்குக் கடும் பற்றாக்குறை ஏற்பட்டு பஞ்சமே உருவானது.

**இந்தோ – சீனா:**

பிரெஞ்சுக்காரர் இந்தோ – சீனாவை மக்களின் வலுவான எதிர்ப்புக்குப் பின்னரே கைப்பற்றினர். 1858 இல் முயற்சிகளைத் தொடங்கியபோதும், இந்தோ-சீன ஒன்றியத்தை 1887 இல் தான் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர். இந்தோ – சீனா என்பது ஆனம், டோங்கிங், கம்போடியா, கொச்சின் - சீனா ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும். ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் லாவோஸ் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இவற்றில் கொச்சின் - சீனா மட்டுமே பிரான்சின்

காலனியாக நேரடிக் கட்டுப்பாட்டின் கீழிருந்தது. ஏனைய நான்கும் பிரான்சின் பாதுகாப்பில் இருந்தனவாகும்.

இம்முறையின் கீழ், சுதேச மன்னர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பர், ஆனால் பிரெஞ்சு ஸ்தானிகரின் ஆலோசனையின்படி அவர்கள் நிர்வாகம் செய்ய வேண்டும். பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைநகராக ஹனாய் இருந்தது. அரிசி, ரப்பர், கோதுமை ஆகியன முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாக இருந்தன. லாவோஸ் வளர்ச்சி பெறாமலேயிருந்தது.

**பிலிப்பைன்ஸ்:**

பிலிப்பைன்ஸ் 300 ஆண்டுகளுக்கும் மேலாக ஸ்பானியரால் அளப்பட்டது. தனது மொழி, பண்பாடு, மதம் ஆகியவற்றை ஸ்பெயின் அம்மக்களின் மீது திணித்தது. அதன் விளைவாக மக்களில் கணிசமான பகுதியினர் ரோமன் கத்தோலிக்கர் ஆயினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களிடையே தேசிய உணர்வு வளர்ந்தது. 1872, 1896 ஆகிய ஆண்டுகளில் முக்கியக் கிளர்ச்சிகள் வெடித்தன. ஆனால் அவை ஸ்பானிய காலனிய அரசால் நசுக்கப்பட்டன. 1898 இல் கியூபாவுக்கு எதிரான போரில் ஸ்பெயினை அமெரிக்கா தோற்கடித்தது. அதன் விளைவாகப் பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் காலனியானது.

**சயாம் (தாய்லாந்து):**

தாய்லாந்து மேலைநாடுகளின் அதிகார அரசியலால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டாலும் அந்நியர்களால் ஆளப்படவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி 1910 வரை தொடர்ந்த நிர்வாகச் சீர்திருத்தங்கள் அந்நாட்டில் ஒரளவுக்குச் சுதந்திரமாக இயங்கும் "மியூங்" என்று அழைக்கப்பட்ட நகரங்களில் மேற்கத்திய பாணியிலான நிர்வாக முறையை ஏற்படுத்தின. எனினும், தாய்லாந்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களில் மேற்கத்திய சக்திகள் தொடர்ந்து தலையிட்டன.

**ஆப்பிரிக்கா காலனியாதல்:**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதிவரை சகாராவிற்குத் தெற்கேயிருந்த ஆப்பிரிக்கப் பகுதிகள் பெரும்பாலும் வெளியுலகத்தினரால் அறியப்படாமலே இருந்தன. ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளும் ஆய்ந்தறியப்படாமலே இருந்தன. 1875 க்குப் பின்னர், ஐரோப்பியரின் ஊடுருவலும் குடியேற்றங்களை நிறுவுதலும் பெருமளவில் நடைபெறத் தொடங்கியது. 1884 – 85 இல் நடைபெற்ற பெர்லின் குடியேற்ற நாட்டு மாநாட்டில் ஆப்பிரிக்காவைப் பல ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிப்பதென முடிவு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு முக்கியமான ஐரோப்பிய நாடுகளிடையே போர் ஏற்படாமல் ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய காலனிகளை ஏற்படுத்துவது சுமுகமாக நடைபெற்றது. 1881 க்கும் 1914 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பிய சக்திகள் ஆப்பிரிக்காவின் மீது படையெடுத்து, கைப்பற்றிக் காலனிகளை ஏற்படுத்திய ஏகாதிபத்திய சகாப்தமானது ஆப்பிரிக்காவைப் பங்கிடுதல் அல்லது ஆப்பிரிக்கப் போட்டி என அழைக்கப்படுகிறது.

1884 – 85 இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அறியப்படுகிறது. மத்திய ஆப்பிரிக்காவில்

உள்ள காங்கோ நதி வடிநிலத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது. காங்கோ நதியின் வடிநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகல் கூட்டிய இம்மாநாட்டில் போர்த்துகலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவானதெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கு உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

**தென் ஆப்பிரிக்கா:**

தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர் நேட்டால், கேப் காலனி ஆகிய பகுதிகளைப் பெற்றிருந்தனர். உள்நாட்டில் போயர் (Boer) என அறியப்பட்ட டச்சுக்காரர் டிரான்ஸ்வாலைச் சேர்ந்த நாடுகளையும் சுதந்திர ஆரஞ்சு நாட்டையும் பெற்றிருந்தனர். 1886 இல் டிரான்ஸ்வாலில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன் இங்கிலாந்தைச் சேர்ந்த சுரங்கத்தொழில் வல்லுநர்கள் ஜோகன்னஸ்பர்க்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெரும் எண்ணிக்கையில் குடியேறத் தொடங்கினர். சுரங்கம் அமைக்க வந்தவர்களைக் கண்டு போயர் அச்சம் கொண்டு அவர்களை வெறுத்தனர். அவர்களை அந்நியர் (Uitlanders) என்றே அழைத்தனர். 1890 இல் கேப் காலனியின் பிரதம மந்திரியான சிசில் ரோட்ஸ் டிரான்ஸ்வாலுக்கு வடக்கே ஆங்கிலேயரின் விரிவாக்கத்தை ஊக்குவித்தார். இது ஆங்கிலேயருக்கும் போயர்களுக்கும் இடையிலான உறவைச் சீர்குலைத்தது. தங்கள் அரசியல் உரிமைகள் மறுக்கப்படுவதாகச் சுரங்க முதலாளிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாக ஏற்பட்ட போயர் போர்கள் மூன்று ஆண்டுகள் (1899 – 1902) நடைபெற்றன. இறுதியில் போயர் படைகள் தோற்கடிக்கப்பட்டுப் பிரிட்டோரியா கைப்பற்றப்பட்டது. 1907 இல் போயர் நாடுகளுக்கு முழுமையான பொறுப்பு அரசுரிமைகள் வழங்கப்பட்டன. சில வருடகால விவாதங்களுக்குப் பின்னர் முடிவாக இந்நான்கு நாடுகளும் ஒன்றாக இணைவதற்கு ஒப்புக் கொண்டதால் 1909 இல் தென்னாப்பிரிக்கா எனும் நாடு உதயமானது.

ஜுலு பூர்வக்குடிகள் தங்களின் போர்த்திறனுக்காகப் பெயர் பெற்றவர்கள். புகழ் பெற்ற போராளிகளான சாக்கா ஜுலு போன்றவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவர்கள். தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் ஜுலு மக்களுக்கென ஒரு பெரிய நாட்டை உருவாக்குவதில் சாக்கா ஜுலு முக்கியப் பாங்காற்றினார். ஜுலு பகுதிகளைக் கைப்பற்றிய ஆங்கிலப் படைகள் அப்பகுதிகளைப் பதிமூன்று தலைமையுரிமைப் பகுதிகளாகப் பிரித்தனர். ஜுலுக்கள் தங்கள் சுதந்திரத்தை மீண்டும் பெறவேயில்லை. அவர்கள் தென்னாப்பிரிக்காவில் ஆழமாக நிலைகொண்டுவிட்ட இனப்பாகுபாட்டிற்கு எதிராக ஒரு நூற்றாண்டு காலம் போராட நேர்ந்தது.

**ரோடிசியா:**

1889 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்க கம்பெனி எனும் நிறுவனம் நிலங்களைக் கைப்பற்றும் நோக்கில் 600 நபர்களைக் கொண்ட நீண்ட பயணமொன்றை மேற்கொண்டது. ஒவ்வொருவருக்கும் 3000 ஏக்கர் பண்ணை நிலம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டது. ஐரோப்பியர்கள் வந்திருப்பது தங்கத்திற்காக மட்டுமே என ஆப்பிரிக்க அரசரை ஏமாற்றி நம்ப வைத்தனர். ஆனால் அவர்கள் பிச்சுனாலந்துப் (போட்ஸ்வானா) பகுதி முழுவதையும் காலனியாக மாற்றும் தீர்மானகரமான திட்டத்துடனே

வந்திருந்தனர். அடுத்த பத்து ஆண்டுகளில் ஆப்பிரிக்கர்களின் எதிர்ப்பு நசுக்கப்பட்டது. வெள்ளையினக் குடியேறிகளுக்குப் பண்ணை நிலங்கள் வழங்கப்பட்டன. இருப்புப்பாதைப் போக்குவரத்தும் தந்தி முறையும் மேம்படுத்தப்பட்டன. இக்குடியேற்றம் பின்னர் சிசில் ரோட்ஸ் பெயரால் ரோடிசியா என அழைக்கப்பட்டது.

**மேற்கு ஆப்பிரிக்கா:**

கோல்டு கோஸ்டில் அமைந்துள்ள கடற்கரைப் பகுதி அரசுகள் 1854 இல் ஆங்கிலேயரின் காலனியானது. நைஜீரியாவின் கடற்கரைப் பகுதி அடிமைச் சந்தையாகப் பயன்படுத்தப்பட்டது. 1886 இல் ராயல் நைஜர் கம்பெனி உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த நிறுவனம் 1900 இல் ஆங்கிலேய அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா:**
மேற்கு ஆப்பிரிக்காவில் செனகல் பிரான்சின் தளமாக இருந்துவந்தது. பின்னாளில் பிரான்சுக்குச் சொந்தமாகிய கினியா, ஐவரி கோஸ்ட், டகோமெய் ஆகியவை சகாராவுக்கு தெற்கேயிருந்த பகுதிகளோடு இணைக்கப்பட்டன.

**காங்கோ**

பெல்ஜியம் அரசர் இரண்டாம் லியோபோல்டு கர்ஙகோவைக் கைப்பற்ற ஆர்வம் கொண்டிருந்தார். எனவே பெர்லின் மாநாடு இரண்டாம் லியோபோல்டுக்கு, காங்கோ பகுதியில் தன்னாட்சியரசை ஏற்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கியது. காங்கோ பகுதியின் மதிப்பு மிக்க பொருள்களான ரப்பர், தந்தம் ஆகியவற்றின் வணிகத்தில் இவ்வரசுக்கு முற்றுரிமையும் வழங்கப்பட்டது. இப்பொருள்கள் கொடுரமான முறைகளில் சேகரிக்கப்பட்டன. ஆப்பிரிக்கர் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நிர்ணயம் செய்யப்பட்டது. நிர்ணயம் செய்யப்பட்ட அளவுக்குப் பொருள்களை வழங்கத் தவறினால் கசையடியும், கை, கால் துண்டிக்கப்படுதலும் தண்டனைகளாயின. ஆப்பிரிக்காவின் பொருளாதாரம் சுரண்டப்படுவதாக மக்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்ததால் பெல்ஜிய அரசாங்கம் பிரச்சனையில் தலையிட்டது. லியோபோல்டு பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டர்.1908 இல் காங்கோவின் “இறையாண்மை” பெல்ஜியம் அரசுக்குக் கைமாறியது.

**கிழக்கு ஆப்பிரிக்கா:**

**ஆங்கிலேயர்:** 1886 இல் ஜான்ஜிபார் சுல்தானுக்குச் சொந்தமான பல பகுதிகள் இங்கிலாந்து, ஜெர்மனி ஆகியவற்றின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. தொடக்கத்தில் சில ஆண்டுகள் இங்கிலாந்தின் பகுதிகள் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியால் நிர்வகிக்கப்பட்டது. ஆனால் 1895 இல் ஆங்கில அரசே நிர்வாகப் பொறுப்பையேற்று கிழக்கு ஆப்பிரிக்கப் பாதுகாவலர் (Protectorate) ஆட்சியை உருவாக்கியது. அது கென்யா, உகாண்டா, ஜான்ஜிபார் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. உகாண்டாவின் பெரும்பகுதியானது காபகா எனும் அரசர் ஆண்ட புகாண்டா பகுதியாகும்.

ஜெர்மானியர்: ஜெர்மானியர், ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா எனப் பின்னர் உருவான பகுதியில் தங்கள் ஆட்சியை நிறுவினர். பெல்ஜிய அரசர் லியோபோல்டு காங்கோவில் நடந்துகொண்டதைப் போலவே ஆப்பிரிக்கர்களை,

ஜெர்மனியர்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கு உள்ளாக்கினர். இது பல கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தது. இவற்றில் மிகவும் முனைப்பான எழுச்சி மஜி – மஜி எழுச்சியாகும் (1905 – 1907)

**போர்த்துகீசியரின் அங்கோலா மற்றும் மொசாம்பிக்**

போர்த்துகீசியர்கள் தென் ஆப்பிரிக்காவின் மேற்கு, கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் அமைந்திருந்த அங்கோலா, மொசாம்பிக் ஆகிய காலனிகளையும் அவற்றுடன் போர்த்துகீசிய கினியாவையும் 16 ஆம் நூற்றாண்டிலிருந்தே பயன்படுத்திவந்தனர்.

**லைபீரியாவிலும் எத்தியோப்பியாவிலும் ஆப்பிரிக்கர் ஆட்சி:**

ஐரோப்பியரின் காலனியாதிக்கத்திற்கு உட்படாமல் தப்பித்த இரு ஆப்பிரிக்க நாடுகள் லைபீரியா, எத்தியோப்பியா ஆகியவை மட்டுமே 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவை விட்டு வெளியேறிய கருப்பின மக்களின் ஓர் குடியிருப்பாக லைபீரியா உருவாக்கப்பட்டது. எத்தியோப்பியா அதன் பாரம்பரிய அரசியல் அமைப்புடன், பேரரசர் மெனிலிக் என்பவரால் ஆளப்பட்டது.

**இந்தியாவைக் காலனி நாடாக்குதல்:**

15 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், போர்த்துக்கல் இந்தியாவுடன் வணிகத் தொடர்பை நிறுவிய முதல் ஐரோப்பிய நாடானது. 1498 ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு கோழிக்கோட்டை வந்தடைந்தார். மிக விரைவில் போர்த்துகலைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய சக்திகளும் இந்தியாவிற்கு வந்தன. 16 ஆம் நூற்றாண்டு முதலாக இந்தியாவிலிருந்த ஐரோப்பிய சக்திகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| போர்த்துகீசியர் | 1505 – 1961 |
| டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி (நெதர்லாந்து) | 1605 - 1825 |
| டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி (டென்மார்க்) | 1620 - 1869 |
| பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி | 1668 - 1954 |
| ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி | 1612 – 1757 |
| ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி | 1757 – 1857 |
| ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி | 1858 – 1947 |

போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய நான்கு முக்கிய ஐரோப்பிய சக்திகளிடையே ஏற்பட்ட போட்டியில் மூன்று கர்நாடகப் போர்களுக்குப் பின்னர் ஆங்கிலேயர் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்சைப் போட்டியிலிருந்து வெளியேற்றினர். ஆங்கிலேயர் அனைத்து சுதேச அரசுகளையும் கைப்பற்றினர். குறிப்பாக வலிமையான சவால்களைத் திகழ்ந்த மைசூர் சுல்தான்களை மூன்று ஆங்கிலேய மைசூர் போர்களிலும் மராத்தியரை மூன்று ஆங்கிலேய – மராத்தியப் போர்களிலும் வெற்றி கொண்டனர். 1816 இல் கூர்க்கர்களையும், 1843 இல் சிந்திகளையும், 1849 இல் சீக்கியரையும் வென்று அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றினர். இவ்வெற்றிகள் இந்தியாவில் ஆங்கிலேயர் நாடாளுகின்ற சக்தியாக மாறுவதைச் சாத்தியப்படுத்தின.

**இந்தியப் பொருளாதாரத்தைக் காலனிமயமாக்குதல்**

இந்தியாவைக் காலனிநாடாக்கிய செயல்பாட்டை மூன்று கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. முதற்கட்டம்: வாணிக முதலாளித்துவம்
2. இரண்டாம் கட்டம்: தொழில்துறை முதலாளித்துவம்
3. மூன்றாம் கட்டம்: நிதி மூலதன முதலாளித்துவம்

**முதற்கட்டம்: வணிக முதலாளித்துவம் (நேரடிக் கொள்ளை, 18 ஆம் நூற்றாண்டு)**

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு சிறிய சக்தியாகவே இருந்தது. கடற்கரைப் பகுதிகளிலுள்ள தங்களது வாணிக நிலையங்களுக்கான சலுகைகளுக்காக அது இந்திய அரசர்களைச் சார்ந்திருந்தது. ஆனால் மிக விரைவாக நாட்டின் உட்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளி வகைகளையும் பிற பொருள்களையும் தங்களிடம் விற்கும் உள்நாட்டு வணிகர்களோடு வலுவான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டது. இந்தியாவில் சில பகுதிகளைப் பெறுவதற்கு முன்னர் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி துணி, பட்டு, வண்ணப் பூ வேலைப்பாடுகளுடன் கூடிய துணிகள் ஆகியவற்றில் வாணிகத்தை மேற்கொண்டு பெரும் இலாபம் ஈட்டியது. இந்திய தேசியவாத பொருளாதார நிபுணருமான ஆர்.சி. தத் “நெசவுத் தொழிலானது மக்களின் தேசியத் தொழில் என்றும், நூல் நூற்றல் இலட்சக்கணக்கான பெண்கள் செய்துவந்த வேலையாகும்” என்றார். இந்தியத் துணி வகைகள் இங்கிலாந்திற்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும், சீனா, ஜப்பான், பர்மா, அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளுக்கும், ஆப்பிரிக்காவின் சில பகுதிகளுக்கும் சென்றன. இக்காலகட்டத்தில் தான் லங்காஷையர், பர்மிங்காம் நகரங்களைச் சேர்ந்த ஜவுளி வாணிகர்கள் இந்தியத் துணிகள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடை செய்யும் சட்டத்தை இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றச் செய்தனர். இந்தியப் பருத்தி இழைத் துணிகளை யாராவது வைத்திருந்தாலோ அல்லது அவை தொடர்பான செயல்களில் ஈடுபட்டாலோ அவர்களுக்கு 200 பவுண்டுகள் அபராதம் விதிக்கப்பட்டது என்றும் அவர் கூறுகிறார்.

1750 களிலும் 1760 களின் தொடக்கத்திலும் ராபர்ட் கிளைவ் பழைய முகலாயப் பேரரசின் செல்வச் செழிப்பு மிக்க பகுதியைத்தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். கிழக்கிந்தியக் கம்பெனி, சுதேச அரசுகளைக் கட்டாயப்படுத்திச் சில சலுகைகளைப் பெற்றது. தனது பொருள்கள் இடம் விட்டு இடம் செல்கையில் செலுத்த வேண்டிய வரிகளிலிருந்து விலக்கு பெற்றது. ஆனால் அதே வரியை இந்திய வணிகர்கள் செலுத்தி ஆக வேண்டும். பிளாசி போருக்குப் (1757) பின்னர் கம்பெனி 1.2 மில்லியன் பவுண்டுகளைப் பெற்றது. ராபர்ட் கிளைவ் மட்டுமே 31,500 பவுண்டுகளை பெற்றிருந்தார். அதைத் தவிரவும் ஆண்டுக்கு 27,000 பவுண்டுகள் வருமானத்தைத் தரும் ஜாகீரையும் பெற்றார். பக்ஸார் போருக்குப் (1764) பின்னர் முர்ஷிதாபாத் கருவூலகம் கொள்ளையடிக்கப்பட்டது. 1765 இல் கம்பெனி நில வரிவசூல் செய்யும் உரிமையைப் பெற்று முகலாயப் பேரரசிற்கு இடைத்தரகரானது.

**1.**

2. **இரண்டாம் கட்டம்: தொழில்துறை முதலாளித்துவம் (பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதி)**
பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கம்பெனி ஒரு சில பகுதிகளை ஆளுகின்ற சக்தியாக உருவெடுத்தது. இக்காலப்பகுதியில் இந்தியாவானது இங்கிலாந்து நாட்டு துணிகளுக்கான சந்தையாகவும் கச்சாப் பொருட்களுக்கான மூலாதாரமாகவும் மாற்றப்பட்டது. கம்பெனி அரசு பின்பற்றிய விரிவாக்கக் கொள்கை பிராந்திய அரசுகளோடு பல போர்கள் மூள்வதற்கு வழிவகுத்தது. இப்போர்களுக்கான செலவுகள் இந்தியாவின் மீது சுமத்தப்பட்டன.

3. **மூன்றாம் கட்டம்: நிதி மூலலதன முதலாளித்துவம் (பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதி):**
இக்கட்டத்தில் மேலாண்மை முகவர் நிறுவனங்கள், ஏற்றுமதி - இறக்குமதி நிறுவனங்கள், நாணயமாற்று வங்கிகள் ஆகியவை செழித்தோங்கின. இங்கிலாந்தில் உபரியாக இருந்த பெருமளவிலான நிதியை முதலீடு செய்வதற்கான வழிகளைக் கண்டறிய முயன்ற கம்பெனி அரசு, இருப்புப்பாதை அமைத்தல், முதலீடு செய்வதற்கான வழிகளைக் கண்டறிய முயன்ற கம்பெனி அரசு, இருப்புப்பாதை அமைத்தல், அஞ்சல் துறை, நீர்ப்பாசனம், நவீன வங்கித்துறை, கல்வித்துறை ஆகியவற்றில் மிகப் பெருமளவிலான முதலீட்டினைச் செய்தது, கொண்டு செல்லப்பட்ட நிதியின் கணிசமான பகுதி இருப்புப்பாதை அமைக்கும் தொழிலில் முதலீடு செய்யப்பட்டது. ரயில் போக்குவரத்து, ஆங்கிலப்படைகள் நாட்டின் பல பகுதிகளுக்கு விரைவாகச் செல்வதற்கு உதவியது. மேலும் இந்தியச் சந்தையின் பெரும்பகுதியைக் கைப்பற்றவும் உதவியது. இந்தியாவில் அடிமைமுறை 1843 இல் ஒழிக்கப்பட்டுவிட்டால் கம்பெனி ஒப்பந்தக்கூலி முறையை அறிமுகம் செய்தது.

**ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கம்:**

**வேளாண்மைச் சூழல்:**

கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் இங்கிலாந்தில் ஒரு பெரிய நிலப்பிரபு ஆவார். ஆங்கில முறையை முன்மாதிரியாகக் கொண்டு இந்தியாவிலும் நிலப்பிரபுக்களை உருவாக்க அவர் திட்டமிட்டார். முகலாயர் ஆட்சிக் காலத்திலேயே நிலவரியை வசூல் செய்து அரசுக்குச் செலுத்திவந்த இடைத்தரகர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்த காரன்வாலிஸ் அவர்களை நிலப்பிரவுக்களைப்போல் நடத்தினார். இதன் விளைவாக இந்தியாவில் முதன்முறையாக ஜமீன்தார்கள் என்ற பெயரில் நிலப்பிரபுக்கள் எனும் வர்க்கத்தார் உருவாக்கப்பட்டனர். நிலங்களுக்கு உரிமையாளர்களாக மாறிய இவர்கள் தங்கள் சொத்துக்களை மற்றவர்களுக்கு விற்கவும், வாரிசாக நிலங்களைப் பெறவும் உரிமை பெற்றனர். மறுபுறம் விவசாயிகள் வெறும் குத்தகைதாரர்களாக மாற்றப்பட்டனர்.

கம்பெனி அரசு ஜமீன்தார்களுடன் நேரடித்தொடர்பு வைத்துகொண்டு குத்தகைதாரர்களுடன் தங்கள் விருப்பம் போல் நடந்துகொள்ள ஜமீன்தார்களுக்கு முழு சுதந்திரம் அளித்தது. வங்காளம், பீகார், ஒடிசா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஜமீன்தார்களுடன் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்வு நிலையான நிலவரித்திட்டம் (1793) என அழைக்கப்பட்டது.

ரயத்துவாரி முறை என்பது தென்னிந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்ட வேறுபட்ட நிலவருவாய் வரி முறையாகும். இம்முறையின்படி விவசாயி நிலத்தின் உரிமையாளர் ஆவார். அவரே வரி செலுத்துவார். இடையீட்டாளர் அல்லது நிலவரி வசூலிப்பவர் இடையீடு இல்லாமல் அரசே விவசாயியுடன் நேரடித் தொடர்பில் இருக்கும். நிலவரியை ஒரு விவசாயி முறையாகச் செலுத்தும் வரை நிலம் அவருக்குச் சொந்தமானதாக இருக்கும். நிலவரி செலுத்தத் தவறினால் அவர் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவார். மேலும் அவருக்குச் சொந்தமான கால்நடைகளையும் ஏனைய உடைமைகளையும் அரசு பறிமுதல் செய்துகொள்ளலாம். நிலத்தில் தனிச்சொத்துரிமை எனும் கோட்பாட்டை ரயத்துவாரிமுறை அறிமுகம் செய்தது. தனிநபருக்குச் சொந்தமான நிலங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டன. தனது நிலங்களை விற்கவும், அடகு வைக்கவும், குத்தகைக்கு விடவும், நிலத்தின் மீதான தனது உரிமையை வேறொருவருக்கு வழங்கவும் விவசாயி உரிமை பெற்றிருந்தார்.

**நிலவரி வருவாயும் விவசாயிகள் வறுமைக்கு ஆளாக்கப்படுதலும்:**

ஆங்கிலேயரின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாகத் திகழ்ந்த நிலவரி கட்டாயமான முறைகளில் வசூல் செய்யப்பட்டது. பஞ்சக்காலங்களில் கூட நிலவரி செலுத்துவதிலிருந்து விவசாயிகளுக்கு விலக்கு அளிக்கப்படவில்லை. நிலப் பிரபுக்களுக்கு குத்தகைத் தொகை வழங்கவும், அரசுக்கு நிலவரியைச் செலுத்தவும், நிலம் உட்பட்ட தங்களது சொத்துக்களை விவசாயிகள் அடமானம் வைக்கும் அல்லது விற்றுவிடும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டனர். அரசாங்கம் கடன் வசதிகள் செய்து தராததால், விவசாயிகள் கடன்பெற வட்டிக்கடைக்காரர்களையே சார்ந்திருந்தனர். வட்டிக்குக் கடன் வழங்குவதைத் தொழிலாகக் கொண்டவர்கள் ஒரு குறிப்பிட்ட கடன் வழங்கும் முறையைப் பின்பற்றினர். கடன் வழங்குவோர் மகஜன், சௌக்கார், போரா போன்ற பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். தமிழ்மொழி பேசப்பட்ட பகுதிகளில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடன் வழங்குவதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர்.

காலனியரசு ”வேளாண்மையை வணிகமயமாக்கும்“ கொள்கையைப் பின்பற்றியது. வணிகப் பயிர்களான பருத்தி, சணல், வேர்க்கடலை, எண்ணெய் வித்துக்கள், கரும்பு, புகையிலை ஆகியன சந்தை நிலவரங்களுக்கு ஏற்றவாறு உணவு தானியங்களைக் காட்டிலும் லாபகரமான விலையைப் பெற்றுத்தந்தன. இதனால் விவசாயிகள் தங்கள் கடனை அடைக்கவும் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தவும். சொந்த நுகர்வுக்குத் தேவையான உணவுப் பயிர்களைக் காட்டிலும் சந்தைக்குத் தேவையான பயிர்களை மட்டுமே உற்பத்தி செய்யத் தொடங்கினர். இந்திய விவசாயி தன்னுடைய வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்யப் பன்னாட்டுச் சந்தையின் விலை நிலவரங்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை உருவாகிறது. சந்தைச் செயல்பாடு பற்றிய அறியாமையால் பன்னாட்டுச் சந்தையோடு இணைக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தைகளில் வேளாண் பொருள்களுக்கான தேவை வீழ்ச்சியுற்ற போது விவசாயிகள் துயரங்களுக்கு உள்ளாயினர்.

**கர்னல் பென்னிகுயிக்:** பென்னிகுயிக் ஓர் இராணுவப் பொறியாளரும், குடிமைப்பணியாளரும், சென்னை மாகாணச் சட்டமன்ற மேலவை உறுப்பினரும் ஆவார். மேற்கு நோக்கி ஓடும் பெரியார் ஆற்றின் நீரை ஓர் அணையைக் கட்டி கிழக்கு நோக்கித் திருப்பினால் வைகை ஆற்றைச் சார்ந்திருக்கும் இலட்சக்கணக்கான புன்செய் நிலங்களைப் பாசன வசதி கொண்டவையாக

மாற்ற முடியும் என அவர் முடிவு செய்தார். பென்னிகுயிக்கும் ஏனைய ஆங்கிலேயப் பொறியாளர்களும் இயற்கையின் சீற்றத்தையும் வனவிலங்குகள், விஷ உயிரினங்கள் ஆகியவற்றின் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு அணையின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட போது இடைவிடாத மழையால் இடையூறுகள் ஏற்பட்டன. ஆங்கிலேய அரசிடமிருந்து போதுமான அளவுக்கு நிதியைப் பெறமுடியாத நிலையில் பென்னிகுயிக் இங்கிலாந்து சென்று தனது குடும்பச் சொத்துக்களை விற்று, அப்பணத்தைக் கொண்டு அணையைக் கட்டி முடித்தார். அணைக்கட்டும் பணிகள் 1895 இல் முடிவுற்றன. முல்லைப் பெரியார் அணை, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட வேளாண் நிலங்களுக்குத் தொடர்ந்து பாசன வசதி அளித்து வருகிறது.

**நீர்ப்பாசனம்:**

ஆங்கிலேயர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல்பாதிக் காலப்பகுதியில் நீர்ப்பாசனத்தைப் புறக்கணித்தனர். 19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தொடங்கி குறிப்பிட்ட இடைவெளிகளில் தொடர்ந்து ஏற்பட்ட பெரும் பஞ்சங்களால் இலட்சக்கணக்கான மக்கள் பலியான பின்னர் சில முக்கியமான பாசனக் கால்வாய்கள் வெட்டப்பட்டன. இதன் பின்னரும் பாசனக் கால்வாய்கள் வெட்டப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மிகக் குறைவாகவே இருந்தது. மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஆர்த்தர் காட்டன், பென்னிகுயிக் போன்ற ஆங்கிலேய அதிகாரிகளும் பொறியாளர்களும் மேற்கொண்ட முன் முயற்சியால் பாதுகாக்கப்பட்ட நீர்ப்பாசன கால்வாய்கள் சில இடங்களில் சாத்தியமாயின. எங்கெல்லாம் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ அங்கெல்லாம் ஆங்கிலேயர் அதிகமான தீர்வை வசூலித்தனர். ஏற்கனவே கொடூரமான நிலவரி வசூலின் கீழ் இருந்த விவசாயிகள் மேன்மேலும் அவதியுற நேர்ந்தது.

**பஞ்சங்கள்:**

காலனியரசின் சுதந்திர வணிகக் கொள்கையும் கடுமையான நிலவரி வசூல் முறையும் பஞ்சங்கள் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன. 1866 – 1867 இல் ஏற்பட்ட ஒடிசா பஞ்சம் அப்பகுதியின் வரலாற்றில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வாகும். இப்பஞ்சத்தில் அப்பகுதிவாழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்தனர். 1876 – 1878 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரும் பஞ்சம் (தமிழில் தாது வருடப் பஞ்சம் என அழைக்கப்பட்டது) தென்னிந்தியாவைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களையும் கைவினைஞர்களையும் இங்கிலாந்தின் எனைய குடியேற்றங்களுக்குக் குடிபெயர வைத்தது. அங்கு அவர்கள் பெருந்தோட்டங்களில் ஒப்பந்தக் கூலிகளாய் வேலை செய்தனர். இந்தியாவில் இப்பஞ்சம் ஒரு கோடியே மூன்று இலட்சம் மக்களின் உயிர்களைப் பலி கொண்டது.

சென்னை மாகாணத்தில் 1876 – 1878 ஆம் ஆண்டுகளில் நிலவிய பஞ்சத்திற்கு முன்னதாக வறட்சி நிலவியது. காலனியரசு உணவு தானிய வாணிகத்தில் பின்பற்றிய தலையிடாக் கொள்கை நிலைமையை மேலும் மோசமாக்கியது. எடுத்துக்காட்டாக சென்னை மாகாணத்தில் இப்பஞ்சத்தால் மிக மோசமான பாதிப்புக்குள்ளான கஞ்சம், விசாகப்பட்டினம் ஆகிய இரு மாவட்டங்களிலிருந்து இப்பஞ்சக்காலத்திலும் உணவ தானியங்கள் ஏற்றுமதி செய்வது தொடர்ந்து நடைபெற்றது. பஞ்சத்தைத் தொடர்ந்து வழக்கம் போல் பிளேக் (இறந்துபோன எலிகளால் பரவும் கொள்ளைநோய்), நீர்க் கோப்புடன் கூடிய கடுமையான

காய்ச்சல் போன்ற பல தொற்றுநோய்கள் பரவி ஏற்கனவே பட்டினியால் பலவீனமடைந்த மக்களைத் தாக்கிக் கொன்றன. இப்பஞ்சத்தைப் பற்றிய நினைவுகள் இன்றளவும் நாட்டுப்புறப் பாடல்களிலும் நீண்ட கதைப்பாடல்களிலும் நின்று நிலவுகின்றன.

**ஒப்பந்தக் கூலி முறை:**

ஒப்பந்தக் கூலி முறையானது பெற்ற கடனுக்காக உழைப்பை நல்கும் ஒரு ஒப்பந்த முறையாகும். இதன் மூலம் 35 இலட்சம் இந்தியர்கள் பல ஆங்கிலேயக் குடியேற்றங்களுக்குப் பெரும் பண்ணைகளில் (பெரிதும் கரும்புத் தோட்டங்களில்) வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இம்முறை 1843 இல் இந்தியாவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டபோதும் தொடங்கப்பட்டு, 1920 வரை நீடித்தது. இதனால் பெரும் எண்ணிக்கையிலான இந்தியர்கள் புலம் பெயர்ந்து இந்தியப் பெருங்கடல் (ரீயூனியம், மொரீசியஸ்) முதலாக பசிபிக் பெருங்கடல் (பிஜித் தீவுகள்) வரை பரவி, இந்தோ – கரீபிய, இந்தோ – ஆப்பிரிக்க மக்கள் தொகை பெருகுவதற்குக் காணமாயினர்.

ஒப்பந்தக் கூலிமுறை என்பது தண்டனைக்குரிய ஓர் ஒப்பந்த முறையாகும். இவ்வொப்பந்தத்தின் படி ஒப்பந்தக் கூலியான ஒருவர் வேலை செய்ய மறுத்தாலோ, வேலைக்கு வராமல் போனாலோ, அவருடைய முதலாளியின் ஆணைகளுக்குப் பணிய மறுத்தாலோ பணியிடத்தில் காணப்படாவிட்டாலோ அவர் ஊதியம் மறுக்கப்படுதல் அல்லது சிறைத் தண்டனைகளுக்கு உள்ளாவார். 1842 – 1870 ஆகிய ஆண்டுகளுக்கிடையே மொத்தம் 5,25,482 இந்தியர்கள் இங்கிலாந்து, பிரான்சு ஆகியவற்றுக்குச் சொந்தமான காலனிகளில் குடியேறினர். அவர்களில் 3,51,401 பேர் மொரீசியசுக்கும், 76,691 பேர் டிமெராராவுக்கும், 42,519 பேர் டிரினிடாருவுக்கும், 15,169 பேர் ஜமைக்காவுக்கும், 6,448 பேர் நேட்டாலுக்கும், 15,005 பேர் ரீயூனியனுக்கும் சென்றனர். ஏனைய பிரெஞ்சு காலனிகளுக்கு 16,341 பேர் செய்தனர். ஏற்கெனவே மொரீசியஸ் சென்ற 30,000 நபர்களையும் இலங்கை, மலேசியா ஆகிய இடங்களுக்கு சட்டத்திற்குப் புறம்பாகப் பிரெஞ்சுக் காலனிகளுக்கும் அனுப்பப்பட்டவர்களையும் மேற்சொன்ன புள்ளிவிவரக் கணக்கில் சேர்க்கவில்லை. இவ்வாறாக 1870 களில் ஒப்பந்தக் கூலிமுறை, இந்தியத் தொழிலாளர்களைக் கடல் கடந்த காலனிகளுக்கு அனுப்புவது, சட்டரீதியாக ஐரோப்பியக் காலனிகளிலுள்ள பெரும் பண்ணைகளுக்கு அடிமை உழைப்பை வழங்கியது.

பிரிட்டிஷ் இந்தியாவில் பஞ்சங்கள்: 1770 ஆம் ஆண்டு வங்காளப் பஞ்சம் மிகப் பெருமளவில் ஒரு கோடி மக்களின் அல்லது ஏறத்தாழ வங்காள மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரின் உயிரைக் குடித்தது. இவ்வாறு தான் ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவில் தொடங்கியது. இதைப் போலவே ஆங்கிலேயரது ஆட்சி முடியும் தருவாயில் 1943 இல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் முப்பது இலட்சம் மக்களைப் பலி கொண்டது. 1998 இல் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் ஒரு சிறுவனாகக் கொல்கத்தாவின் வீதிகளில் பஞ்சத்தால் மனிதர்கள் செத்து மடிந்ததைப் பார்த்தார். அது குறித்து அவர் வழக்கமான ஆய்வுப்பாதையிலிருந்து விலகிப் புதிய பரிமாணத்தில் ஆய்வு செய்துள்ளார்.

## 11TH வரலாறு
## தொகுதி – 2
## அலகு 16
## ஐரேப்பியரின் வருகை

### அறிமுகம்

1757 ஆம் ஆண்டு நடைபெற்ற பிளாசிப் போரில் வங்காள நாவாப்பை ஆங்கிலேயர் வெற்றிகொண்ட பிறகு அந்த ஆண்டை இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம் என்று வரையறுப்பது மரபு. ஆனால் ஐரோப்பியர் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்தியாவிற்கு வந்துவிட்டனர். அவர்களின் நோக்கம் ஐரோப்பியச் சந்தைக்குத் தேவையான மிளகு, இலவங்கம், கிராம்பு முதலான நறுமணப் பொருட்களைக் கொள்முதல் செய்வதும் இந்தியப் பெருங்கடல் பகுதி வணிகத்தில் ஈடுபடுவதுமாகும்.

இந்தியாவில் முதலாவதாகத் தங்களை நிலைநிறுத்திக் கொண்ட ஐரோப்பியர் போர்த்துகீசியரே. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவிற்கு நேரடிக் கடல்வழியைக் கண்டுபிடித்தவர் வாஸ்கோடகாமா ஆவார். பிறகு மேற்குக் கடற்கரைப் பகுதியில் போர்த்துகீசியர் கோவாவை 1510இல் கைப்பற்றினர். இதனால் இந்தியாவிலிருந்த போர்த்துகீசியருக்கும் கிழக்கே மலாக்கா, ஜாவா பகுதிகளுக்கும் கோவா அரசியல் தலைமையிடமானது. போர்த்துகீசியர் தங்களுடைய அரசியல் ஆக்கிரமிப்பு, வலுவான கப்பற்படை ஆகியவை மூலம் இந்தியப் பெருங்கடல் பகுதி வணிகத்தைத் தங்களின் முறையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். டையூ, டாமனிலிருந்த கோட்டைகள், கப்பற்படை வலிமை ஆகியவற்றின் துணைகொண்டு அரபிக்கடலின் கப்பல் போக்குவரத்தையும் அவர்களால் கட்டுப்படுத்த முடிந்தது. ஒரு நூற்றாண்டு கால இடைவெளிக்குப் பின்னர் இந்தியாவிற்கு வந்த ஐரேப்பியர் குறிப்பாக ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் தங்களின் நடவடிக்கைகளைப் போர்த்துகீசியரின் செயல்திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு வடிவமைத்துக் கொண்டனர். ஆகவே ஐரோப்பிய வணிக நிறுவனங்களின் வருகையானது இந்திய அரசியல் அதிகார சக்திகளோடும், உள்ளூர் வணிகர்கள் மற்றும் சமூகத்தோடும் தொடர்ந்து கொண்டிருந்த தொடர்பின் உச்சமே 1757இல் வங்காளத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பாடம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி இந்திய அரசியல் வரலாற்றையும், 1600க்கும் பின்னர் அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் விவாதிக்கிறது. இரண்டாம் பகுதி ஐரோப்பிய வணிக நிறுவனங்களின் வருகைகயயும் அவை ஒவ்வொன்றும் இந்தியச் சமுதாயத்தில் ஏற்படுத்தியத் தாக்கத்தினையும் விவாதிக்கிறது.

### அரசியல் நடவடிக்கைகள்
### முகலாயப் பேரரசு, 1600-1650

1600 முதல் 1650 வரையான காலப்பகுதியில் முகலாயப் பேரரசு அதிகாரத்தின் உச்சத்தில் இருந்தது. ஆங்கிலக் கவிஞர்கள் இந்தியாவின் செல்வ வளங்கள் குறித்து எழுதியுள்ளனர். இதனால் முகலாயப் பேரரசின்

வலிமை குறித்தும் பொருளாதார வளம் பற்றியும் ஐரோப்பியர் நன்கு அறிந்திருந்தனர். பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் பல பகுதிகளைச் சார்ந்த பயணிகள் தொடர்ந்து இந்தியாவிற்கு வந்தானர். அவர்களின் பயணக் குறிப்புகள் முகலாயப் பேரரசு மற்றும் அக்காலச் சமூகம் குறித்த விரிவான சமகால விவரங்களைத் தருகின்றன.

அக்பர் 1600களில் ராஜஸ்தானையும் குஜராத்தையும் கைப்பற்றி முகலாயப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தியதன் மூலம் தனது ஏகாதிபத்தியக் கனவுகளை நிறைவேற்றினார். இதனால் மேற்காசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நுழைவாயிலாக இருந்த, மதிப்பு மிக்க வளங்களைக் கொண்ட துறைமுகமான சூரத் முகலாயரின் செல்வாக்கிற்கு உள்ளானது. வணிகம் தவிர மெக்காவிற்குப் புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயணிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் சூரத்திலிருந்தே புறப்பட்டுச் சென்றன. முகலாய அரசு சூரத் நகரத்திற்கு இரண்டு ஆறுநர்களை நியமித்திருந்தது. ஓர் ஆளுநர் நகரைப் பாதுகாப்பதற்காகத் தபதி நதியின் அருகே கட்டப்பட்டிருந்த, கண்காணிப்புக் கோபுரங்களுடன் கூடிய காவல் அரணில் பணியமர்த்தப்பட்டிருந்தார். மற்றொரு ஆளுநர் நகரம் தொடர்பான நிர்வாகத்திற்கும் சுங்க வரியை வசூலிப்பதற்கும் பொறுப்பாவார். இந்த நிர்வாக ஏற்பாடே முகலாயப் பேரரசுக்குச் சூரத் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்த்தும்.

அக்பர் வங்காளத்தைக் கைப்பற்றி பீகாருக்கும் கிழக்கே தனது பேரரசை விரிவுப்படுத்த முயன்றார். எனினும் அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு வங்காளம் முகலாயப் பேரரசோடு ஒருங்கிணைக்கப்படாத பகுதியாகவே இருந்தது. பின்னர் பேரரசர் ஜஹாங்கீர் காலததில்தான் வங்காளம் முகலாயப் பேரரசின் மாகாணங்களில் (சுபா) ஒன்றாயிற்று. அகபர் காலத்தில், தோடர்மாலின் வழிகாட்டலில் பேரரசின் வருவாய்த்துறை நிர்வாகம் முற்றிலும் சீரமைக்கப்பட்டதால் பேரரசு முழுவதும் ஒரே சீரான நிர்வாகமும் வரிவாசூலும் நடைபெற்றது. அக்பர் தனது மறைவின்போது வலுவான, பொருளாதார வளம் மிகுந்த, நன்கு நிர்வகிக்கப்பட்ட பேரரசை விட்டுச் சென்றார். டச்சுக்காரரும், அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயரும் 1600களின் தொடக்க ஆண்டுகளில் வணிக நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காகச் சூரத் வந்தனர். அவர்களுக்கு வணிகம் செய்வதற்கும், தங்களுடைய பண்டங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளக் கிட்டங்கிகளைக் கட்டிக்கொள்வதற்கும் முகலாய ஆளுநர் அனுமதியளித்தார். ஆனால் நகரின் எந்தப் பகுதியையும் தங்களின் சொந்தப்பகுதியாக உரிமை கொண்டாடும் வகையில் இடங்களைத் தர அவர் மறுத்துவிட்டார். இதனால் போர்த்துகீசியரை மாதிரியாகக் கொணடு, வணிகத்தளாம் அமைக்கும் தங்களுடைய ஆசை நிறைவேறாததால் டச்சுக்காரர் மனமுடைந்தனர்.ஸ

1668இல் பம்பாய் தீவுகளைப் பெற்று, அங்கு தங்கள் தலைமையிடத்தை ஆங்கிலேயர் 1687இல் ஏற்படுத்தினர். அவர்களின் அடிப்படை நோக்கமானது தங்களது வணிக நடவடிக்கைகளுக்கு பம்பாபைய மாற்று இடமாக உருவாக்குவதுதான். ஆனாலும் முகலாயரின் பாதுகாப்பிலிருந்த சூரத் வணிகர்களால் பெரிதும் விரும்பப்பட்ட வர்த்தக நடிக்கைகளின் மையமாகத் தொடர்ந்தது.

## விஜயநகருக்குப் பின் தென்னிந்தியா (1600-1650)

தென்னிந்தியாவின், குறிப்பாகத் தமிழகப் பகுதிகளில் இக்காலகட்டத்தில் முகலாயப் பேரரசின் மையப்படுத்தப்பட்ட உறுதியான அரசியல் நிலைக்கு நேர் எதிரான சூழல் நிலவியது. அரசியல் நிலைக்கு நேர் எதிரான சூழல் நிலைவியாது. அரசியல் ரீதியாக இப்பகுதிகள் பிளவுபட்டு ஓர் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருந்தன. விஜயநகர ஆட்சியின்போது தமிழகப் பகுதியில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய மூன்று நாயக்க அரசுகள் நிறுவப்பட்டன. இவை நிறுவப்பட்டதன் நோக்கமே மைய அரசுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களையும் மனித ஆற்றலையும் (இராணுவ வீரர்களை) திரட்டிக் கொடுப்பதுதான்.1565இல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய சுல்தானியக் கூட்டுப்படைகளால் விஜயநகர அரசு தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்னர் ஆதிக்கம் செய்த மைய அரசு வலிமை குன்றியது. விஜயநகரப் பேரரசின் அதிகாரத்தைப் பொயரளவிற்கு அங்கீகரித்த இந்த நாயக்க அரசுகள் நடைமுறையில் சுயாட்சி பொற்றவைகளாகச் செயல்பட்டன. அளவில் பெரிதான இந்நாயக்க அரசுகளோடு பல்வேறு பகுதிகள் உள்ளூர் ஆட்சியர்கள் வசமும் இருந்தன. அவர்களில் முக்கியமானவர் இராமநாதபுரம் அரசின் சேதுபதி ஆவார். அவரும் தன்னைச் சுதந்திர அரசராக நிலைநிறுத்திக் கொள்ள விரும்பினார். இத்தகைய நிச்சயமற்ற அரசியல் சூழலால் 1590க்கும் 1649க்குமிடையே இப்பகுதிகள் பல இராணுவ மோதல்களைக் கண்டன. தங்கள் மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக செஞ்சி, மதுரை, தஞ்சாவூர் அரசுகளும் பல போர்களைச் செய்தன. விஜயநகரப் பேரரசருக்கு எதிராகக் கிளர்ச்சிகளும் நடைபெற்றன. நடைபெற்றுக் கொண்டிருந்த இம்மோதல்கள் தவிர 1646இல் சோழமண்டலப் பகுதிகளை ஊடுருவிய கோல்கொண்டாவின் படைகள் பழவேற்காட்டிற்கும் சாந்தோமுக்கும் இடைப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன.

இக்காலகட்டத்தில் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் சில இடங்களைத் தங்களுக்குச் சொந்தமாதாகப் பெற்று அவற்றின் மேல் தங்கள் உரிமையை நிறுவினர். நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்யும் இந்தோனேசியத் தீவுகளுடனான வணிகத்திற்குத் தேவைப்படும் தீவுகளுடனான வணிகத்திற்குத் தேவைப்படும் சில்லறைப் பொருட்களைக் கொள்முதல் செய்யத் தங்களுக்குச் சோழமண்டலக் கடற்கரையில் வணிகத்தளம் தேவை என்பதை டச்சுக்காரர் உணர்ந்தனர். செஞ்சி நாயக்கரிடமிருந்து பழவேற்காடு பகுதியைப் பெற்ற அவர்கள் அங்கே ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டனர். தமர்லா வேங்கடாத்திரி நாயக்கர் எனபவரிடமிருந்து நிலத்தைப் பெற்ற ஆங்கிலேயர் அங்கு 1639இல் புனித ஜார்ஜ் வேங்கடாத்திரி நாயக்கர் எனபவரிடமிருந்து நிலத்தைப் பெற்ற ஆங்கிலேயர் அங்கு 1639இல் புனித ஜார்ஜ் கோட்டையைக் கட்டினர். இவ்வாறாக ஆங்கிலேய வணிகத் தளங்கள் சென்னையில் நிறுவப்பட்டு காலப்போக்கில் வளரந்து, மதராஸ் அதன் மாகாணத் தலைநகரமானது.

## முகலாயப் பேரரசு 1650-1700

பேரரசர் ஔரங்கசீப் தெற்கே தக்காணப்பகுதி வரை தனது பேரரசை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற பெருவிப்புடன் செயல்பாடுகளைத் தொடங்கினார். 1680களில் அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய அரசுகள் கைப்பற்றப்பட்டன. இதனால் சென்னைக்குத் தெற்கேயுள்ள பகுதிகளும் முகலாயரின் மைய ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டன. அளவுக்கு அதிகமாகப்

பெரிதாகிவிட்ட முகலாயப் பேரரசு விரைவில் தனது பலவீனங்களை வெளிக்காட்டத் தொடங்கியது. சிவாஜியின் தலைமையில் மராத்தியர்கள் ஒன்றுபட்டு அதிகாரத்திலும் இராணுவ பலத்திலும் வளர்ந்து, 1664இல் சூரத்தைச் சூறையாடுவது கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. ஆனால் 1670இல் மராத்தியரால் சூரத்தும் அதன் வணிகமும் சூறையாடப்பட்ட போது ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மீள்வதற்குப் பல ஆண்டுகள் ஆகின. தாங்கள் வெல்ல முடியாதவர்கள் என முகலாயர்கள் நினைத்ததற்கு இது பெரும் சவாலாக அமைந்ததோடு முகலாயப் பேரரசின் படிப்படியான சரிவுக்கு ஆரம்பமாகவும் அமைந்தது.

சூரத் தாக்குதலுக்குப் பின்னர், சிவாஜி தனது கவனத்தைத் தென்னிந்தியவை நோக்கித் திருப்பி செஞ்சி, தஞ்சாவூர் மராத்தியரால் ஆளப்படும் அரசாக நீடித்தது. மராத்திய அரசர்கள், தமிழரின் அறிவார்ந்த, கலாச்சாரப் பாரம்பரியங்களை உள்வாங்கி ஏற்கும் கொள்கையால் தமிழகப் பகுதியின் பண்பாட்டுத் தலைநகராகத் தஞ்சாவூரை மாற்றினர்.

**முகலாயப் பேரரசும் வழித்தோன்றல்களும் 1700-1750**

மாபெரும் முகலாய அரசர்களில் கடைசி அரசரான ஔரங்கசீப் 1707இல் இயற்கை எய்தினார். அவத், வங்காளம் ஐதராபாத், கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து முகலாய அரசப்பிரதி நிதிகள் தங்களைச் சுதந்திரமான ஆட்சியாளர்களாக அறிவித்துக் கொண்டனர். ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் முகலாயப் பேரரசின் வலிமைகுன்றிய பாதுகாப்பற்ற நிலையை நன்கு அறிந்திருந்தனர்.

வங்காள, கர்நாடக நவாப்புகள் பெருமளவிலான பணத்தை ஆங்கிலேயரிடமிருந்து கடனாகப் பெற்றனர். அத்தொகையைத் திருப்பிச் செலுத்தும் ஒரு வழியாகத் தங்களின் பரந்த நிலப்பகுதிகளில் நிலவரியை வசூல் செய்து கொள்ளும் உரிமையை ஆங்கிலேயருக்கும் வழங்கினர். வரி வசூலிப்பவர்களாக ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியதை இது குறிக்கிறது.

---

கர்நாடகம் என்பது உண்மையில் கன்னடமொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதியைக் குறிப்பதாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் இது மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கும் கிழக்குத் அமைந்துள்ள இன்றைய இந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, தொற்கு ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இப்பகுதிகளை ஆற்காட்டு நவாப் கட்டுப்படுத்தினார்.

---

டச்சுக்காரர் இதற்குள் பழவேற்காட்டிலிருந்து வெளியேறி தங்களின் தலைநகரை நாகப்பட்டினத்திற்கு மாற்றியிருந்தனர். இதே காலத்தில் சென்னை செழிப்பு மிக்க நகரமாக வளர்ச்சியடைந்திருந்தது. ஆங்கிலேயர் பல ஆண்டுகாலப் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாயிருந்தனர்.சூரத் நகரின் உள்ளூர் வணிகர்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி, தாங்கள் டச்சுக்காரரின் அல்லது ஆங்கிலேயரின் ''பாதுகாப்பின் கீழ்'' இருப்பதாக1750இல் அறிவித்துக் கொண்டன்ர். எனவே உறுதியற்ற அரசியல் சூழலால் சூரத் அல்லலுற்றது. இதனால் பம்பாய் மற்றும் வணிகத்தளமாக மாறி, சூரத்திலிருந்தும் குஜராத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வணிகர்களை ஈர்க்கத் தொடங்கியிருந்தது.

## பொருளாதாரம்
## வேளாண்மை

கிராமப்புற வாழ் மக்களில் பெரும்பாலோர் தங்கள் வாழ்க்கைக்கு வேளாண்மையைச் சார்ந்திருந்தனர். உணவுதானியப் பயிர்களுடன் கூடுதலாக கரும்பு, எண்ணெய்வித்துக்கள், பருத்தி, அவுரி உள்ளிட்ட வணிகப் பயிர்களும் பயிர் செய்யப்பட்டன. இந்தியாவிற்குள் உபரியான பகுதியிலிருந்து பற்றாக்குறைப் பகுதிகளுக்கு உணவுதானியங்கள், நெய், சர்க்கரை முதலான உணவுப் பண்டங்களைக் கொண்டு சென்றதன் மூலம் விறுவிறுப்பாக வணிகம் நடந்தது. குறிப்பாக உணவுதானியங்கள் படகுகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. தமிழகம், உணவு தானியங்களை ஆந்திர பிரதேசத்திலிருந்தும் வங்காளத்திலிருந்தும் இறக்குமதி செய்தது. குஜராத் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மிளகு, இலவங்கம், இஞ்சி ஆகியவற்றுக்குப் பதிலாக உணவுதானியங்களை மலபார் பகுதிக்கு ஏற்றுமதி செய்தது. இலங்கையிலும் பட்டாவியாவிம் (இந்தோனேசியா) இருந்த டச்சுகுடியேற்றங்களுக்கும் உணவு தானியங்கள் அனுப்பப்பட்டன.

## பருத்தி உற்பத்தி

இந்தியா பொருள் உற்பத்திக்கான வலுவான அடிப்படைத்தளத்தைப் பொற்றிருந்து. குறிப்பாக நாட்டின் பல்வேறு மையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியிழைத் துணிகளுக்க அது செய்யப்பட்ட பருத்தியிழைத் துணிகளுக்காக அது புகழ் பெற்றிருந்து. நெசவுத் தொழில் நாட்டின் இரண்டாவது முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. இதற்கு ஆதாரத் துணை நடவடிக்கைகளாக நூம் நூற்றலும் சாயத் தொழிலுமிருந்தன. கைவினைப் பொருளுற்பத்தி நகர்ப்புறம் கிராமப்புறம் ஆகிய இரண்டிலும் நடைபெற்றது. ஆடம்பரத் தொழில்கள் (எடுத்துக்காட்டாக உலோக வேலைகள்) நகரங்கள் சார்ந்தனவாக இருந்தன. நெசவுத் தொழில் பெரும்பாலும் கிராமங்களில் மேற்கொள்ள்ப்பட்டது. கிராமப்புறங்களில் அமைந்தது. படிகாரம் போன்ற வேதியியல் பொருட்களைப் பயன்படுத்தி நிரந்தர வண்ணங்களைத் தயாரித்தும் துணிகளுக்குச் சாயமேற்றுவதில் இந்தியக் கைவினைச் சமூகங்கள் சிறப்பான அறிவினையும் நிபுணத்து வத்தையும் பெற்றிருந்தன. சோழமண்டலப்பகுதி வண்ணம் பூசப்பட்ட ‘கலம்காரி’ எனப்படும் துணி வகைக்குப் பெயர் பெற்றதாகும். இவ்வகைத் துணியில் அலங்காரக் கோடுகளோ அல்லது வரையப்பட்டு பின்னர் சாயம் ஏற்றப்படும். இது பதினாறாம் நூற்றாண்டில் தொன்கிழக்கு ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தோனேசியத் தீவுகளில் வாழும் மக்கள் விரும்பி வாங்கும் நுகர்வுப் பொருளானது. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஏனைய உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் மிக முக்கியமானவை துணிகளேயாகும். பதினெட்டாம் நூற்றாண்டு வரை இந்நிலை தொடர்ந்தது.

## சந்தைப்படுத்துதல்

வெளிச் சந்தைக்கான உற்பத்தியும் பரந்து விரிந்திருந்தது. இதனால் சொந்தத் தேவை என்ற எல்லையைத் தாண்டி பொருளுற்பத்தி வணிகமயமாயிருந்தது. இதற்குச் சந்தைப்படுத்தும் முகமை அமைப்புகள் தேவைப்பட்டன. இவை உற்பத்தியாளரிடமிருந்து வேறுபட்ட வணிக வர்க்கத்தினர் அடங்கிய அமைப்புகளாகும். இவ்வாறு வணிகர்கள் கிராம்ப்புறப் பகுதிகளில் பரவலாக இருந்த உற்பத்தியாளர்களை உள்நாட்டிற்குள் இருந்த

உற்பத்தியாளர்களை உள்நாட்டிற்குள் இருந்த நகரத் சந்தைகளோடும் நாட்டுக்கு வெளியேயிருந்த வெளிச் சந்தைகளோடும் இணைத்தனர். நாட்டிலிருந்த விரிவான ஒருங்கிணைந்த வணிக நடவடிக்கைகள் பல சுற்றுகளில் செயல்பட்டன. பொருள்கள் கிராமப்புறச் சந்தைகளிலிருந்து மண்டல அளவிலான சந்தைகளுக்கும், அடுத்து பெரிய நகர வணிக மையங்களுக்கும் சென்று இறுதியாகத் துறைமுகங்களைச் சென்றடைந்தன. அவையே நாட்டிற்கு வெளியேயுள்ள சந்தைகளுக்கான வாயில்களாகும்.

**வணிகக் குழுக்கள்**

பல்வேறு நிலைகளில் செயல்பட்ட பல்வகைப்பட்ட சந்தைகளைப் போலவே வணிகர்களும் ஒரே வகைப்பட்ட குழுவைச் சார்ந்தவர்கள் அல்ல. சிறிய இடங்களிலிருந்த சந்தைகளுக்குச் சேவை செய்ய வியாபாரிகளும் சில்லரை வர்த்தகர்களும் இருந்தனர். வணிக நடவடிக்கைகளை ஒரு பிரமிடாக நாம் கற்பனை செய்து கொண்டால் இவ்வணிகர்கள் பிரமிடின் அடித்தளப் பகுதியிலிருந்தனர். பிரமிடின் உச்சத்தில் பெரும் வர்த்தகர்கள் இருந்தனர். பெருமளவிலான மூலதனத்தைக் கையிருப்பாகக் கொண்ட இவர்களே கடல் வணிகத்தை முன்னின்று இயக்கியதோடு, துறைமுகங்களின் கடலோரப் பகுதியைச் சேர்ந்த உற்பத்தியாளர்களையும் கட்டுப்படுத்தினர். துணைத்தரகர்களையும் பணியமர்த்தி உள்நாட்டு பகுதிகளிலோ துறைமுக நகரங்களின் உட்பகுதிகளிலோ உற்பத்தியாகும் பொருட்களைக் கொள்முதல் செய்தனர். இவர்களை வணிகர்களின் பிரமிடில் இடை அடுக்கைச் சார்ந்தவர்களாகக் கருதலாம்.

**வங்கித் தொழிலும் வணிக முதலீட்டாளரின் எழுச்சியும்**

பரந்து இத்ததைய வணிகத்தை மேம்படுத்த வணிக நிறுவனங்களும் நன்கு வளர்ந்திருந்தன. பல்வகைப்படட நாணயங்கள் புழக்கத்திலிருந்த்தால், அவற்றின்கு தூய்மை நிலையைப் பரிசோதிக்கவும் அவற்றின் மதிப்பை அன்றைய அளவில் மதிப்பிடவும் ‘சராப்’ (ளூாசழகசள) எனப்பட்ட பணம் மாற்றுவோரும் இருந்தனர். அவர்கள் உள்ளூர வங்கியாளராகவும் செயல்பட்டனர்.ஓரிடம் விட்டு மற்றோரு இடத்திற்குப் பணத்தை ரொக்கமாக அனுப்புவதற்குப் பதிலாக வணிகர்கள் பணமாற்று முறிகளை (**Bills of Exchange)** வழங்கினர். உண்டி என்றழைக்கப்பட்ட இவை பல்வேறு இடங்களில் ‘சராப்’களால் குறிப்பிட்ட தள்ளுபடியோடு பணமாக மாற்றப்பட்டன.

நன்கு வளர்ந்த உள்கட்டுமானங்களோடும் அமைப்புகளோடும் இருந்த வணிகம், பணம் படைத்த வணிகர்களுக்கு மேலும் பெரும் செல்வத்தை ஈட்ட உதவியது. இவ்வகையான வணிக இளவரசர்களை அல்லது முதலாளிகளை நாம் இந்தியா முழுவதும் காணலாம். சூரத்திலிருந்த பனியா, பார்சி வணிகர்கள், அகமதாபாத்தின் நகர்சேத்துகள், வங்காளத்து ஜெகத் சேத்துகள் சோழமண்டலப்பகுதியைச் கூறலாம். சமகால ஐரோப்பியப் பார்வையாளர்கள், வணிகத்தில் வரும் இலாபம் அனைத்தையும் பெருவணிகர்களான இவர்களே கைவசப்படுத்திக் கொண்டதால், அடிப்படையில் உற்பத்தி செய்பவர்களான விவசாயிகள், அகமதாபத்தின் நகர்சேத்துகள், வங்காளத்து ஜெகத் சேத்துகள் சோழமண்டலப்பகுதியைச் சேர்ந்த நகரத்தார் ஆகியோரை எடுத்துக்காட்டாகக் கூறலாம். சமகால ஐரோப்பியப் பார்வையாளர்கள், வணிகத்தில் வரும் இலாபம் அனைத்தையும் பெருவணிகர்களான இவர்களே கைவசப்படுத்திக் கொண்டதால், அடிப்படையில் உற்பத்தி செய்பவர்களான விவசாயிகள், நெசவாளர்கள்

போன்றோரின் வருமானமும் வாழ்க்கையும் இரங்கத்தக்க நிலையில் இருந்தது எனக் குறிப்பிடுகின்றனர்.

ஆங்கிலேயர் நடுநிலைமை தவறி சார்புத் தன்மையுடன் இவ்வாறு கூறியுள்ளனர் என்று நினைத்தாலும், பிறருடைய கருத்துக்களை எடுத்துக்கொள்ளாமல் முழுமையான அளவுகோல்களைக் கொண்டு கணித்தாலும் அடிப்படைத் தொழிலாளர்களின் ஊதியமும் வாழ்க்கைத் தரமும் கீழ்நிலையிலிருந்தது என்பதே உண்மை. இதன் காரணமாகப் பஞ்சங்கள் போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது இவர்கள் பாதுகாப்பற்றவர்களாகவே இருந்தனர். எடுத்துக்காட்டாக சென்னை மாகாணப் பகுதிகளில் 1678முதல் 1750ஆம் ஆண்டுகளுக்கிடையே பத்துப் பஞ்சங்கள் ஏற்பட்டன சில சமயங்களில் அவை பரந்து விரிந்தனவாகவும் பல ஆண்டுகளுக்கு நீடித்துமிருந்தன. இவை கிராமப்புற ஏழை மக்கள் தங்களை அடிமைகளாக விற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர்களைத் தள்ளியது. சோழமண்டலப் பகுதியிலிருந்து படாவியாவிற்கு அனுப்பப்பட்ட ஆண், பெண் அடிமைகளின் பெயர்கள் டச்சு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கடல் கடந்த வணிகம்**

கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைகளின் கடல் கடந்த வணிகமானது இந்தியப் பெருங்கடல் வணிகத்தில் இணைக்கப்பட்டு உறுதியான நன்கு வடிவமைக்கப்பட்ட வணிக முறையாகப் பதினாறாம் நூற்றாண்டில் மாறியது. இந்தியப் பெருங்கடலில் சரக்குகளைச் சுமந்து செல்வது என்பது பல்வேறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு வரையறை செய்யப்பட்ட நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது. சீனாவிலிருந்தும் ஏனைய தூரக்கிழக்கு நாடுகளிலிருந்தும் வந்த கப்பல்கள் மலாக்காவை வந்தடைந்து சரக்குகள் அங்கு இறக்கப்பட்டு மேற்கேயிருந்து வந்த பொருட்கள் அக்கப்பல்களில் ஏற்றப்பட்டன. ஏற்கனவே இறக்கப்பட்ட சரக்குகள் வேறு கப்பல்களில் ஏற்றப்பட்டு அவை மேற்குக் கப்பல்களில் ஏற்றப்பட்டு அவை மேற்குக் கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டை அல்லது குஜராத்திலுள்ள சூரத் துறைமுகத்தை வந்தடையும். இப்படியான துறைமுகங்கள் இடைநிலைத் துறைமுகங்கள் (Entrepots)என்றழைக்கப்பட்டன. ஐரோப்பா, மேற்காசியாவிலிருந்து வந்த பொருட்கள், இத்துறைமுகங்களில் கிழக்கேயிருந்து வந்த பண்டங்கள் மற்றும் உள்ளூர் தயாரிப்புகளான நறுமணப் பொருட்கள், சாயம், துணி உணவு தானியப் பொருட்களுக்காக மாற்றப்படும். பதினாறாம் நூற்றாண்டில் கள்ளிக்கோட்டை மதிப்பிழந்தது. மாறாக, பரந்துவிரிந்த பல்வகைப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் கடலோரப் பகுதிகளைக் கொண்ட குஜராத் துறைமுகங்கள் முக்கியத்துவம் பெற்றன. சோழமண்டலக் கடற்கரையின் துறைமுகங்களான மசூலிப்பட்டினம், பழவேற்காடு ஆகியவையும், அவற்றிற்கு தொற்கே உள்ள ஏனைய துறைமுகங்களும் பர்மா, மலாய் தீபகற்பகத்திலிருந்து வரும் கப்பல்களுக்கு இடைநிலைத் துறைமுகங்களாகச் சேவை செய்தன.

**ஐரோப்பியர் வருகை**

நன்கு நிறுவப்பட்ட முறைப்படுத்தப்பட்ட இவ்வணிகத்திற்கு வெளியே இருந்து வந்த முதல் அதிர்ச்சி என்பது போர்த்துகீசியரிலிருந்து தொடங்கிய ஐரேப்பியரின் வருகையே ஆகும். ஐரேப்பாவிற்குத் தேவையான நறுமணப் பொருட்களை நேரடியாகப் பெறுவது என்பதே ஐரோப்பியரின் முதன்மை நோக்கமாக இருந்தது. பண்டைய நாட்களில் நறுமணப் பொருட்கள் கடல்

வழியாகப் பாரசீக வளைகுடாவிலுள்ள துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்ட்டு அங்கிருந்து நிலவழிப் பாதை மூலம் மத்திய தரைக்கடல் பகுதியைச் சென்றடையும். இருவருக்கிடையில் எளிமையான நேரடியான வணிகத்திற்கு ஆசியச் சந்தைகளில் வாய்ப்பில்லை என்பதை ஐரோப்பியர் விரைவிலேயே புரிந்துகொண்டனர். ஏனெனில் உள்ளூர்ப் பொருளாதாரங்களில் ஐரோப்பியப் பொருட்களுக்கான (தங்கம், வெள்ளி தவிர) தேவை இல்லை. ஆனால் மற்றொருபுறம் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சந்தைகளில் இந்தயத் துணிகளுக்கு இருந்த உலககளாவிய தேவையால் இந்தியத் துணிகள் செலாவணி ஊடாகமாயிற்று. இந்தோனேசியத் தீவுகளில் சோழமண்டலக் கடற்கரைத் தீவுகளில் சோழமண்டலக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த வண்ணம்பூசப்பட்ட துணிகளுக்கான தேவை வண்ணம்பூசப்பட்ட துணிகளுக்கான தேவை டச்சுக்காரரையும் ஆங்கிலேயரையும் கிழக்குக் கடற்கரையில் தங்கள் நிறுவனங்களை அமைத்துக் கொள்ளச் செய்தது. அங்கிருந்துகொண்டு துணிகளைக் கொள்முதல் செய்து அவற்றை இலாபகரமான நறுமணப் பொருட்களுக்காகப் பண்டமாற்று செய்து கொண்டனர்.

**இந்திய வணிகருடன் கூட்டமைப்பு**

இந்தியாவில் மிகப்பெரும் வணிகர்களின் உதவியும் உறவும் இருந்தால்தான் தாங்கள் வெற்றிபெற இயலும் என்பதைத் தொடக்கத்திலிருந்தே ஐரோப்பியர் என்பதைத் தொடக்கத்திலிருந்தே ஐரோப்பியர்களிடம் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்தக் கிடைத்த புதிய வணிக வாய்ப்பினைக் கண்டு அவர்களோடு இணைந்து செயல்பட்டனர் சூரத் நகரில் பிரச்சனைகள் ஏற்பட்டதால் தங்களுக்கு ஆதரவு தரும் முகலாய அரசாங்கத்தின் பாதுகாப்போடு வணிகர்கள் செயல்பட்டு வந்தனர். பழவேற்காடு பின்னர் ஆங்கிலேயரின் கீழிருந்த சென்னை, பிரெஞ்சுக்காரரின் கீழிருந்த புதுச்சேரி ஆகிய காலனியாதிக்க நிலப்பகுதிகளைத் தங்களுக்குப் பாதுகாப்பான இடங்களாக இந்திய வணிகர் கருதினர். தமிழகப் பகுதியில் தொடரும் அரசியல் குழப்பங்களிலிருந்து விலகி இவ்விடங்களிலிருந்து தங்கள் வணிகத்தைப் பாதுகாப்பாக செய்ய இயலும் என நினைத்தனர்.

ஐரோப்பியருடன் இந்திய வணிகர் மேற்கொண்ட வணிக நடவடிக்கைகள் 1700ஆம் ஆண்டு வரை பாதகமற்ற முறையிலிருந்தன. சூரத்தில் மராத்தியப் படையெடுப்புக் குறித்த அச்சத்தினாலும் தகுந்த பாதுகாப்பு வழங்க இயலாத முகலாய அரசின் இயலாமையினாலும் சூழ்நிலை மாறியது. சென்னையில் தங்களை வலுவாக நிலைநிறுத்திக் கொண்ட ஆங்கிலேயரால் ஐரோப்பாவிற்கானத் துணி ஏற்றுமதியை அதிகரிக்க, இந்திய வணிகர்களை ஏற்கவியலாத வணிக நிபந்தனைகளை ஏற்க வைக்க முடிந்தது. படிப்படியாக ஆங்கிலேய வணிகருக்கும் உள்ளூர் வணிகருக்கும் இடையிலான அதிகார உறவு மாறத் தொடங்கியது. முந்தைய நூற்றாண்டில் வணிகக் காட்சியில் கதாநாயகர்களாக இருந்த வர்த்தக இளவரசர்கள் முற்றிலும் காணாமல் போனதை நம்மால் பார்க்க முடிகிறது.

ஐரோப்பபாவில் இந்தியத் துணிகளுக்கான தோவை அதிகரித்ததால், அது இந்தியப் பொருளாதாரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் இத்தேவை அதிகரிப்பு உள்ளூர் பொருளாதாரத்திற்குப் பயனளிப்பதாக அமைந்தது. உற்பத்திக் காரணிகளும் (தொழிலாளர், கச்சாப் பொருள், மூலதனம்) நேர்மறையாக வினையாற்றின. இருந்தபோதிலும் ஐரோப்பாவின் தேவை தொடர்ந்து அதிகரித்தபோது அதிக உற்பத்திக்காகக் கொடுக்கப்பட்ட

நெருக்கடி மிக விரைவாக உற்பத்தி ஆதாரங்களைப் பாதித்தது. தெற்கே அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்களும், கச்சாப் பொருட்களுக்கும் உணவு தானியங்களுக்கும் ஏற்பட்ட பற்றாக்குறையையும் நெசவாளர்கள் கூடுதலாக ஏற்க வேண்டிய சுமைகளாயின. இப்படி அதிகமான வணிக வாய்ப்புகள் குறுகிய காலத்திற்குப் பயனளித்ததாலும் நீண்டகால விளைவென்பது அவ்வாறே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

இந்த நூற்றைம்பது வருட காலத்தில் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர் படிப்படியான மாற்றத்திற்கு உள்ளாயினர். வணிகராயிருந்த ஆங்கிலேயர் வணிகப் பேரரசை நிறுவியவர்களாக உருமாறி இறுதியில் நாட்டின் பெரும்பகுதி ஆட்சியாளராக மாறினர்.

**ஐரோப்பியர் வருகையும் அதற்குப் பின்பும்**
**இந்தியாவில் போர்த்துகீசியர்**

தனது முதல் பயணத்தில் வாஸ்கோடகாமா மூன்று கப்பல்களில் 170 நபர்களோடு வந்தார். கள்ளிக்கோட்டை அரசர் சாமுத்ரியினுடைய (சாமரின்) நட்புணர்வு வாஸ்கோடகாமாவிற்கு மகிழ்ச்சியளித்தது. 1498 ஆகஸ்ட் 29ஆம் நாள் தன்னுடன் வந்தவர்களில் உயிரோடிருந்த ஐம்பத்தைந்து மாலுமிகளுடனும் மூன்றில் இரண்டு கப்பல்களில் இந்தியச் சரக்குகளுடனும் ஊர்திரும்பும் பயணத்தை மேற்கொண்டார். வாஸ்கோடகாமாவின் வெற்றி போர்த்துகலை 1200 மாலுமிகளை 13 கப்பல்களுடன் பெட்ரோ ஆல்வரிஸ் கேப்ரல் என்பவரின் தலைமையில் மீண்டும் அனுப்பி வைக்கச் செய்தது. 1502 அக்டோபர் 29 ஆம் நாள் 20 கப்பல்களுடன் வாஸ்கோடகாமா மீண்டும் கள்ளிக்கோட்டை வந்தார். அங்கிருந்து அதிக வசதிகளைக் கொண்ட கொச்சிக்குச் சென்றார். ஐரோப்பிய வணிகம் பெருக வேண்டுமெனில் வணிகத்தின் மீது அராபியர்கள் கொண்டிருந்த முற்றுரிமை உடைக்கப்பட வேண்டுமென்பதை அவர் உணர்ந்தார். கொச்சி மற்றும் கள்ளிக்கோட்டையின் இந்து மன்னர்களிடையே நிலவிய பகைமையை அவர் தனது நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டார். இந்தியப் பெங்கடல், செங்கடல் வணிகத்தில் அராபியர் கொண்டிருந்த முற்றுரிமையை ஒழித்தார். போர்த்துகல்லுக்குத் திரும்பும் முன்னர் கொச்சியில் ஒரு சரக்குக் கிடங்கையும் கண்ணூரில் ஒரு சிறைச்சாலையையும் நிறுவினார்.

**போர்த்துகீசிய வணிகம் ஒருங்கிணைக்கப்படல்**

ஆண்டுதோறும் பயணம் மேற்கொள்வதை நிறுத்திய போர்த்துகீசியர், இந்தியாவில் ஒரு ஆளுநரை அமர்த்த முடிவு செய்தனர். முதல் ஆளுநரான பிரான்ஸிஸ்கோ-டி-அல்மெய்டா "நீல நீர்க கொள்கை" யைக் கடைபிடித்தார். இக்கொள்கையின் மூலம் அவர குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்து கப்பற்படையை வலுப்படுத்தினார். சாமுத்ரியினுடைய கப்பற்படையையும் எகிப்திய சுல்தானின் கப்பற்படையையும் மூழ்கடித்தார். கொச்சி அரசருடன் நட்பு பூண்டு அவர் கொச்சி, கண்ணூர், மலபார் கடற்கரையின் ஏனைய இடங்களிலும் கோட்டைகளைக் கட்டினனார்.

அல்மெய்டாவிற்குப் பின்னர் அல்புகர்க் (1509-1515) பதவியேற்றார். இந்தியாவில் போர்த்துகீசியப் பேரரசை உண்மையில் நிறுவியவர் இவரே. பீஜப்பூரின் அரசர் யூசுப் அடில் கானைத் தோற்கடித்த இவர் 1510இல் கோவாவைக் கைப்பற்றினார். கோவாவை முக்கிய வணிக மையமாக வளர்த்தொடுத்தார். அனைத்து மதம் சார்ந்த மக்களையும் கோவாவை முக்கிய

வணிக மையமாக வளர்த்தெடுத்தார். அனைத்து மதம் சார்ந்த மக்களையும் கோவாவில் குடியேற ஊக்கப்படுத்தினார். ஐரோப்பியர் இந்தியப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு, போர்த்துகீசியர் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் குடியேறுவதை ஆதரித்தார். இந்தியாவிற்கும்-சீனாவிற்கும், மெக்காவிற்கும்-கெய்ரோவிற்கும் இடைப்பட்ட வணிகத் தடங்களின் மீது மேலாதிக்கம் செலுத்திவந்த முஸ்லீம் வணிகர்களைத் தோற்கடித்த அவர் மலாக்காவை (மலேசியாவில் உள்ளது) கைப்பற்றியதால் பேரரசு விரிவடைந்தது. அராபியரைத் தாக்கி ஏடன் நகரைக் கைப்பற்றுவதில் வெற்றிபெற்றார். 1515இல் 'ஆர்மசு' துறைமுகம் அவர் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது.

**உடன்கட்டை (சதி) ஏறும் பழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.**

இந்தியாவில் போர்த்துகீசியம் பேரரசை வலிமைப்படுத்துவதில் மேலும் இரண்டு ஆளுநர்கள் முக்கியப் பங்காற்றினர். அவர்கள் நினோ டா குன்கா 1534இல் பசீனையும் 1537இல் டையூவையும் கைப்பற்றினார். 1559இல் டாமன் துறைமுகம் இமாத்-உல்-முல்க் என்பவரிடமிருந்து பறிக்கப்பட்டது. இதே சமயத்தில் பதினாறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கொழும்புவில் ஒரு கோட்டை கட்டியதைத் தொடர்ந்து இலங்கையின் மீதான போர்த்துகீசியரின் கட்டுப்பாடு அதிகமானது. டி நொரன்காவின் காலத்தில்தான் (1571) முகலாய அரசர் அக்பர் குஜராத்திலுள்ள காம்பேவுக்கு வந்தார். போர்த்துகீசியருக்கும் முகலாயருக்கும் இடையிலான தொடர்பு உருவானது.

ஸ்பெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப் 1580இல் போர்த்துக்கல் நாட்டைக் கைப்ற்றி இணைத்துக் கொண்டார். போர்த்துகீசியரை முதலில் இலங்கையில் தோற்கடித்த டச்சுக்காரர் பின்னர் மலபார் கடற்கரையிலிருந்த அவர்களின் கோட்டையையும் கைப்பற்றினர். இதனால் போர்த்துகீசியர் இந்தியாவில் தங்கள் குடியேற்றங்களைப் பாதுகாப்பதைக் காட்டிலும் பிரேசிலின் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

**போர்த்துகீசிய வருகையின் தாக்கம்**

- இந்திய அரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஐரோப்பியர் இந்திய அரசர்களை வென்று அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றினர்.
- இந்திய அரசர்கள் எப்போதும் பிரிந்திருந்தனர். அதை ஐரோப்பியர் சாதமாக்கிக் கொண்டனர்.
- போரிடுவதில் ஐரோப்பியர் புதிய முறைகளைக் கைக்கொண்டனர். வெடிமருந்தும், வலிமை வாய்ந்த பீரங்கிப்படையும். முக்கியப் பங்கு வகித்தன.
- போர்த்துகீசியரால் அராபியரின் வணிக முற்றுரிமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் உண்மையில் அது அவர்களுக்கு உதவில்லை: மாறாக அது ஆங்கிலேயருக்குப் பயனளித்தது. ஆங்கிலேயர் கடற்கொள்ளையரை அழித்து கடற்பயணத்தைப் பாதுகாப்பானதாக ஆக்கினர்.

- தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இடையிலான திருமணங்களைப் போர்த்துகீசியர் ஊக்குவித்ததன் விளைவாக ஒரு புதிய யூ ரேசிய இனக்குழு உருவானது. இவர்கள் பின்னாளில் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலுமிருந்த போர்த்துகீசியரின் காலனிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

- சென்னை சாந்தோம் போர்த்துகீசியரின் வருகைக்கான முக்கியச் சான்றாக உள்ளது போர்த்துகீசியர் கருப்பர் நகரம் (Black Town) என்று மயிலாப்பூரை அழைத்தனர் (ஆங்கிலேயர் கருப்பர் நகரம் என்று ஜார்ஜ் டவுனை அழைத்தனர்)

- போர்த்துகீசியரின் குடியேற்றங்களுக்குப் பிறகு சேசு சபையைச் சார்ந்த சமயப்பரப்பாளர்கள் இந்தியா வந்தனர். அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள்,

1. இராபர்டோ டி நொபிலி தமிழிலும் சமஸ்கிருதத்திலும் விரிவாக எழுதினார் இவர் தமிழ் உரைநடையின் தந்தையெனக் கருதப்படுகிறார்.

2. ஹென்ரிகஸ், போர்த்துகல் நாட்டு யூதரான இவர் தமிழ் அச்சுப் பதிப்பின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

மீன்பிடிக்கும் உரிமை, படகோட்டும் உரிமை முத்துக்குளித்தல் ஆகியவை தொடர்பாக போர்த்துகீசியருக்கும் கீழைக் கடற்கரையைச் சார்ந்து முஸ்லீம் குழுக்களுக்கும் இடையே 1530களில் மோதல்கள் நடந்தன. இதைப் பொறுத்தமட்டில், பரதவ மக்களின் ஒரு குழுவானது, ஆயுதம்பூண்ட முஸ்லீம் வணிகர்களின் தாக்குதல்களால் தாங்கள் பட்ட துயரங்களை கொச்சியிலிருந்த போர்த்துகீசிய அதிகாரிகளிடம் முறையிட்டு உதவி கோட்டனர். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட போர்த்துகீசியர் தங்களது ரோமன் கத்தோலிக்க குருமார்களைக் கீழைக் கடற்கரைக்கு அனுப்ப, ஆயிரக்கணக்கான பரதவகுல மக்கள் கத்தோலிக்கக் கிறித்தவ மதத்திற்கு மதமாறினர். இதனைத் தொடரந்து சேசு சபையை உருவாக்கியவர்களில் ஒருவரான புனித பிரான்ஸி ஸ் சேவியர் 1542 இல் கோவா வந்தர். பின்னர் மதம் மாறியவர்களுக்கு திருமுழுக்கு சடங்கு நடத்துவதற்காகத் தூத்துக்குடி, புன்னைக்காயல் வரை பயணம் செய்தார். சோழமண்டலக் கடற்கரைக் கிராமங்களில் உயர் கோபுரங்களோடு உருவான தேவாலயங்களை இன்றும் காணலாம்.

கார்டஸ் (cartaz) என்ற பெயரில் போர்த்துகீசியர் வழங்கும் பாதுகாப்பை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் வன்முறை மூலம் வணிகத்திற்கு இடையூறு செய்யப்போவதாக பயமுறுத்துவர். கார்டஸ் முறையில் போர்த்துகீசியர் வணிகர்களிடமிருந்து பணம் பறித்தனர். கடற் கொள்ளையர்களுக்கு எதிராக தாங்கள் பாதுகாப்பு வழங்குவதாக கூறிக்கொண்டனர். ஆனால் அதைப் போன்ற இடையூறுகளில் பலவற்றை செய்தவர்களும் போர்த்துகீசிய கடற்கொள்ளையரே.

**டச்சுக்காரர்:**

ஜேன் ஹீயன் வான் லின்சோடென் என்னும் நெதர்லாந்தைச் சேர்ந்த லிஸ்பனில் வாழ்ந்து வந்த வணிகர் டச்சுக்காரரின் முதல் பயணத்தை

தென்கிழக்கு ஆசியாவை நோக்கி 1595 ஆம் ஆண்டு மேற்கொண்டார். கீழ்த் திசை நாடுகளோடு வணிகம் செய்வதற்காகப் பல நிறுவனங்கள் வணிகர்களாலும் தனிநபர்களாலும் நிறுவப்பட்டிருந்தன. அரசு தலையிட்டு அவையனைத்தையும் ஒருங்கிணைத்து 1602 இல் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கியது. புதிதாக உருவான இக்கம்பெனி இந்தோனேசியாவில் தனது ஆதிக்கத்தை நிறுவியது.

1623 இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியர்கள், போர்த்துகீசியர், ஜப்பானியர் அடங்கிய இருபது பேர்களை டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவர்கள் இந்தோனோசியாவிலுள்ள அம்பாய்னா என்னும் தீவில் சித்திரவதை செய்து கொன்றனர். இது அம்பாய்னா படுகொலை என்றழைக்கப்படுகிறது.

டச்சுக்காரர் மலாக்காவை போர்த்துகீசிரியரிடமிருந்து 1641 இல் கைப்பற்றினர். மேலும் 1658 இல் இலங்கையைத் தங்கள் வசம் ஒப்படைக்கப் போர்த்துகீசியரைக் கட்டாயப்படுத்தினர். நறுமணத் தீவுகளில் டச்சுக்காரர் வெற்றி பெற்றனர். ஆனால் இந்தியாவில் ஆங்கிலேயரிடம் ஏற்பட்ட பின்னடைவுகளால் அவர்கள் துயருற்றனர்.

**தமிழகத்தில் டச்சுக்காரர்:**

1502 முதல் பழவேற்காட்டைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போர்த்துகீசியர் டச்சுக்காரரால் அகற்றப்பட்டனர். சென்னை நகருக்கு வடக்கே 60 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பழவேற்காட்டில் டச்சுக்காரர் ஜெல்டிரியா என்னும் பாதுகாப்புக் கோட்டையைக் கட்டினர். 400 ஆண்டுகள் கடந்தும் அதன் எச்சங்களை இன்றும் காணலாம். இக்கோட்டை ஒரு காலத்தில் டச்சுக்காரரின் அதிகார பீடமாக இருந்தது. தங்கள் அதிகாரத்தை 1605 இல் மசூலிப்பட்டினத்தில் நிறுவிய டச்சுக்காரர் பழவேற்காட்டில் சில குடியேற்றங்களை 1610 இல் நிறுவினர். நாகப்பட்டினம், நாகர்கோவில், புன்னைக்காயல், பரங்கிப்பேட்டை, கடலூர் (திருப்பாதிரிப்புலியுயூர்) தேவனாம்பட்டினம் ஆகியவை டச்சுக்காரரின் ஏனைய கோட்டை மற்றும் காலனியாதிக்கப் பகுதிகளாகும்.

பழவேற்காடு, டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சோழமண்டலப்பகுதியின் தலைமையிடமாயிற்று. பழவேற்காட்டிலிருந்து மேலை நாடுகளுக்கு வைரம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஜாதிக்காய், ஜாதிபத்ரி, கிராம்பு ஆகியவையும் இங்கிருந்து ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் டச்சுக்காரர் கிழக்குப் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வெடிமருந்து தொழிற்கூடம் ஒன்றை நிறுவினர். அடிமை வியாபாரத்தில் டச்சுக்காரர் ஈடுபட்டனர் என்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. வங்காளத்திலிருந்தும், குடியேற்றப்பகுதிகளான தேங்காய்ப்பட்டினம், காரைக்கால் ஆகியவற்றிலிருந்தும் அடிமைகளைப் பிடிப்பதற்காக டச்சுக்காரர் சென்னையில் தரகர்களை நியமித்தனர். இவர்கள் அனைவரும் சென்னையில் கப்பல்களில் ஏற்றப்பட்டனர். பஞ்சமும், வறட்சியும் போர்களும் அடிமை வணிகம் செழிக்க உதவின.

லெய்டன் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளரான வில் ஓடிஜிக் என்பார் ஒரு ஆய்வுக்கட்டுரையில், இங்கிருந்தும் வங்காள விரிகுடாப் பகுதிகளிலிருந்தும் டச்சுக் கப்பல்களில் ஏற்றிஅனுப்பப்பட்ட அடிமைப் பயணிகளின் பட்டியலைக்

குறிப்பிட்டுள்ளார். 1621ஜீன் முதல் 1665 நவம்பர் வரை மொத்தம் 26,885 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடிகைகளாக அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களில் 1379 நபர்கள் உயிரிழந்தனர். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகளால் உருவான பஞ்சம் போன்ற காரணங்களால் சோழமண்டலத்தில் அடிமை ஏற்றுமதி பெருகியது என அவ்வாய்வாளர் மேலும் குறிப்பிடுகின்றார்.

இதனைத் தொடர்ந்து பீஜப்பூர் சுல்தான் மேற்கொண்ட படையெடுப்பு தஞ்சாவூரின் வளமான வோண் நிலங்களைப் பாழ்படுத்தியதால் மேலும் பல மக்கள் அடிமைகளாயினர். இக்காலத்தில் (1646) ஏறத்தாழ 2118 அடிமைகள் பெரும்பாலும் அதிராமபட்டினம், தொண்டி, காயல்பட்டினம் போன்ற கடற்கரை ஓரமாக அமைந்திருந்த பகுதிகளைச் சார்ந்தவராக இருந்தனர்.

**பிரெஞ்சுக்காரர்**

இந்தியாவுடன் வணிக உறவை மேற்கொள்ள பிரெஞ்சுக்காரர் 1527ஆம் ஆண்டிலேயே முயற்சி மேற்கொண்டனர். போர்த்துகீசியராலும் டச்சுக்காரராலும் தூண்டப்பட்ட பிரெஞ்சுக்காரர் 1664இல் உருவாக்கப்பட்ட பிரெஞ்சுக் வணிகச் செயல்பாடுகளைத் தொடங்கினர் ஏனைய ஐரேப்பிய நாடுகளின் வணிக நிறுவனங்கள் தனியார் வணிக நிறுவனங்களாக இருக்க, பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசர் பதினான்காம் லூயியின் திட்டமாக அமைந்தது. அவருடைய நிதியமைச்சரான கோல்பெர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்படுவதற்கு காரணமாக இருந்தார்.

பிரான்சின் முயற்சியானது அரசால் தொடங்கப்பட்ட முயற்சியாக இருந்ததால் பொதுமக்களின் ஆர்வத்தை அது ஈர்க்கத் தவறியது. மேலும் வரிவிதிப்பதற்கான மற்றொரு வழியென்றே அதை மக்கள் கருதினர்.

**மடகாஸ்கர் வழியாகப் புதுச்சேரி**

1602இல் பிரெஞ்சு வணிகர்கள் ஆப்ரிக்காவிலுள்ள மடகாஸ்கரை அடைந்தனர். மடகாஸ்கரைத் தங்களின் காலனியாதிக்கப் பகுதியாக கொண்டிருந்தாலும், 1674இல் கடற்கரையோரமுள்ள ஒரு சிறு வணிகமுகாமைத் தவிர ஏனைய இடங்களைக் கைவிட நேர்ந்தது. இந்தியாவிலிருந்து பிரெஞ்சு முகவரான பெர்பர், செப்டம்பர் 4, 1666இல் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பிடமிருந்து அனுமதி ஆணை பெற்று தங்களின் முதல் நிறுவனத்தை டிசம்பர் 1668இல் டச்சுக்காரரின் எதிர்ப்பையும் மீறி அமைத்தார். ஓராண்டிற்குள் மசூலிபட்டினத்தில் மற்றுமொரு நிறுவனமும் அமைக்கப்பட்டது.

இக்காலத்தில் நிறுவனம் **(factory)** என்பது அயல்நாடுகளிலுள்ள தங்கள் முதலாளிகளுக்காக வணிக முகவர்கள் தங்கியிருந்து வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடம் என்னும் பொருளைப் பெற்றது

இந்தியாவில் காலூன்ற வலுவான இடம் தேவை என்பதை உணர்ந்த நிதியமைச்சர் கோல்பெர், ஹேய் (ஜேக்கப் பிளான்குயிட் டி லா ஹேய், **Jacob Blanquet de la Haye)** என்பாரின் தலைமையில் கப்பற்படையொன்றை அனுப்பி வைத்தார் சாந்தோமிலிருந்தும் மயிலாப்பூரிலிருந்தும் டச்சுக்காரரை வெளியேற்றுவதில் பிரெஞ்சுக்காரர் 1672இல் வெற்றி பெற்றனர்.

டச்சுக்காரர்களுக்கு எதிராகப் பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியான உள்ளூர் ஆளுநர் செர்கான் லோடியின் உதவியை பிரெஞ்சுக்காரர் நாடினர். பீஜப்பூரின் எதிரியான கோல்கொண்டா சுல்தானோடு டச்சுக்காரர் நட்பு கொண்டனர் பிரெஞ்சுக்காரர் குடியேறுவதற்குப் பொருத்தமான இடமென புதுச்சேரியை செர்கான் லோடி வழங்கினார். 1673 இல் புதுச்சேரி ஒரு சிறிய மீனவக் கிராமமாக இருந்தது. மடகாஸ்கரில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் சூருத் வந்த பிரான்சிஸ் மார்ட்டின் என்பவர் புதுச்சேரியின் ஆளுநர் ஆனார். இந்தியாவில் பிரெஞ்சுக் குடியேற்றங்களின் அதிகார மையமாக அதை உருவாக்கினார்.

“ நாங்கள் கடந்து சென்ற கிராம்ப்புறப்பகுதி (புதுச்சேரிக்கு வெளியேயுள்ள பகுதி) மிக நன்றாக விவசாயம் செய்யப்பட்டிருந்தது. மிக அழகாகவும் இருந்தது. அரிசி ஏராளமாகக காணப்பட்டது. எங்கே நீர் இருந்ததோ அங்கே பருத்தி விளைவிக்கப்பட்டது.” புதுச்சேரி நிலப்பரப்பை குறித்து பிரான்ஸிஸ் மார்ட்டின் தனது நாட்குறிப்பில் எழுதியது.

**டச்சுக்காரருடன் போட்டியும் போர்களும்**

புதுச்சேரியைத் தங்கள் குடியேற்றமாக்கும் முயற்சியில் பிரெஞ்சுக்காரர் மிகவும் சிரமப்பட்டனர். தங்களின் முக்கியப் போட்டியாளரான டச்சுக்காரர்களை முதலில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிரான்சும் ஹாலந்தும் 1672இலிருந்து தொடர்ந்து போர்கள் செய்து கொண்டிருந்தன. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்குப் போதுமான நிதி, ஆயுதம், வீரர்கள் இல்லை. ஏனெனில் அவை வங்காளத்திலிருந்த மற்றொரு பிரெஞ்சுக் குடியேற்றமான சந்தன்நகருக்கு (சந்திரநாகூர்) கொண்டு செல்லப்பட்டிருந்தன. ஆகவே 1693இல் புதுச்சேரியை டச்சுக்காரர் எளிதாகக் கைப்பற்ற முடிந்தது. புதுச்சேரி தொடர்ந்து ஆறு ஆண்டுகள் டச்சுக்காரரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.1697இல் ரிஸ்விக் உடன்படிக்கையின்படி புதுச்சேரி மீண்டும் பிரெஞ்சுகாரருக்குத் தரப்பட்டது. இருந்தபோதிலும் 1699இல்தான் அது பிரெஞ்சுக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டது. 1706இல் பிரான்ஸிஸ் மார்ட்டின் இயற்கை எய்தும்வரை அதன் ஆளுநராக இருந்தார்.

பிரெஞ்சுக்காரர் மேற்கொண்ட பெருமுயற்சியின் விளைவாக 1725இல் மாகியையும் 1739இல் காரைக்காலையும் பெற்றனர். வங்காளப் பகுதியில் காசிம் பஜார், சந்தன்நகர், பாலசோர் ஆகிய இடங்களில் தங்களது குடியேற்றங்களை நிறுவி விரிவுபடுத்துவதில் பிரெஞ்சுக்காரர் வெற்றி பெற்றனர். பியரி பெனாய்ட் டூமாஸ் என்பவர் (1668 – 1745) புதுச்சேரியின் மற்றுமொரு சிறந்த ஆளுநர் ஆவார். இருந்தபோதிலும் தங்களைவிட மிகவும் வலிமை வாய்ந்த போட்டியாளரான ஆங்கிலேயரின் பயமுறுத்துதல்களை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. இறுதியில் தாங்கள் சேகரித்த செல்வம் அனைத்தையும் ஆங்கிலேயரிடம் இழந்தனர்.

பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை புதுச்சேரி, காரைக்கால், மாகி சந்தன்நகர் ஆகிய இடங்களில் இன்றும் கண்கூடாகக் காணலாம்.

**டேனியர்:**

டென்மார்க் (நார்வே 1813 வரை டென்மார்க்குடன் இணைந்திருந்தது) இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் குடியேற்றங்களைக் கொண்டிருந்தது. தமிழ்நாட்டில் தரங்கம்பாடி, மேற்கு வங்காளத்தில் செராம்பூர், நிக்கோபர் தீவுகள் ஆகியன டேனியர் வசம் இருந்த பகுதிகளாகும். 1616 மார்ச் 17 ஆம் நாள் டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டியன் ஒரு பட்டயத்தை வெளியிட்டதன் மூலம் டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கினார். டேனிய வணிகரிடையே இந்நிறுவனத்திற்கு பெரும் ஆதரவு ஏதுமில்லை. 1618 இல் கடற்படைத் தலைவர் ஒவி ஜெடி இலங்கைக்கு முதல் கடற்பயணத்தை மேற்கொண்டார். டேனியரால் இலங்கையோடு வணிக ஒப்பந்தம் எதையும் மேற்கொள்ள இயலவில்லை. ஏமாற்றத்தோடு திரும்புகிற வழியில் காரைக்காலுக்கு அருகே அவர்களின் முக்கியக் கப்பல் போர்த்துகீசியரால் மூழ்கடிக்கப்பட்டது. சிக்கிக்கொண்ட பதிமூன்று மாலுமிகளும் அவர்களின் வணிக இயக்குநரான ராபர்ட் கிராப்பி என்பவரும் தஞ்சாவூர் நாயக்க அரசரிடம் அழைத்துச் செல்லப்பட்டனர். ராபர்ட் பிராப்பி தஞ்சாவூர் அரசரோடு பேச்சுவார்த்தை நடத்தி ஓர் ஒப்பந்தத்தையும் செய்துகொண்டார். 1620 நவம்பர் 20 ஆம் நாள் கையெழுத்தான அவ்வொப்பந்தத்தின்படி டேனியர்கள் தரங்கம்பாடியையும் அதில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையையும் பெற்றனர்.

தரங்கம்பாடியிலுள்ள டேனியர் கோட்டை அடிக்கடி சாலைகளையும் வீடுகளையும் சேதப்படுத்திய பேரலைகளின் முன் பாதுகாப்பற்றதாக இருந்தது. முப்பதாண்டுப் போரில் பங்கேற்று பெருமளவில் பண இழப்பு அடைந்தபோதிலும் அவர்களால் மசூலிப்பட்டினத்தில் ஒரு கிடங்கை அமைக்க முடிந்தது. பாலசோரிலும், ஹுக்ளி ஆற்றின் அருகிலுள்ள பிப்ளி என்ற இடத்திலும் வணிக முகாம்கள் அமைக்கப்பட்டன. இந்நிறுவனத்தில் முதலீடு செய்திருந்த டென்மார்க் முதலீட்டாளர்கள் இந்நிறுவனத்தை கலைக்க வேண்டுமென்றனர். ஆனால் அரசர் நான்காம் கிறிஸ்டியன் அதை எதிர்த்தார். 1648 இல் அவரின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மகன் பிரடெரிக் இந்நிறுவனத்தைக் கலைத்தார்.

இரண்டாவது டேனிய கிழக்கிந்தியக் கம்பெனி 1696 இல் தொடங்கப்பட்டது. டென்மார்க்கிற்கும் தரங்கம்பாடிக்கும் இடையிலான வணிகம் மீண்டும் நடைபெறத் துவங்கியது. பல புதிய வணிக முகாம்கள் அமைக்கப்பட்டன. தஞ்சாவூர் நாயக்க அரசர் தரங்கம்பாடியைச் சுற்றியிருந்த மேலும் மூன்று கிராமங்களைப் பரிசாக அளித்தார். 1706 ஜுன் 9 ஆம் நாள் டென்மார்க்கிலிருந்து முதன்முதலாக இரண்டு லுத்தரன் சமயப்பரப்பாளர்கள் வந்தனர். டேனியர்கள் 1755 இல் அந்தமானிலும் நிக்கோபாரிலும் குடியேறினர். ஆனால் மலேரியா காய்ச்சல் ஏற்படுத்திய அச்சத்தால் அவற்றை 1848 இல் கைவிட்டனர். நெப்போலினியப் போர்களின் போது டேனியரின் பகுதிகளை ஆங்கிலேயர் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கினர். 1839 இல் செராம்பூர் ஆங்கிலேயருக்கு விற்கப்பட்டது. தரங்கப்பாடி உள்ளிட்ட ஏனைய குடியேற்றங்கள் 1845 இல் விற்கப்பட்டன.

**டேனியரும் தமிழகமும்:**

தரங்கம்பாடியில் டேனியர் கட்டிய கோட்டை இன்றும் சீர்கெடாமல் உள்ளது. டென்மார்க்கிலிருந்து இந்தியா வந்த முதலிரண்டு லுத்தரன் மதப் பரப்பாளர்களான பார்த்தலோமியஸ் சீகன்பால்கு, ஹென்ரிச் புலுட்சா ஆகிய இருவரும் 1706 செப்டம்பரில் தரங்கம்பாடி வந்தனர். அவர்கள் சமயப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். பத்து மாதங்களுக்குள் தங்களால் மதமாற்றம்

செய்யப்பட்டோருக்குத் திருமுழுக்கு சடங்கு நடத்தி வைத்தனர். அவர்களின் பணிகளை உள்ளூர் டேனிய அதிகாரிகளும் இந்துக்களும் எதிர்த்தனர். உள்ளூர் மக்களை மதமாற்றம் செய்வதன் மூலம் சிகன்பால்கு கலகத்தைத் தூண்டுகிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டு நான்கு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். கோபன்ஹேகனைச் சேர்ந்த ஒரு மதப்பரப்பாளர் சங்கம் உள்ளூர் கிறித்தவத் திருச்சபையை ஊக்கப்படுத்த நினைத்தது. அதன்படி தனது மதப்பரப்பாளர்களை மதபோதனை மட்டும் செய்யுமாறும் ஏனையவற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் எனவும் அறிவுறுத்தியது. இருந்தபோதிலும் சீகன்பால்கு மற்றவர்கள் நலனில் அக்கறைகொள்வது என்பது மதபோதனையின் உட்பொருளாக உள்ளது என வாதிட்டார்.

சீகன்பால்கு ஓர் அச்சுக்கூடத்தை நிறுவினார். தமிழ்மொழி, இந்திய மதங்கள், பண்பாடு குறித்த நூல்களை வெளியிட்டார். 1715 இல் ஆவ் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அவரும் அவருடைய சகாக்களும் 1718 இல் கட்டிய தேவாலயக் கட்டடமும் இன்றும் பயன்பாட்டில் உள்ளது. உள்ளூர் மத குருமார்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு இறையியல் பயிற்சிப் பள்ளியையும் நிறுவினார். 1719 பிப்ரவரி 23 ஆம் நாள் அவர் இயற்கை எய்திய போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட, பழைய மற்றும் புதிய ஏற்பாடு, தமிழில் சுருக்கமாக எழுதப்பட்ட பல ஏடுகள், இரண்டு தேவாலயங்கள், இறையியல் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றையும் புனித நீராட்டல் சடங்கை முடித்திருந்த 250 கிறித்தவர்களையும் விட்டுச் சென்றார்.

**ஆங்கிலேயரின் வருகை:**
**ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனம்**

இலண்டன் நகரின் லேடன்ஹால் வீதியைச் சேர்ந்த ஒரு வணிகக்குழு, கீழை நாடுகளுடனான பெரும் இலாபத்தை ஈட்டித்தரும் நறுமணப் பொருட்கள் வியாபாரத்தில் தாங்களும் பங்கு பெற அரசியார் முதலாம் எலிசபெத்திடமிருந்து பட்டயம் (உரிமை ஆணை) ஒன்றைப் பெற்றனர். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பணம் படைத்த வணிகரையும், மேட்டுக்குடி மக்களையும் பங்குதாரர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் ஒரு ஆளுநராலும் 24 இயக்குநர்களைக் கொண்ட குழுவாலும் மேலாண்மை செய்யப்பட்டது. 1611 இல் அரசர் முதலாம் ஜேம்ஸ், வில்லியம் ஹாக்கின்ஸ் மூலம் இந்தியாவுடன் இயல்பாக வணிகம் செய்யும் அனுமதியை முகலாய அரசர் ஜஹாங்கீரிடம் பெற்றார். ஆங்கிலேயர் சூரத்தில் சில வணிக உரிமைகளைப் பெற்றனர். குஜராத்தின் முகலாய ஆளுநரான இளவரசர் குர்ரம் ஆங்கிலேயருக்கு வணிக உரிமைகளை வழங்கினார். ஆனால் இப்பகுதிகளில் போர்த்துகீசியர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததால் ஆங்கிலேயரால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை.

1639 இல் சந்திரகிரியின் அரசர் சென்னையை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுத்து அதில் கோட்டைக் கட்டிக் கொள்ளும் அனுமதி வழங்கினார். கட்டப்பட்ட கோட்டை புனித ஜார்ஜ் கோட்டை எனப் பெயரிடப்பட்டது. இந்திய மண்ணில் முதன் முதலாகப் பெற்ற நிலப்பகுதி இதுவே. சென்னையில் கம்பெனியின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகள் மீது 1645 ஆம் ஆண்டு கோல்கொண்டா அரசர் படையெடுத்து பாழ்படுத்தினார். 1687 இல் ஔரங்கசீப் கோல்கொண்டாவைக் கைப்பற்றிக் கம்பெனியின் பகுதிகளை முகலாய ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார். ஆனால் ஆங்கிலேயருக்கு ஏற்கனவே

வழங்கப்பட்டிருந்த உரிமைகள் தொடர்ந்தன. குறுகிய காலத்திற்குள் மசூலிப்பட்டினத்திற்கு மாற்றாகக் கம்பெனியின் சோழமண்டலக் கடற்கரைப் பகுதியின் தலைமையிடமாக சென்னை மாறியது. அரசர் இரண்டாம் சார்லஸ் திருமணத்தின்போது மணக்கொடையாகப் பெற்ற பம்பாய் தீவு 1668 இல் கம்பெனிக்கு வழங்கப்பட்டது. 1683 ஆம் ஆண்டுப் பட்டயம் கம்பெனிக்குப் படைகளை உருவாக்கிக் கொள்ளவும் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகியவற்றிலுள்ள நாடுகளுக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்யவும் அமைதி உடன்படிக்கை மேற்கொள்ளவும் உரிமை வழங்கியது.

1684 இல் சென்னை ஒரு மாகாணமாக உருவானது. 1688 இல் சென்னை ஒரு மேயரையும், பத்து உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவையும் கொண்ட நகராட்சி அரசைப் பெற்றிருந்தது. 1693 இல் சென்னையைச் சுற்றியுள்ள மூன்று கிராமங்களையும் 1702 இல் மேலும் ஐந்து கிராமங்களையும் பெற்றது.

**வங்காளம்:**

ஆங்கிலேயருக்கு வங்காளத்தில் வணிக உரிமைகளைப் பெறுவது நீண்டகாலப் போராட்டமாக அமைந்தது. முகலாய அரசர் ஷாஜகானின் இரண்டாவது மகனும் வங்காளத்தின் ஆளுநருமான ஷா சுஜாவிடமிருந்து கம்பெனி சில வணிக உரிமைகளைப் பெற்றிருந்தது. ஆனால் அவ்வுரிமைகள் முகலாய அரசால் முறையாக உறுதி செய்யப்படவில்லை. 1608 இல் வங்காளத்திலிருந்த ஆங்கிலேயர் வணிக உரிமைகளைப் பெற்றனர். ஆனால் ஆங்கிலேயரின் வணிக உரிமைகளில் உள்ளூர் அதிகாரிகள் தலையிட்டதால் கம்பெனி முகலாய அரசின் பிரதிநிதியாக வங்காளத்தை நிர்வகிக்கும் ஆட்சியாளருக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்தது. 1690 இல் அமைதி மீட்கப்பட்டதைத் தொடர்ந்து கம்பெனி சுதநுதி என்ற இடத்தில் தனது முதல் குடியேற்றத்தை நிறுவியது. இவ்விடமே பிற்காலத்தில் கல்கத்தாவாயிற்று. 1696 இல் அங்கு கோட்டை கட்டப்பட்டது. 1698 இல் சுதநுதி, காளிகட்டா, கோவிந்தப்பூர் ஆகிய கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையைக் கம்பெனி பெற்றது. இதற்குப் பதிலாக கம்பெனி ஆண்டுதோறும் ரூ 1,200 செலுத்தியது. கல்கத்தாவில் கட்டப்பட்ட புனித வில்லியம் கோட்டை 1770 இல் மாகாணத்தின் தலைமையிடமாயிற்று.

**நாரிஸ் தூதுக்குழு:**

இங்கிலாந்து அரசர் மூன்றாம் வில்லியம் சர் வில்லியம் நாரிஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். அவர் 1698 இல் ஔரங்கசீப்பை சந்தித்தார். ஆங்கிலேயக் குடியேற்றங்கள் மீது ஆங்கிலேயரின் முழுமையான கட்டுப்பாட்டைப் பெறுவதும், ஏற்கனவே பெறப்பட்ட சிறப்பு உரிமைகளை உறுதிப்படுத்துவதும், வணிக உரிமைகளை மேலும் நீட்டிப்பதும் இச்சந்திப்பின் நோக்கங்களாக இருந்தன. ஆனால் இவ்வேண்டுகோள் 1714 – 1717 ஆண்டுகளில் சுர்மன் என்பவரின் தலைமையின் கீழ்வந்த தூதுக்குழு முகலாயப் பேரரசர் பருக்சியாரைச் சந்தித்த போதுதான் ஏற்கப்பட்டது. சுர்மன் வணிக உரிமைகள் தொடர்பான அரசரின் ஆணையை பருக்சியாரிடமிருந்து பெற்றார். இவ்வாணை குஜராத், ஹைதராபாத், வங்காளம் ஆகிய பகுதிகளின் உள்ளூர் ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

**கர்நாடகப் போர்கள்:**

ஆங்கிலேயர் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கு 1746 – 1763 காலப்பகுதியில் பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக மூன்று போர்களை நடத்தினர். வரலாற்று அறிஞர்கள் இப்போர்களை கர்நாடகப் போர்கள் எனக் குறிப்பிடுகின்றனர்.

**முதல் கர்நாடகப் போர், 1746 – 1748:**

ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் இந்தியாவிலும் எதிரொலித்தது. ஆஸ்திரிய அரசர் ஆறாம் சார்லஸ் 1740 இல் காலமானார். அவரைத் தொடர்ந்து அவருடைய மகள் மரிய தெரேசா அரசபதவியை ஏற்றார். மரிய தெரேசாவின் உரிமையை ஏற்க மறுத்த பிரான்ஸ், ஜெர்மானிய மொழி பேசப்படும் பகுதிகளான பவேரியா, சாக்ஸனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளோடு மரிய தெரேசாவுக்கு எதிராகக் கைகோத்தது. பிரஷ்ய அரசர் இரண்டாம் பிரடெரிக் (பிரஷ்யாவின் மகாபிரடெரிக் என அறியப்பட்டவர்) இப்புதிய அரசியல் சூழலைத் தனக்கு சாதகமாக்கி பிரான்சின் உதவியுடன் ஆஸ்திரிய நாட்டின் ஒரு பகுதியான சைலீசியாவைக் கைப்பற்றினார். இப்பிரச்சனையில் இங்கிலாந்து பிரான்சிற்கு எதிராகவும் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாகவும் களம் கண்டது. ஐரோப்பாவில் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையே ஏற்பட்ட போர்களால் வட அமெரிக்காவிலும் இந்தியாவிலும் இருந்த இருநாட்டுக் குடியேற்றங்களிலும் போர்கள் ஏற்பட்டன. போர் வெடித்த போது புதுச்சேரியின் புதிய ஆளுநர் துய்ப்ளே, சென்னையின் ஆங்கிலேய ஆளுநர் மோர்சிடம் ஐரோப்பாவில் இருவரிடையே போர்மூண்டாலும் இங்கே நடுநிலைமை காக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் பார்னெட் என்பாரின் தலைமையிலான ஆங்கிலக் கப்பற்படை இந்தியப் பொருட்களை ஏற்றிச் சென்ற சில பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றியது. இந்நிகழ்வால் அதிர்ச்சிக்குள்ளான துய்ப்ளே கர்நாடக நவாப் அன்வாருதீனின் உதவியை நாடி ஆங்கிலேயரோடு போர் ஏற்படுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார். இதனால் சில காலம் அமைதி நிலவியது.

இதனிடையே துய்ப்ளே, பிரான்சின் தீவின் (Isle of France) ஆளுநராக இருந்த லா போர்டோனாய் என்பவரைத் தொடர்பு கொண்டார். அவர் தனது எட்டு போர்க் கப்பல்களுடன் இந்தியப் பெருங்கடலுக்குள் நுழைந்தார். ஆங்கிலக் கப்பற்படைக்குத் தலைமையேற்ற பைடன் தனது நான்கு கப்பல்களோடு பிரெஞ்சுக் கப்பல்களை இடைமறித்தார். 1746 ஜூலை 6 ஆம் நாள் நடைபெற்ற இப்போரில் தோல்வியடைந்த பைடன் இங்கிலாந்திலிருந்து வரவேண்டிய கப்பல்களை எதிர்பார்த்து கல்கத்தாவிலுள்ள ஹுக்ளிக்குப் பின்வாங்கினார்.

**சென்னையின் வீழ்ச்சி:**

வெற்றிபெற்ற பிரெஞ்சுக் கப்பற்படை பாதுகாப்பற்றிருந்த சென்னையை 1746 செப்டம்பர் 15 ஆம் நாள் கைப்பற்றியது. சென்னை ஆளுநர் மோர்ஸ் சரணடையுமாறு அறிவுறுத்தப்பட்டார். ஆனால் அவர் ஆற்காடு நவாப் அன்வாருதீனின் உதவியை நாடினார். அரசியல் விவேகத்துடன் செயல்பட்ட துய்ப்ளே சென்னையைக் கைப்பற்றி நவாப்பிடமே ஒப்படைக்கப்போவதாகக் கூறி அவரை சமாதானம் செய்தார். 1746 செப்டம்பர் 21இல் ஆங்கிலேயர் சென்னையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் ஏற்கனவே வாக்குறுதியளித்தபடி சென்னையைத் தன்வசம் ஒப்படைக்கும்படி அன்வாருதீன் கேட்டபோது துய்ப்ளே தட்டிக்கழித்தார். உடனடியாக நவாப் 10,000 வீரர்களைக்

கொண்ட ஒரு படையை தனது மகன் மாபுஸ்கானின் தலைமையில் அனுப்பி வைத்தார்.

**சாந்தோம், அடையாறு போர்கள்:**

நவாப்பின் படைகள் புனித ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி வளைத்தன. ஆனால் பிரெஞ்சுப் படைகள் அவற்றை சாந்தோம் வரை பின்னுக்குத் தள்ளின. இதனிடையே பிரெஞ்சுப் படைகளுக்கு கூடுதல் படைகள் வந்து சேர்ந்தன. பிரெஞ்சுப் படைகளின் முன்னேற்றத்தை அடையாறு ஆற்றங்கரையில் தடுத்து நிறுத்த மாபுஸ்கான் முயற்சி மேற்கொண்டார். ஆனால் பிரெஞ்சுப்படைகள் சிரமப்பட்டு நீரைக் கடந்து நவாப்பின் படைகளைத் தீவிரமானத் தாக்கின. நவாப்பின் படைகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளானது.

இதன் பின்னர் துய்ப்ளே கடலூரிலிருந்த ஆங்கிலேயருக்குச் சொந்தமான புனித டேவிட் கோட்டையின் மீது கண் வைத்தார். ஆங்கிலேயர் நவாப்பின் உதவியோடு பிரெஞ்சுக்காரரிடம் தாங்கள் இழந்த பகுதிகளை மீட்கும் முயற்சியில் இறங்கினர். துய்ப்ளே மீண்டும் ஒரு அரசியல் விவேக விளையாட்டை விளையாடினார். அவர் நவாப்பிடம் ஒருவார காலத்திற்குப் புனித ஜார்ஜ் கோட்டையில் நவாப்பின் கொடியை பறக்கவிட்ட பின்னர் கோட்டையை ஆங்கிலேயர் வசம் ஒப்படைத்துவிடுவதாக கொடியை பறக்கவிட்ட பின்னர் கோட்டையை ஆங்கிலேயர் வசம் ஒப்படைத்துவிடுவதாக உறுதிமொழி அளித்தார். மேலும் பிரெஞ்சுக்காரர் நவாபுக்கு ரூ 40,000 மதிப்புள்ள பரிசுகளை வழங்கினர். நவாபும், ஆங்கிலேயருக்கு வழங்க இருந்த உதவிகளை திரும்பப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தார். இதனிடையே ஆங்கிலப்படைகள் கடற்படைத் தலைவர் பாஸ்கோவென் தலைமையில் புதுச்சேரியைக் கைப்பற்ற மேற்கொண்ட இரு முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. இந்நிலையில் 1748 இல் ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் ஐ லா சபேல் (Aix La Chapelle) உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இவ்வுடன்படிக்கையின்படி இந்தியாவில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் தங்கள் மோதல்களை முடித்துக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர் சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பித தருவதென்றும் அதற்கு மாறாக வட அமெரிக்காவில் லூயிஸ்பர்க் என்ற இடத்தை பிரெஞ்சுக்காரருக்குக் கொடுப்பதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**ஆனந்தரங்க பிள்ளை நாட்குறிப்புகள்:**
ஆனந்தரங்க பிள்ளை (1709- 1761) அக்காலத்தில் தலைசிறந்த வணிகராக விளங்கிய திருவேங்கடம் பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார். தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் பிரெஞ்சு ஆளுநர்களான டூமாஸ், துய்ப்ளே ஆகியோர் கொடுத்த ஆதரவால் புதுச்சேரியில் மாபெரும் வணிகரானார். துய்ப்ளே இவரை தலைமை துபாஷியாகவும் (துபாஷி - இரு மொழிகள் அறிந்தவர்) தலைமை வணிக முகவராகவும் (1746) அமர்த்தினார். இது அவரை புதுச்சேரியில் பெரும் அரசியல் செல்வாக்குள்ள நபராக மாற்றியது. ஆனால் அவருடைய உண்மையான புகழ், தமிழில் எழுதப்பட்ட ஏராளமான செய்திகளை உள்ளடக்கிய அவருடைய நாட்குறிப்புகளைச் சார்ந்துள்ளது. அவரின் நாட்குறிப்பு 1736 முதல் 1760 வரையிலான காலத்திற்கு, முக்கியமாக துய்ப்ளே ஆளுநராக இருந்த காலப்பகுதியின் வரலாற்றுக்கு மிகவும் மதிப்புமிக்க சான்றாதாரமாகும். மேலும் அது சமகால நிகழ்வுகள் குறித்த அவருடைய பார்வை மற்றும் கருத்துக்களின் பதிவுமாகும்.

## இரண்டாம் கர்நாடகப் போர் 1749 – 1754

ஐரோப்பாவில் பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே அமைதி நிலவியது. ஆனால் இந்தியாவில் இவ்விரு காலனி நாடுகளாலும் அமைதியாக இருக்க முடியவில்லை. சுதேச அரசர்களை ஒருவருக்கு எதிராக மற்றொருவரைத் தூண்டிவிட்டனர். ஆற்காடு, ஹைதராபாத் அரசுகளில் ஏற்பட்ட வாரிசுரிமை போர்களில் பங்கெடுப்பதன் மூலமட் துய்ப்ளே பிரான்சின் செல்வாக்கை மேம்படுத்த விரும்பினர்.

ஹைதரபாத்தின் நிஜாம் அசப்ஜா 1748 இல் மரணமடைந்தார். அவருடைய பேரன் முஜாபர் ஜங் அடுத்த நிஜாமாக ஆவதற்கு உரிமை கொண்டாடியதை துய்ப்ளே ஆதரித்தார். ஆற்காட்டில் முகமது அலிக்கு எதிராக சந்தா சாகிப்பை ஆதரித்தார். பிரெஞ்சுக்காரர், நிஜாம், கர்நாடக நவாப் ஆகியோரிடையே ஒரு முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது.

பெரும் மதிப்பு வாய்ந்த சென்னையை இழந்த ஆங்கிலேயருக்குப் புனித டேவிட் கோட்டை மட்டுமே இருந்தது. பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை குறைப்பதற்காக ஆங்கிலேயர் ஹைதராபாத் அரியணைக்கு எதிர் போட்டியாளரான நாசிர் ஜங்கையும், கர்நாடகத்தில் 1749 இல் நடைபெற்ற ஆம்பூர் போரில் நவாப் அன்வாருதீன் கொல்லப்பட்ட பின்னர் அவ்வரியணைக்கு முகமது அலியையும் ஆதரித்தனர்.

ஆம்பூர் போரைத் தொடர்ந்து வெற்றி பெற்ற படைகள் தக்காணத்தில் நுழைந்தன. பிரெஞ்சுப்படைகளால் நாசிர் ஜங் கொல்லப்பட்டார். முஜாபர் ஜங் 1750 டிசம்பரில் ஹைதராபாத்தின் நிஜாமாக ஆக்கப்பட்டார். பேரரசை நிறுவவேண்டுமென்ற துய்ப்ளேயின் கனவு நனவாகலாம்

**ஆம்பூர் போர் (1749)**
ஹைதராபாத் நிஜாமிற்கு உரிமை கோரிய முஜாபர் ஜங், கர்நாடக அரியணைக்கு உரிமைகோரிய சந்தா சாகிப் ஆகிய இருவரும் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட பிரெஞ்சுக் காலாட்படைகளின் உதவியோடு அன்வாருதீன் படைகளைத் தாக்கி பெருமளவு சேதத்தை ஏற்படுத்தினர். போரில் அன்வாருதீன் கொல்லப்பட்டார். சந்தா சாகிப் நவாபாக ஆற்காட்டினுள் நுழைந்தார். இதே சமயத்தில் அன்வாருதீனின் மகனான முகமது அலி திருச்சிக்குத் தப்பிச் சென்றார்.

என்ற நிலை சில காலமிருந்தது. நிஜாமிடமிருந்தும் ஆற்காடு நவாப்பிடமிருந்தும் துய்ப்ளே பெருமளவு பணத்தையும் நிலங்களையும் பெற்றார். முஜாபர் ஜங் பிரெஞ்சுக்காரரின் பாதுகாப்பைக் கோரியபோது துய்ப்ளே பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி அவருடன் அதிக எண்ணிக்கையில் பிரெஞ்சு வீரர்களையும் அனுப்பி வைத்தார். ஆனால் முஜாபர் ஜங் நீண்ட நாட்கள் உயிரோடில்லை. நாசிர் ஜங்கை யார் கொன்றார்களோ அவர்களே முஜாபர் ஜங்கையும் கொன்றனர். உடனடியாக புஸ்ஸி நாசிர் ஜங்கின் சகோதரனான சலபத் ஜங் என்பாரை அரியணை ஏற்றினார். சந்தா சாகிப் ஆங்கிலேயரின் செல்வாக்கை குறைக்க வேண்டும் என்பதற்காகவும் முகமது அலியைக் கைது செய்யவும் (அன்வாருதீன்

கொல்லப்பட்ட பின்னர் திருச்சிக்கு தப்பியோடியவர்) நிஜாம் மற்றும் பிரெஞ்சுக்காரர் உதவியுடன் திருச்சியைக் கைப்பற்ற முடிவு செய்தார்.

**கிளைவும் இரண்டாவது கர்நாடகப் போரும்:**

சந்தா சாகிப்பின் உதவியோடு திருச்சியைக் கைப்பற்ற வேண்டுமென துய்ப்ளேயும் உதவி பூண்டிருந்தார். சந்தா சாகிப்பின் படையோடு பிரெஞ்சுப் படையினர் 900 பேர் சேர்ந்தனர். முகமது அலி 5000 படைவீரர்களையும் தனக்கு உதவியாக 600 க்கும் மிகாத ஆங்கில வீரர்களை மட்டும் கொண்டிருந்தார். ராபர்ட் கிளைவின் எண்ணம் வரலாற்றின் போக்கை மாற்றியமைத்தது. பிரெஞ்சுக்காரரும் நவாப்பும் திருச்சி முற்றுகையில் தீவிரமாக இருக்கையில் ஆற்காட்டின் மீது திடீர் தாக்குதலைத் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை ராபர்ட் கிளைவ் முனைவைத்தார்.

ராபர்ட் கிளைவ் 1725 செப்டம்பர் 29 இல் பிறந்தார். அவருக்குக் கல்வியில் ஆர்வமில்லை. படிப்பில் ஆர்வமின்மை, ஒழுக்கமின்மையால் மூன்று பள்ளிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார். மேலும் சண்டைக்காரன் என்ற அவப்பெயரையும் பெற்றார். அவருடைய நடத்தையால் வெறுப்புக் கொண்ட அவரின் தந்தை அவரை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுத்தர் பணியில் அமர்த்தி இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். கிளைவ் சென்னை மாகாண ஆளுநராக உருவானார். முதல் முறை ஆளுநராக இருந்தபோது (1755 – 60) பிளாசிப் போரில் வெற்றிபெற்று அதன் மூலம் இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசிற்கு அடித்தளமிட்டார். இரண்டாவது முறை 1764 – 1767 ஆளுநராக இருந்தபோது பக்சார் போரில் வெற்றி பெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமைகொள்ளச் செய்தார். அவர் இந்தியாவை விட்டுச் செல்லும் போது மிகப் பெரிய செல்வராக வெளியேறினார். அவரின் தனிப்பட்ட சொத்தாக 2,34,000 பவுண்டுகள் இருந்தது. அது தவிர வங்காளத்திலுள்ள அவரது ஜாகிர் மூலம் 27,000 பவுண்டுகள் வருடாந்திர வாடகை வருவாயைப் பெற்றார். அவர் இங்கிலாந்து திரும்பியபோது தன் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்துப் பாராளுமன்ற விசாரணையை எதிர் கொண்டார். கிளைவ் தன் மீதான குற்றசாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட போதிலும் தற்கொலை செய்து கொண்டார்.

கிளைவ் 1752 ஆகஸ்ட் 26 இல் புனித டேவிட் கோட்டையிலிருந்து 200 ஆங்கிலேயே, 300 இந்திய வீரர்களுடன் புறப்பட்டார். எதிர்பார்த்தபடி சிறிய பகுதிகளைச் சேர்ந்த பல அரசர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றனர். மைசூர் மற்றும் தஞ்சாவூர் அரசர்கள் முகமது அலியை ஆதரித்தனர். சந்தா சாகிப் உடனடியாக 3000 வீரர்களைத் தனது மகன் ராஜா சாகிப்பின் தலைமையில் ஆற்காட்டுக்கு அனுப்பி வைத்தார். 1752 ஆகஸ்ட் 31 இல் ஆற்காட்டைக் கைப்பற்றிய கிளைவ் ராஜாசாகிப்பின் 53 நாள் கோட்டை முற்றுகையையும் தாக்குப்பிடித்தார். ராஜாசாகிப்பிற்குப் புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரர் உதவினர். ஆரணி போரில் ஆங்கிலேயரும் மராத்திய அரசர் முராரிராவும் தங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான பிரெஞ்சு மற்றும் ஆற்காட்டுப் படைகளை எதிர் கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற பல போர்களில், குறிப்பாக காவேரிப்பாக்கத்தில் நடைபெற்ற போரில் சந்தா சாகிப் பிடிபட்டு கொல்லப்பட்டார். முகமது அலி எதிர்ப்பேதுமில்லாமல் கர்நாடகத்தின் அரசரானார்.

ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் எப்போரிலும் ஈடுபடாத நிலையில் இந்தியாவில் தங்கள் காலனிகள் போரில் ஈடுபடுவதைக் கண்டனம் செய்தனர். பிரெஞ்சு அரசாங்கம் துய்ப்ளேயை திரும்ப அழைத்துக் கொண்டது. 1755 இல் ஆங்கிலேயருடன் புதுச்சேரி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. இந்திய சுதேச அரசுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளில் தலையிடுவதில்லை என இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன. இவ்வுடன்படிக்கை, இந்தியாவில் இவ்விருவரும் சொந்தமாகக் கொண்டிருந்த பகுதிகளைத் தெளிவாக வரையறுத்தது. இந்நிலை சுமார் இருநூறு ஆண்டு காலம் இந்தியா விடுதலை பெறும் வரை நடைமுறையிலிருந்தது.

**மூன்றாம் கர்நாடகப் போர் 1756 – 1763**

ஐரோப்பாவில் 1756 இல் தொடங்கிய ஏழாண்டுப் போரின் (1756 – 1763) விளைவே மூன்றாம் கர்நாடகப் போராகும். உலகளாவிய இம்மோதலில் முக்கிய எதிரிகளான இங்கிலாந்தும் பிரான்சும் போரிட்டன. இப்போர் வட அமெரிக்காவிலும் (அமெரிக்க விடுதலைப் போராக முடிந்தது) மேற்கு ஆப்பிரிக்காவிலும் (பின்னர் பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா என்றானது) நடைபெற்றது. இந்தியாவில் இது மூன்றாவது கர்நாடகப் போராக வெளிப்பட்டது.

நம்முடைய கவனத்தை மூன்றாம் கர்நாடகப் போரில் திருப்பும் முன்னர், இதே நேரத்தில் வங்காளத்தில் என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம்.

**பிளாசி போர் (1757)**

வங்காளத்தில் உள்நாட்டு வணிகத்தில் பங்கேற்பதற்காக வங்காள நவாப்புக்கு செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்தாமல், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் வணிகக் குழு, முகலாய அரசு வழங்கிய வணிக உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தியது. இதைத் தவிர வங்காள நவாப் சிராஜ் உத் தௌலாவுடன் பகை கொண்டிருந்த அவருடைய சகோதரியின் மகனுக்கு வணிகக்குழு அடைக்கலம் வழங்கியது. அவரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு நவாப் கேட்டபோது வணிகக்குழு மறுத்துவிட்டது. இதனால் நவாப் வில்லியம் கோட்டையைக் கைப்பற்றி ஆங்கிலேயரைச் சிறையில் அடைத்தார். வில்லியம் கோட்டையைச் சேர்ந்த ஆங்கில அதிகாரிகளின் இடர்பாடுகளைக் களைவதற்காக வணிகக்குழு புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து ஒரு வலுவான படைப்பிரிவை ராபர்ட் கிளைவ், வாட்சன் ஆகியோர் தலைமையில் அனுப்பி வைத்தது. இதனைத் தொடர்ந்து நடைபெற்றப் போரே வரலாற்று அறிஞர்களால் பிளாசிப் போர் என அழைக்கப்படுகிறது.

வங்காள நவாப்பால் கைது செய்யப்பட்ட 146 ஐரோப்பியர் 18 க்கு 15 அடி அளவுள்ள ஓர் அறையில் அடைக்கப்பட்டதாகவும் அவர்களில் 23 பேர் மட்டுமே உயிர்பிழைக்க மற்றவர்கள் மூச்சுத்திணறி இறந்து போனதாகவும் பழி சொல்லப்பட்டது. இருட்டறைத் துயரம் (Black Hole Tragedy) என ஆங்கிலேய ஆவணங்களில் சுட்டும் இந்நிகழ்வின் உண்மைத் தன்மை குறித்து வரலாற்று அறிஞர்களிடையே விவாதம் நடைபெறுகிறது.

பிளாசிப் போர் வணிக நிறுவனமாக இருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழுவை, வங்காளத்தின் மீது இறையாண்மை கொண்ட அரசியல்

சக்தியாக மாற்றியது. ஆங்கியேலர் பெற்றிருந்த வணிக உரிமைகளை இது உறுதி செய்தது. சிராஜ் உத்தௌலாவிற்குப் பதிலாக அவருக்குத் துரோகமிழைத்த மீர் ஜாபர் வங்காள நவாப் ஆக்கப்பட்டார். கல்கத்தாவின் மீதான வணிகக்குழுவின் இறையாண்மை அங்கீகரிக்கப்பட்டது. தன்னுடைய படைகளைப் பராமரிப்பதற்காக வணிகக்குழுவிற்கு நிலம் வழங்கப்பட்டது. வணிகக்குழுவின் அதிகாரி (Resident) ஒருவரை தன்னுடைய அவையில் அமர்த்திக்கொள்ளவும் மீர்ஜாபர் ஒத்துக்கொண்டார். பின்னர் மீர்ஜாபருக்குப் பதிலாக மீர்காசிம் நவாப் ஆக்கப்பட்டார். இவர் தன் சுதந்திரத்தை நிலைநிறுத்த மேற்கொண்ட முயற்சியை வணிகக்குழுவின் அதிகாரிகள் விரும்பவில்லை.

**பக்சார் போர் (1764):**

வங்காளத்திலிருந்து தப்பியோடிய மீர்காசிம் முகலாய அரசர் இரண்டாம் ஷா ஆலம், அவத்தின் நவாபான சூஜா உத்தௌலா ஆகியவர்களோடு கூட்டு சேர்ந்தார். தங்கள் உள் விவகாரங்களில் வணிகக்குழு தலையிடுவதால் அவர்களும் மனக்குறையோடு இருந்தனர். இம்மூவரும் வணிகக் குழுவுக்கு எதிராகப் போர் அறிவிப்புச் செய்தனர். 1764 இல் பக்சார் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் இம்மூவரும் வீரத்துடன் போரிட்டனா. வணிகக்குழுவின் படைகள் சிறப்பு வாய்ந்ததாக இருந்தமையால் அவர்கள் போரில் வெற்றி பெற்றனர். பக்சார் போரில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றி 1765 இல் அலகாபாத் உடன்படிக்கைக்கு இட்டுச் சென்றது. ராபர்ட் கிளைவும் இரண்டாம் ஷா ஆலமும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ்வுடன் படிக்கையின் மூலம் வணிகக்குழு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் திவானி (நிலவரி வசூலிக்கும் உரிமை) உரிமையைப் பெற்றது. மேலும் வங்காளத்திலிருந்த பர்த்தவான், மிட்னாபூர், சிட்டகாங் ஆகிய மூன்று மாவட்டங்களையும், கல்கத்தாவின் மீதான இறையாண்மையையும் பெற்றது. ஆங்கிலேயர் வங்காளத்தின் ஆட்சியாளராக மாறினர்.




**மூன்றாம் கர்நாடகப் போர்:**

ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் வெடித்தவுடன், வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான சந்தன் நகரைக் கிளைவ் கைப்பற்றினார். இத்துடன் வங்காளத்தில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு முடிவுக்கு வந்தது. பிரெஞ்சு அரசு கவுண்ட் - டி – லாலி என்பவரை இந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் படைகளுக்குத் தலைமைத் தளபதியாக அனுப்பி வைத்தது. ஆங்கிலேயர் வங்காளத்தில் தங்கள் கவனத்தைக் குவித்திருந்ததால் லாலி சிலநாள் முற்றுகைக்குப் பின்னர் உடனடியாக டேவிட் கோட்டையை கைப்பற்றினார். அடுத்து தஞ்சாவூர் அரசரிடமிருந்து பணம் எதிர்பார்த்தனர். ஆனால் அவரால் தர இயலவில்லை. புதுச்சேரியை ஆங்கிலப்படைகள் தாக்கும் ஆபத்து இருந்ததால் ஒரு பைசா லாபமில்லாமல் தஞ்சாவூர் முற்றுகை கைவிடப்பட்டது. ஒரு வேளை புதுச்சேரி தாக்கப்பட்டால் தனக்கு உதவியாக இருப்பதற்காக லாலி ஹைதராபாத்திலிருந்த புஸ்ஸியை அழைத்தார். இடையில் தக்காண அரசியலில் மாற்றங்கள் வேகமாக நடைபெற்றன. இராஜமுந்திரியை 1758 இலும் மசூலிப்பட்டிணத்தை 1759 இலும் பிரெஞ்சுக்காரர் இழந்தனர். ஹைதராபாத் நிஜாம் சலபத்ஜங் போரே செய்யாமல் ஆங்கிலேயரோடு ஒப்பந்தம் செய்து கொண்டார். பிரெஞ்சுக்காரருக்குத் தான் ஏற்கனவே வழங்கியிருந்த மசூலிப்பட்டினத்தையும் வடசர்க்கார் பகுதிகளையும் அவர் ஆங்கிலேயருக்கு மாற்றி வழங்கினார்.

புஸ்ஸி, லாலி ஆகியோரின் கூட்டுப்படை காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி, சென்னையைக் கைப்பற்ற விரைந்தது. ஆங்கிலேயர் வங்காளத்தில் தீவிரமாகச்

செயல்பட்டுக்கொண்டிருந்ததால் சென்னையில் 800 ஆங்கில வீரர்களையும் 2500 இந்திய வீரர்களையும் மட்டுமே கொண்டிருந்தனர். 1758 டிசம்பர் 12 ஆம் நாள் சென்னையை முற்றுகையிடத் தொடங்கிய பிரெஞ்சுக்காரரால் 1759 பிப்ரவரி வரை சிறிதும் கூட முன்னேற முடியவில்லை. இரண்டு பக்கங்களிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. இருந்தபோதிலும் படைகளுக்குத் தேவையான பொருட்களின் வரதது சுருங்கியதால் பிரெஞ்சுக்காரரால் முற்றுகையை நீட்டிக்க இயலவில்லை. இதே சமயத்தில் சென்னையை விடுவிப்பதற்காக ஆங்கிலேய ஜெனரல் பொகாக் ஒரு கப்பற்படையோடு இந்தியா வந்தார். லாலி முற்றுகையைக் கைவிட்டுக் காஞ்சிபுரம் செல்லும கட்டாயத்திற்கு உள்ளானார்.

**வந்தவாசிப் போரும் புதுச்சேரியின் வீழ்ச்சியும்:**

பிரெஞ்சுப் படைகளை ஆற்காட்டில் விட்டு விட்டு லாலி புதுச்சேரி திரும்பினார். வந்தவாசியை நோக்கிச் சென்ற ஆங்கிலப்படைகள் திடீரென காஞ்சிபுரத்தைத் தாக்கிக் கைப்பற்றின. சர்அயர் கூட் என்பவரின் தலைமையில் புதிய ஆங்கிலப்படைப்பிரிவும வந்து சேர்ந்தது. இறுதியில் 1760 ஜனவரி மாதம் இறுதிப்போர் அயர் கூட், லாலி ஆகியோரிடையே வந்தவாசியில் நடைபெற்றது. புஸ்ஸி தோற்கடிக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டார். லாலி புதுச்சேரிக்குப் பின் வாங்கினார். ஆனால் புதுச்சேரி உடனடியாக முற்றுகையிடப்பட்டது. இதே சமயத்தில் செஞ்சியைக் கைப்பற்றிய ஆங்கிலப்படைகள், புதுச்சேரியை முற்றுகையிட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகளை மாற்றிய அமைத்த லாலி தீரத்துடன் போராடினார். பல மாதங்கள் நீடித்த புதுச்சேரி முற்றுகை 1761 பிப்ரவரி மாதம் 4 ஆம் நாள் முடிவுக்கு வந்து புதுச்சேரி வீழ்ந்தது. லாலி கைது செய்யப்பட்டு பிரெஞ்சு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டார். தன்னுடைய நாட்டில் லாலி விசாரணை செய்யப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டது. அதே ஆண்டில் பிரெஞ்சு வணிகக்குழுவிற்குச் சொந்தமான மாகியையும் ஆங்கிலேயர் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். பிரெஞ்சுக்காரர்கள் அனைத்து இடங்களையும் இழந்தனர். ஏழாண்டுப் போரின் இறுதியில், 1763 இல் பாரிஸ் உடன்படிக்கை கையெழுததானபோது அனைத்துப் போர்களும் முடிவுக்கு வந்தன. பாரிஸ் உடன்படிக்கையின்படி புதுச்சேரியும் சந்தன்நகரும் மீண்டும் பிரெஞ்சுக்காரருக்கு வழங்கப்பட்டது. எனவே பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் (யூனியன் பிரதேசமான புதுச்சேரியின் பகுதிகள்), மாகி (கேரளாவிலுள்ள கண்ணூர் மாவட்டம்), சந்தன்நகர் (வங்காளம்) ஆகிய பகுதிகளை மட்டுமே தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர். வணிக நிறுவனமாக இருந்த இங்கிலாந்து பெரும் நிலப்பரப்பை ஆளுகின்ற சக்தியாக மாறி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட காலனியாதிக்க நாடாக எழுச்சி பெற்றது.

# 17. ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்

## அறிமுகம்

முகலாயப் பேரரசின் வீழ்ச்சியோடு மைய அதிகாரம் நொறுங்கியதால் ஓர் ஆங்கிலேய வணிக நிறுவனம் இந்தியாவை கையகப்படுத்தும் நிலை ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கம் நிர்வாகம் செய்வது அல்ல; மாறாக அது சிக்கலில்லாமல் வியாபாரம் புரிவதாகவே இருந்தது. எனினும், வங்காளத்தில் 1770இல் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்திற்குப் பின் சற்றே அதிகாரத்தை பொறுப்புணர்வு கொண்டதாக அவர்கள் மாற்றினர். ஒருபுறம் பாரபட்சமான சுரண்டல் பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடித்தபோதும், அவர்கள் தாங்கள் ஆண்ட மக்களின் பாதுகாப்பையும் அவர்களின் நீதி நடைமுறைகளையும் காக்க முயல்வதாகப் பறைசாற்றிக் கொண்டார்கள். பாரம்பரிய அரசாட்சி சர்வாதிகாரக் கொடுமையை உள்ளடக்கியதாக இருப்பதாலும், எதிர்பாராத படையெடுப்புகளாலும் கள்வர்களாலும் மக்கள் இன்னல் அனுபவிப்பதாலும் தங்களின் அதிகாரம் விரிவடைவது தவிர்க்க முடியாததென நியாயப்படுத்திக் கொண்டார்கள். இருப்புப்பாதை ஏற்படுத்தியதும், தந்தி தொடர்பு முறையும், எதிர்ப்புகளை ஒடுக்கவும், உள்ளூர் மக்களை எளிதாகக் கட்டுப்படுத்தவும் உதவின. ஆங்கிலேயரின் விவசாய, வணிகக் கொள்கைகள் இந்தியப் பொருளாதாரத்தை நாசப்படுத்தின. இந்திய நாட்டின் வளங்கள் பல வகைகளிலும் கொள்ளைபோயின. பாதிக்கப்பட்ட விவசாயிகளும் நெசவாளர்களும் இதன் விளைவாக 1830களின் பின் அதிக அளவில் ஆங்கிலேய அதிகாரம் பரவியிருந்த நாடுகளில் இருந்த தோட்டங்களுக்கு கூலி உழைப்பாளிகளாகப் புலம்பெயர்ந்தார்கள்.

## ஆங்கிலேய அரசு உருவாக்கம்

ஆங்கிலேயர் இந்தியாவில் காலூன்ற பக்சார் போரே முக்கியக் காரணமாகும். வங்காளம், அவத் நவாபுகள் மட்டுமல்லாமல் முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலமும் ஆங்கிலேயரை எதிர்த்தார். பக்சார் போரின் முடிவில், கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரத் தன்மையை இழந்து அசைக்கமுடியாத அரசியல் சக்தியாக உருவெடுத்தது. போரின் முடிவில் ராபர்ட் கிளைவ் இங்கிலாந்திற்குச் சென்றார். வங்காள நிர்வாகத்தில் ஊழல் மலிந்துவிட்டதாகக் கருதப்பட்டதால் அவர் வில்லியம் கோட்டை ஆளுநராக நியமிக்கப்பட்டார். கிளைவிற்கு, அவருக்கு முன்பாக பதவி வகித்த ஆளுநரான வான்சிடார்ட் அவத்தை ஷா ஆலம் வசம் மீண்டும் ஒப்படைத்தது ஏற்புடையதாக இல்லை. அதனால் அவர் சூஜா-உத்-தௌலாவுடன் புதிய பேச்சு வார்த்தையைத் துவங்கினார். அதன் விளைவாக இரு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. வங்காளம், பீகார், ஒரிசா பகுதிகளின் திவானி (வருவாய் நிர்வாகம்) அதிகாரம் கம்பெனி வசம் ஒப்படைக்கப்பட்டது. அலகாபாத், காரா பகுதிகளின் நிர்வாகத்தைப் பெறுவதோடு பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் வங்காளம், பீகார், ஒரிசா பகுதிகளின் வருவாயிலிருந்து ஆண்டுக்கு 26 இலட்சம் ரூபாய் பெறப்போவதாக அறிவிக்கப்பட்டது. போர் இழப்பீடு வழங்கிவிட்டு சூஜா-உத்-தௌலா அவத் பகுதியை தக்க வைத்துக்கொள்ள உறுதி செய்யப்பட்டது. வங்காளம், பீகார், ஒரிசா பகுதிகளின் பொது நிர்வாகம் வங்காள நவாபின் பொறுப்பானது.

பேரரசர், கிளைவிடம் திவானி பொறுப்பை ஒப்படைக்கும் முன்பே மீர் ஜாபரின் வாரிசாக பொறுப்பெற்ற நவாப், நிஜாமத் (பொது நிர்வாகம்) பொறுப்புகளைக் கம்பெனி வசம் ஒப்படைத்திருந்தார். ஆகவே திவானாகவும் நசீமாகவும் கம்பெனி செயல்பட வேண்டியிருந்தது. திவானின் கடமை வரி வசூலிப்பதும் குடிமக்களின் நீதி நிர்வாகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் ஆகும். நசீமின் கடமையோ இராணுவச் செயல்பாடுகளும் குற்றவியல் நீதி வழங்கலும் ஆகும். இவ்வாறாகக் கம்பெனி மெய்யான முழு அதிகாரத்தையும் தன்வசம் தக்க வைத்துக்கொண்டு வெற்று நிர்வாகச் சுமையை மட்டுமே நவாபிடம் விட்டு வைத்தது. இத்தகைய நிர்வாக முறையே 'இரட்டை ஆட்சிமுறை' என்றும் இரட்டை அரசுமுறை (dyarchy) என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஆனால் 'இரட்டை ஆட்சிமுறை' விரைவில் உடையத் துவங்கியது. பொறுப்புகளை ஏற்காத அரசாட்சி முறை வங்காளத்தில் 1770 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான பஞ்சத்திற்கு இட்டுச்சென்றது.

1772 வரை கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தலைவர் ஆளுநரே ஆவார் (வில்லியம் கோட்டையிலோ ஜார்ஜ் கோட்டையிலோ வீற்றிருப்பார்). வில்லியம் கோட்டையில் ஆளுநராகப் பதவியிலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒழுங்கு முறைச் சட்டத்தின் (1773) மூலமாக கவர்னர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டார். கவர்னர் ஜெனரல் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் மன்றத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். 1833 பட்டயச் சட்டம் மூலமாக அப்பதவி இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்று நிலையேற்றம் பெற்றது. அப்பதவியும் இயக்குநர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதோடு, பதவி வகிப்பவர் இயக்குநர் மன்றத்திற்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய கடமையுமிருந்தது. 1857 பெருங்கிளர்ச்சிக்குப்பின் இந்திய அரசின் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து இங்கிலாந்து அரசு நேரடியாக எடுத்துக்கொள்ள வகைசெய்த 1858இன் 'விக்டோரியா ராணியாரின் பிரகடனம்' முதன்முறையாக அரசப் பிரதிநிதி (வைஸ்ராய் மற்றும் கவர்னர் ஜெனரல்) என்ற சொற்றொடரைக் கையாண்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்ட முதல் வைஸ்ராய் மற்றும் இந்திய கவர்னர் ஜெனரலாக கானிங் நியமிக்கப்பட்டார்.

மூன்றில் ஒருவர் என்ற விகிதத்தில் மக்கள் மடிந்தனர். கம்பெனி ஊழியர்கள் அரிசி வணிகத்தில் கொண்டிருந்த ஏகபோகக் கட்டுப்பாடும், அவர்கள் அவ்வேளையிலும் கடைப்பிடித்த லாப நோக்கமும் துயரச்சூழலை மேலும் அதிகமாக்கியது. இறுதியாகக் கம்பெனி தனது பொறுப்பை உணர்ந்ததன் விளைவாக, 1773ஆம் ஆண்டில் ஒழுங்குமுறைச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. வங்காளத்தின் ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார்.

### நில நிர்வாக முறை: நிலையான நிலவரி முறையும் இரயத்துவாரி முறையும்

ஒழுங்குமுறைச் சட்டம் 1773இன்படி கம்பெனி ஊழியர்களின் வரவுசெலவு கணக்கு பற்றி இயக்குநர் குழு பிரிட்டிஷ் கருவூலத்திற்குத் தெரியப்படுத்துவது சட்டரீதியாக கடமையாக்கப்பட்டது. ஆளுநரும் தலைமைத் தளபதியும் இரு ஆலோசகர்களும் கொண்ட குழு, வருவாய் வாரியமாகச் செயல்பட்டு, வருவாய்

குறித்து விவாதித்தது. 1784ஆம் ஆண்டின் பிட் இந்தியச் சட்டம், இராணுவ மற்றும் குடிமை அமைப்புகளை தனித்தனியாகப் பிரித்தது.

தானே ஒரு நிலச்சுவான்தாரராக இருந்த காரன்வாலிஸ் பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றிய நிலப்பிரபுத்துவ முறையை உருவாக்க நினைத்தார். வருவாய் வசூலிப்பவரோடு கலந்துபேசி அவர் ஒரு முடிவுக்கு வந்தார். இது ஜமீன்தார் என்கிற இடைத்தரகர்களை உருவாக்கியதோடு பயிரிடுவோரைக் குத்தகை விவசாயிகளாக மாற்றியது. இயக்குநர் குழுவின் அறிவுரைப்படி வங்காளம், பீகார், ஒரிசா பகுதிகளின் ஜமீன்தார்களுடன் அவர் ஏற்படுத்திக்கொண்ட அமைப்பு முறையே நிலையான நிலவரி முறையாக அறிபப்படுகிறது. ‘சாசுவதம்’ என்பது நிலத்தை அளவிட்டு அதனடிப்படையில் ஒவ்வொரு ஜமீன்தாரும் அரசுக்கு வழங்க வேண்டிய வருவாயை நிர்ணயம் செய்வதாகும். 1793இல் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளுக்கு அந்த நிர்ணயம் நிரந்தரமாக்கப்பட்டது. இம்முறையின் மூலமாக வரி வசூலிப்போராக இருந்தோர் வாரிசுரிமை கொண்ட ஜமீன்தார்களாக மாற்றி அரசு வழங்கிய நிலத்தின் பயன்களை அனுபவிக்கலானார்கள். நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிற்கு மேலாக வசூலிக்கப்பட்ட அனைத்தையும் ஜமீன்தார்கள் கையகப்படுத்திக் கொண்டார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் கால்நூற்றாண்டு சென்னை மாகாணத்தின் நில வருவாய் வரலாற்றின் தொடக்கக் காலமாகும். ஆரம்பத்தில் பெரும் சர்ச்சைக்குப் பின் நிரந்தர நிலவரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது, செங்கல்பட்டு, சேலம், திண்டுக்கல் மாவட்டங்கள் பல மிட்டாக்களாக பிரிக்கப்பட்டு அதிக தொகைக்குக் கேட்போருக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு நிலவுரிமை பெற்றோர் வேளாண் குடிகளை அப்புறப்படுத்தியமையால் ஓரிரு ஆண்டுகளில் தோல்வியையே எதிர்கொண்டனர். ஆகவே அம்முறை கைவிடப்பட்டது. அதன்பின் வருவாய் வாரியம் (Board of Revenue) கிராமங்களைக் குத்தகைக்கு விடும் முயற்சியை மேற்கொண்டது.

வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் (1833) மகல்வாரிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி நிலவருவாய்க்கான ஒப்பந்தம் நிலத்தின் உரிமையாளரோடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நிலவரியானது பயிர் சாகுபடி செய்பவரிடமிருந்தே வசூலிக்கப்பட்டது.

கிராமக் குத்தகை முறையில், பழைய வரிவசூல் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கிராமமும் மூன்று ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. மிராசுதார் முறை நிலவி வந்த மாவட்டங்களில் நிலவரி வசூலிக்கும் பொறுப்பு மிராசுதார்களிடம் கொடுக்கப்பட்டது. மிராசுதார்கள் இல்லாத பகுதிகளில் கிராமத்தலைவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இம்முறை மோசமான பருவநிலை, தானிய விலைக் குறைவு, குறைந்த கால குத்தகை முறை போன்ற காரணங்களால் தோல்வியடைந்தது. போதிய விளைச்சல் இல்லாத போது மொத்த கிராமங்களும் வரி செலுத்த முடியாமல் புலம் பெயர்வது என்பது சாதாரணமாக நிகழ்ந்தது. அரசு, மாவட்ட ஆட்சியரின் துணையோடு அவ்வாறு புலம் பெயர்ந்தோரை மறுகுடியமர்த்த முயற்சி மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

1814ஆம் ஆண்டு இயக்குநர் குழுவில் இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. இது ஆளுநராக இருந்த தாமஸ் மன்றோ என்பவரால் உருவாக்கப்பட்டது. வேளாண் நிலத்தின் உரிமையாளரும், அதன் வரிகளை செலுத்துபவரும் என்ற பொருள் கொண்ட 'ரைய்யா' என்ற அரபு வார்த்தையின் ஆங்கில திரிபே 'ரயத்' (Ryot) ஆகும்.

தாமஸ் மன்றோ: தாமஸ் மன்றோ 1780இல் மதராஸ் வந்தடைந்தார். முதல் பன்னிரெண்டு வருடங்கள் அவர் ஒரு படை வீரராக மைசூர் போரில் பங்கேற்றார். அவர் பாரமஹால் பகுதியில் (சேலம் மாவட்டம்) 1792 முதல் 1799 வரையிலும், கன்னட பகுதியில் 1799 முதல் 1800 வரையிலும் பணியிலிருந்தார். பிரித்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான கடப்பா, கர்னூல், சித்தூர், அனந்தபூர் ஆகியவற்றிற்கு ஆட்சியராக பணி புரிந்தார். இக்காலத்தில்தான் அவர் இரயத்துவாரி முறை பற்றி யோசிக்கலானார். அவர் 1820 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்திற்கு ஆளுநராக பொறுப்பேற்று அதன் பின் ஏழு வருடங்கள் சேவையாற்றினார். அப்போது 1822ஆம் ஆண்டில் இரயத்துவாரி முறையை செம்மையாக அறிமுகப்படுத்தி செயலூட்டினார். அவர் ஆளுநராக இருந்த காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு கல்விக்கான செலவீனங்களை எதிர்காலத்திற்கான முதலீடாகவே கருதினார். அவர் நிர்வாகத்தில் இந்தியர்கள் பெருமளவில் பங்காற்றுவதை ஆதரித்தார். அவர் ஜூலை 1827 ஆம் ஆண்டு கர்னூலில் அமைந்துள்ள பட்டிக்கொண்டாவில் காலரா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். மக்களிடையே பிரபலமாகியிருந்த ஆளுநரான அவரின் நினைவாக பல நினைவிடங்கள் எழுப்பப்பட்டதோடு, குழந்தைகள் பலருக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டது. பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து அவரது சிலை வடிவமைக்கப்பட்டு 1839 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது.

ரயத் என்ற சொல்லிற்கு உழவர் என்று பொருள். எந்த இடைத்தரகரும் இல்லாமல் அரசே நேரடியாகப் பயிரிடுவோருடன் தொடர்பு கொள்வதே இம்முறையாகும். நிலவரி செலுத்தும் வரை விவசாயம் செய்வோரின் வசமே நிலமிருப்பது உறுதி செய்யப்பட்டது. வரி செலுத்தாதோரை நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதோடு அவர்களது கட்டுப்பாட்டிலிருந்த கால்நடை, வீடு தனிப்பட்ட உடைமை போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன. அரசு, பயிர் செய்யப்பட்ட ஒவ்வொரு வயலிலிருந்தும் கிடைக்ககூடிய வருவாயைக் கணித்தது. தானிய விலை மாற்றம், சந்தைப்படுத்தும் வசதிகள், பாசன வசதி போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முப்பது ஆண்டுக்கு ஒருமுறை தீர்வு மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. இரயத்துவாரி முறை நிலத்தில் தனியுடைமையை அறிமுகப்படுத்தியது. தனிப்பட்ட உடைமையாளர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. அவர்கள் நிலத்தை விற்பதற்கும், அடமானம் வைப்பதற்கும், குத்தகைக்கு விடுவதற்கும், உரிமையை மாற்றிக் கொடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

**துணைப்படைத் திட்டமும், வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும்**

கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி (1798-1805) பிரிட்டிஷ் ஆட்சியை உறுதி செய்யும் பொருட்டு ஒரு முன்னோக்கிய கொள்கையை பின்பற்றினார். அவர் சிற்றரசுகளைப் போர் வெற்றியின் மூலமாக வசப்படுத்தவில்லை. அதற்கு மாறாக

அரசர்களைப் பெயரளவிற்கு அங்கீகரித்து அவர்களுக்கு மானியம் வழங்கியதோடு மொத்த நிர்வாகத்தையும் தன் வசப்படுத்தினார்.

வெல்லெஸ்லிக்கு முன்பாக இந்திய அரசர்களோடு கம்பெனி கூட்டணி அமைத்திருந்த நிஜாமும், அவத் நவாபும் பிரிட்டிஷ் படைகளைப் பராமரிக்க மானியம் பெற்றிருந்தார்கள். ஆனால் அவ்வாறு பராமரித்த படைப்பிரிவுகள் அவர்களின் நாட்டு எல்லைகளுக்கு வெளியே தான் நிறுத்தப்பட்டிருந்தன. பராமரிப்புச் செலவு பணமாகவே வழங்கப்பட்டது. பணப்பட்டுவாடா குறித்த நேரத்தில் நடந்தேறாதபோது சிக்கல் எழுந்தது. இம்முறையை வெல்லெஸ்லி துணைப்படைத் திட்டத்தின் மூலம் விசாலமாக்கியதோடு ஹைதராபாத், மைசூர். லக்னோ, மராத்திய பேஷ்வா, போன்ஸ்லே (கோலாப்பூர்), சிந்தியா (குவாலியர்) போன்ற அரசுகளையும் அரசர்களையும் அதன் கீழ்க்கொண்டு வந்தார்.

துணைப்படைத் திட்டத்தின் கூறுகளாவன (அ) கூட்டணிக்குள் வரும் இந்திய ஆட்சியாளர் தனது சொந்தப் படைகளை கலைத்து விட்டு பிரிட்டிஷ் படைகளை ஏற்பதோடு அவர்கள் அனுப்பும் அதிகாரி ஒருவரை ஸ்தானிகராக (Resident) ஏற்க வேண்டும். (ஆ) பிரிட்டிஷ் படைகளுக்கான பராமரிப்புச் செலவை ஏற்க வேண்டும். அது முடியாதபோது மாகாணத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷார் வசம் ஒப்படைக்க வேண்டும். (இ) பாதுகாப்புக்கு உட்பட்ட அரசர் பிற ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்பைத் துண்டித்துக் கொள்ள வேண்டும். அதிலும் பிரெஞ்சு நிர்வாகத்தோடு தொடர்பு இருக்கக்கூடாது. (ஈ) பிரிட்டிஷார் அனுமதியில்லாமல் மற்ற ஐரோப்பியரை பணியிலமர்த்தக் கூடாது. (உ) பிற இந்திய அரசுகளோடு கம்பெனியின் அனுமதியில்லாமல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடாது. (ஊ) எந்த அரசும் பிற அரசுகளின் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிடக்கூடாது. இவ்வாறு சுதேச அரசுகள் தங்கள் இறையாண்மையை இழந்து அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களில் கம்பெனியை சார்ந்திருக்கும் நிலை உருவாக்கப்பட்டது.

துணைப்படைத் திட்டம் கம்பெனி அரசின் இராணுவ பலத்தை உயர்த்தியதோடு அதன் ஒட்டுமொத்தத் திறனையும் கூட்டியது. அதன் உடனடி விளைவு என்பது சொந்த நாட்டில் ஆயிரக்கணக்கான தொழில் முறை போர் வீரர்கள் வேலை இழந்ததே ஆகும். அவ்வாறு கட்டவிழ்த்து விடப்பட்ட வீரர்கள் கொள்ளையர்களாக மாறினார்கள். பிண்டாரிகளின் (கூட்டமாக சூறையாடுவோர்) எண்ணிக்கை துணைப்படைத் திட்டத்திற்கு பின் கணிசமாக உயர்ந்தது. அரசர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கியபோதும், பாதுகாப்பிற்குள்ளிருந்த பல அரசுகளின் நிர்வாகம் திறம்பட இல்லை எனக் குற்றம் சுமத்தி அவற்றை இலகுவாக இணைப்பதும் நடந்தேறியது.

மாகாணம் (Presidency) என்பதற்கும் மாநிலம் (Province) என்பதற்குமான வேறுபாடு: கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமையப் பெற்றிருக்கும் இடம் மாகாணம் ஆகும். அவ்விதத்தில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவை மாகாணங்கள் ஆகும். பின்னர் இம்மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்திய மாநிலம், ஒருங்கிணைந்த மாநிலம் போன்ற பிராந்தியங்கள்

## வாரிசு உரிமை இழப்புக் கொள்கை

இந்து சம்பிரதாயங்களின்படி, வாரிசில்லாத மன்னர் ஓர் ஆண் மகவைத் தத்தெடுக்க முடியும். அவ்வாறு தத்தெடுக்கப்பட்ட மகனுக்குச் சொத்தில் முழு சுவீகார உரிமையும் உண்டு. இச்சூழலில் உச்ச அதிகாரத்திற்கு (இங்கிலாந்திற்கு) கட்டுப்பட்ட ஒரு சிற்றரசு அவ்வதிகாரத்தின் அனுமதி பெறாமல் வாரிசுகளை நியமிக்க முடியமா என்கிற கேள்வி எழுந்தது. டல்ஹௌசியின் வரவுக்க முன்புவரை கம்பெனி அரசின் அனுமதியை சுவீகாரத்திற்கு முன்போ, பின்போ அரச குடும்பத்தினர் பெற்று வந்தனர். ஆனால் டல்ஹௌசியோ இம்முறை உச்சபட்ச அதிகாரத்தின் பார்வைக்கு சென்றால் சட்டபூர்வமான சிக்கலை எதிர்கொள்ளலாம் என்று நினைத்தார். அவ்வாறு இருக்குமாயின் சுவீகார வாரிசுகள் அரியணை ஏறுவது கம்பெனி அரசால் செல்லாதது என்று பிரகடனப்படுத்தப்படவும் வாய்ப்பிருந்தது.

வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் கீழ் முதலில் வீழ்ந்த அரசு சதாரா ஆகும். சதாராவின் மன்னரான ஷாஜி இறந்த பின் (1848) அவரது சுவீகார வாரிசை டல்ஹௌசி அங்கீகரிக்க மறுத்தார். ஜான்சியின் அரசர் கங்காதர்ராவ் நவம்பர் 1853இல் இறந்த மறுகணமே அவ்வரசு டல்ஹௌசியால் இணைக்கப்பட்டது. (விதவையான அவரது மனைவி இராணி லட்சுமிபாய் 1857 பெருங்கிளர்ச்சியின் போது பெரும் பங்காற்றினார்). குழந்தைகள் இல்லாமல் ரகுஜி கோன்ஸ்லே 1853இல் மறைந்தார். நாக்பூர் உடனடியாகக் கம்பெனி ஆட்சியில் இணைக்கப்பட்டது. மராத்தியர்களின் கடைசி பேஷ்வா 1851இல் காலமானார். அவர் முப்பத்தி மூன்று வருடம் கமபெனி கொடுத்த ஓய்வூதியத்தைப் பெற்றிருந்தார். ஆனால் டல்ஹௌசியோ அவரது வாரிசான நானா சாகிப்பிற்கு ஓய்வூதியம் கொடுக்க மறுத்தார். இவ்வாறாக வாரிசு உரிமை இழப்புக் கொள்கை நாடு பிடிக்கும் உத்தியாகச் செயல் வடிவம் பெற்றது. எனினும் பிரிட்டிஷ் முடியரசு இந்திய நாட்டின் பொறுப்பை ஏற்ற பின் இக்கொள்கை திரும்ப பெறப்பட்டது.

## சுதேச அரசுகளும் ஆங்கிலேயரின் மேலாதிக்கமும்

பிளாசிப் போருக்குப்பின் (1757) கம்பெனி தன்னை விரிவுபடுத்தும் முகமாக இரட்டை ஆட்சி முறையை உருவாக்கியது. இம்முறையின் கீழ், மேலளவில் ஓர் அதிகாரமற்ற அரசரை வைத்துக்கொண்டு அவரது பின்புலத்தில் கம்பெனி அதிகாரிகள் செயலாற்றினர். கொள்கையளவில் கம்பெனி, தன்னை திவானாக (வரி வசூலிக்கும் அதிகாரம்) மட்டும் சொல்லிக்கொண்டாலும் முழு அதிகாரமும் அதனிடமே குவிந்திருந்தது. கிளைவால் உறுதியளிக்கப்பட்டிருந்த முகலாய மன்னருக்குச் செலுத்தவேண்டிய கப்பம் நிறுத்தப்பட்டதன் மூலம் இவ்வதிகாரம் வலியுறுத்தப்பட்டது. கடித அளவிலான மரியாதையைக்கூடக் காரன்வாலிஸ் கொடுக்க மறுத்தார். வெல்லெஸ்லி மேலும் நெருக்கடியைக் கூட்டும் வண்ணமாக பிரிட்டிஷாருக்குச் சாதகமாகத் துணைப்படைத் திட்டத்தைக்

கடைபிடித்தார். அதனை ஹைதராபாத், பூனா, மைசூர் போன்ற முக்கிய அரசுகளை ஏற்க வைத்தார்.

கவர்னர் ஜெனரலாக 1813ஆம் ஆண்டு பதவியேற்ற ஹேஸ்டிங்ஸ் முகலாய முத்திரையைப் (மொய்ரா) பரிவர்த்தனைகளில் தவிர்த்தார். கம்பெனியின் உடைமைகள் மீது முகலாய மன்னர் இரண்டாம் அக்பர் செலுத்தி வந்த ஆதிக்கத்தை நிறுத்திக்கொள்ளாவிட்டால் அவரைத் தான் சந்திக்க முடியாது என்றார். ஹேஸ்டிங்ஸ் இந்திய அரசுகளை நிர்வகிக்கும் பொறுப்பு கம்பெனிக்கு இல்லை என்ற கொள்கை முடிவைப் பின்பற்றினார். ஆக, துணைப்படைத் திட்டத்தின் கீழ் மக்கள் ஆட்சியாளர்கள் மீது அதிருப்தி கொண்டாலோ, அண்டை அரசு பொறாமையால் சூழ்ச்சியில் ஈடுபட்டாலோ பாதிப்பு எதுவும் ஆட்சி செய்வோருக்கு ஏற்படவில்லை. குறுந்தலைமைகளால் பிரித்து ஆட்சி செய்யப்பட்டு வந்த கத்தியவார் பகுதியையும் மத்திய இந்தியப் பகுதியையும் கம்பெனி நெருங்கிய கண்காணிப்பில் வைத்திருப்பது தவிர்க்க முடியாததாயிற்று.

துணைப்படைத் திட்டத்தின் கீழ் கம்பெனி ராணுவம் இந்திய ஆட்சியாளர்களை உள்நாட்டு கலகங்களிலிருந்தும், பிற பாதிப்புகளிலிருந்தும் காத்தது. ஹைதராபாத்தின் சில பகுதிகள் நிஜாமின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட அரேபியப் படைகளின் ஆதிக்கத்தில் இருந்தன. பிரிட்டிஷ் படைப்பிரிவின் உதவியோடு அரேபிய வீரர்கள் பணிய வைக்கப்பட்டார்கள். மைசூர் அரசில் 1830 ஆம் ஆண்டு நிதி நிர்வாக முறைகேட்டில் அரசர் ஈடுபட்டார் என்ற காரணத்தை முன்வைத்து ஏற்பட்ட கிளர்ச்சியை வெல்லெஸ்லியோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் கம்பெனி தலையிட்டு சரி செய்தது. கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பெண்டிங் அரசரை அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும், அதிகாரத்திலிருந்தும் விடுவித்து மார்க் கப்பன் என்பவரிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தார். குவாலியரின் வாரிசு இளம் வயதினர் என்பதால் நிர்வாகம் கட்டுடைந்து, அரசவையில் கோஷ்டிகள் தோன்றி அவர்களுக்குள் கடுமையாகச் சண்டையிட்டுக் கொண்டார்கள். இராணுவமோ கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு செயலிழந்து கிடந்தது. எல்லன்பரோ வலிமையான படைகளோடு வந்து சேர்ந்தார். அவரது படைகளை உள்ளூர் படைகள் எதிர்த்தன. மகாராஜ்பூர் போரில் உள்ளூர் இராணுவம் தோற்கடிக்கப்பட்டு 1843ஆம் ஆண்டில் படை பலத்தைக் குறைத்துக்கொள்வது உள்ளிட்ட நிபந்தனைகளோடு புதிய வழிமுறை மொழியப்பட்டது.

டல்ஹௌசியின் வாரிசு இழப்புக்கொள்கை பிரிட்டிஷாரின் நேரடிக் கட்டுபாட்டிற்குள்ளிருந்த பகுதியை விரிவாக்கியது. இணைக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் இந்திய மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்த அரசுகளின் மீதான கம்பெனியின் அதிகாரம் ஓங்கியது.

**குடிமை மற்றும் நீதி நிர்வாகங்களில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள்**

நீதிபதியும், கிழக்கத்திய சிந்தனை மரபை ஏற்றவருமான வில்லியம் ஜோன்சின் உதவியினைப் பெற்று காரன்வாலிஸ் கம்பெனி நிர்வாகத்தைக் கட்டமைத்தார். குற்றம் நடப்பதைக் கண்டுபிடிக்கவும், தண்டனை வழங்கவும் ஒரு சீரிய முறையை அறிமுகப்படுத்தியதன் மூலமாக கிளைவ் உருவாக்கிய இரட்டை ஆட்சி முறையை முடிவு கொண்டு வந்தார். வரி வசூலிக்கும் பொறுப்பைப் பொது நிர்வாகத்திலிருந்தும், நீதித்துறையிலிருந்தும் பிரித்தார். ஆட்சியர்களை (Collectors) வரி வசூலிக்க மட்டுமே பணித்து, அவர்களை நீதி

வழங்கும் பொறுப்பிலிருந்து விடுவித்தார். குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள் முழுமையாகச் சீரமைக்கப்பட்டன. நீதித்துறையின் உச்சங்களாக சதர் திவானி அதாலத்தும், சதர் நிஜாமத் அதாலத்தும் திகழ்ந்தன. குற்றவியல், குடிமையியல் நீதியில் உச்சபட்ச முறையீட்டு நீதிமன்றங்களான இவை கல்கத்தாவில் அமையப்பெற்று கவர்னர் ஜெனரல் உள்ளிட்ட குழுவினரால் வழிநடத்தப்பட்டன. அவற்றின் கீழ் நான்கு பிராந்திய முறையீட்டு நீதிமன்றங்கள் கல்கத்தா, தக்காணம், மூர்ஷிதாபாத், பாட்னா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. இந்நீதிமன்றங்கள் ஒவ்வொன்றினுக்கும் மூன்று ஐரோப்பிய நீதிபதிகளும், அவர்களுக்கு உதவி புரிய ஓர் இந்திய வல்லுனரும் நியமிக்கப்பட்டார்கள். இந்நீதிமன்றங்களின் கீழ் ஒரு ஐரோப்பிய நீதிபதியையும், அவருக்குத் துணையாகச் சில இந்தியர்களையும் உள்ளடக்கிய மாவட்ட மற்றும் நகர நீதிமன்றங்கள் இயங்கின. ஒவ்வொரு மாவட்டத்திலும் பெருநகரிலும் ஓர் நீதிமன்றம் அமைந்தது. அவற்றின் கீழ் இந்திய நீதிபதிகளைக் கொண்ட முன்சீப் நீதிமன்றங்கள் இயங்கின. சீரியல் (சிவில்) வழக்குகளில் இஸ்லாமியச் சட்டங்கள் பின்பற்றப்பட்டன. குற்றவியல் வழக்ககளில் தொடர்புடையவரின் சமயப் பின்னணியினைப் பொறுத்து இந்து சட்டமும், இஸ்லாமிய சட்டமும் பின்பற்றப்பட்டன.

காரன்வாலிஸின் தலையாய பங்களிப்பானது குடிமைப் பணிகளின் சீர்திருத்தமே ஆகும். அவர் திறமை வாய்ந்தவர்களையும் நேர்மையானவர்களையும் பணியமர்த்த வழிவகை செய்தார். கம்பெனி அதிகாரிகளுக்குச் சொற்ப சம்பளத்தை வழங்கிவிட்டு அவர்களைத் தனியாக வியாபாரம் செய்ய அனுமதித்த பழைய நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். திறமையின் அடிப்படையில் பணிவழங்கியபோதும், இந்தியர்கள் பணியாற்றத் தகுதியற்றவர்கள் என்று கருதியதால் அவர்களைப் பணிக்கு அமர்த்த மறுத்தார்.

ஒவ்வொரு மாவட்டமும் தானாக்களாகப் (காவல் நிலையம்) பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு தானாவும் இந்தியர் ஒருவரால் வகிக்கப்பட்ட தரோகா என்ற பதவியின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. காரன்வாலிஸின் காவல் துறை நிர்வாக முறை பின்னர் மேலும் மெருகேற்றப்பட்டது. நீதியதிகாரத்திற்கும் வருவாய் அதிகாரத்திற்குமிடையேயான திடமான பிரிவு கைவிடப்பட்டது. ஆட்சியரே நீதி வழங்கபவராகவும் செயலாற்றத் துவங்கினார்.

குடிமை மற்றும் நீதி நிர்வாகத்தைப் பண்படுத்திய காரன்வாலிஸ் கம்பெனி ஊழியரின் கல்வியை மேம்படுத்த போதிய அக்கறை செலுத்தவில்லை. வெல்லெஸ்லியோ அவர்களின் கல்வி மற்றும் மேம்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். இங்கிலாந்தின் தாராளவாதக் கல்வி முறையோடு இந்தியரின் மொழி, சட்டங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் குடிமைப் பணியாளர்கள் அறிந்திருத்தல் நன்று என அவர் கருதினார். இந்நோக்கத்தோடு கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் 1800இல் ஒரு கல்லூரி துவங்கப்பட்டது, கம்பெனியின் குடிமைப் பணியாளர்களுக்கு இங்கு மூன்று வருட காலப் பயிற்சி வழங்கப்பட்டது. பல ஐரோப்பியப் பேராசிரியர்களும் எண்பது இந்தியப் பண்டிதர்களும் இங்குப் பணிபுரிந்தனர். இதுவே வங்காளக் கிழக்கத்தியப் பள்ளியாக உருவெடுத்தது. கிழக்கிந்தியக் கல்லூரி 1806இல் இங்கிலாந்தில் துவக்கப்பட்டது. வில்லியம் கோட்டை கல்லூரியின் அடியொற்றி, எல்லிஸ் என்பவர் தூய ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை (1812) சென்னையில் உருவாக்கினார். இங்குதான் தென்னிந்திய மொழிகள் சமஸ்கிருதத்தோடு தொடர்பில்லாத சுதந்திரமான தனிமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்னும் கருத்தாக்கம் முதன்முதலில் உருவாக்கப்பட்டது.

## கம்பெனி ஆட்சியில் கல்வி வளர்ச்சி

மௌல்வி ஒருவரின் துணையோடு வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒரு மதரசாவை உருவாக்கியதே பிரிட்டிஷார் கல்விக்கு ஆற்றிய முதல் தொண்டு ஆகும். இம்மதரசா நாற்பது மாணவர்களைக் கொண்டு துவங்கப்பட்டு அவர்களுக்கு உதவித்தொகையும் வழங்கியது. இஸ்லாமியர்களுக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்தது போன்ற சேவையை இந்துக்களுக்கு மேற்கொள்ள அவருக்குப் பின் பொறுப்பேற்றோர் தயாராக இருந்தனர். காரன்வாலிஸ் வாரணாசியில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரியை (1791) நிறுவினார். அதன் பின் வந்த இருபது ஆண்டுகளில் பெரிய நடவடிக்கைகள் எதையும் பிற ஆளுநர்கள் மேற்கொள்ளவில்லை. கம்பெனியின் நலம் கருதி இந்தியாவில் கல்வி வளர்ச்சியை மேற்கொள்வது விரும்பத்தக்கது அல்ல என்றே நினைத்து செயல்பட்டது. பின்னர் 1813ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பட்டயச்சட்டத்தில் தெளிவான கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற பின் கிறித்தவ சமயத் தொண்டாற்றுவோர் மூலமாகத் தாய்மொழிக் கல்வியின் வளர்ச்சியை உக்குவித்தார். கல்கத்தாவில் 1817ஆம் ஆண்டு ஆங்கில மொழியையும் மேற்கத்திய அறிவியலையும் ஆதரித்த இந்தியரின் எண்ணவோட்டத்தைப் பூர்த்தி செய்யும் விதமாகத் துவக்கப்பட்ட இந்து கல்லூரிக்கு அவரே புரவலரானார். அலெக்சாண்டர் டஃப் போன்ற கிறித்தவ சமயப்பணியாளர்களும் கல்வியை வளர்த்தெடுக்கத் தூண்டுகோலாக இருந்தனர். ஹேஸ்டிங்ஸின் தாராளப்பார்வையும், அதன் விளைவாக 1799இல் பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்டிருந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதும் கல்வி வளர்ச்சியில் பாராட்டுக்குறிய நடவடிக்கைகளாகும். இச்சூழலில்தான் 1818ஆம் ஆண்டு வங்காள வாராந்திர இதழ் ‘சமாச்சார் தர்பன்’ துவங்கப்பட்டது.

இந்திய மக்களின் வளர்ச்சியையும் மேம்பாட்டையுமே 1833ஆம் ஆண்டின் பட்டயச்சட்டம் வலியுறுத்தியது. ஒருங்கிணைந்த பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலான வில்லியம் பெண்டிங் சமூக சீர்திருத்தத்தின் பொருட்டு தக்கர்களை (Thuggee) (சடங்கு முறையாக கொள்ளையடிப்பதையும், கொலை செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தவர்கள்) அழிக்கவும், சதி முறையை ஒழிக்கவும், கல்வி மேம்பாட்டுக்காகப் பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் திறக்கத் தலைப்பட்டார். கல்கத்தா மருத்துவக் கல்லூரியை 1835இல் துவங்கினார். இக்கல்லூரியின் மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் பொருட்டு 1844ஆம் ஆண்டு லண்டனுக்கு அனுப்பப்பட்டார்கள். 1845இல் பம்பாயில் கிராண்ட் மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டது. தாம்சன் பொறியியல் கல்லூரி 1847 ஆம் ஆண்டு ரூர்க்கியில் தோற்றுவிக்கப்பட்டது. கல்கத்தாவில் 1849இல் பெண்களுக்கான பள்ளி துவங்கப்பட்டது.

பட்டயம் (charter) என்பது ஒரு நாட்டின் இறையாண்மை அதிகாரத்தை மையமாகக்கொண்டு சகல அதிகாரங்களும், சலுகைகளும் உள்ள ஒரு வணிக நிறுவனத்தையோ, பல்கலைக்கழகத்தையோ, நகரத்தையோ உருவாக்க வழங்கப்படும் சட்டமாகும். கிழக்கிந்தியக் கம்பெனி, மகாராணி எலிசபெத் 1600இல் வழங்கிய பட்டயத்தின் மூலம் துவங்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக 1773 ஆம் ஆண்டு பதவியேற்றது முதல் இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்பட்டயம் புதுப்பிக்கப்பட வேண்டியது

அவசியமானது. பிரிட்டிஷ் முடியாட்சியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இந்தியா வருவதற்கு முன்பு வழங்கப்பட்ட 1853ஆம் ஆண்டின் பட்டயச்சட்டமே கடைசியானது ஆகும்.

மெக்காலே ஒரு சட்ட உறுப்பினராக 1835ஆம் ஆண்டில் இந்தியாவை வந்தடைந்தார். அவர் கல்விக்குழுமத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருக்கு உள்நாட்டுக் கல்வி மீது மதிப்பிருக்கவில்லை. மெக்காலே ஆங்கிலவழிக் கல்வியை ஆதரித்துப் பரிந்துரைத்ததால் அரசு ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாகவும் அலுவலக மொழியாகவும் ஏற்றுக்கொண்டது.

டல்ஹௌசியும் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டினார். அவர் வடகிழக்கு மாகாணத்தின் துணை ஆளுநர் (1843-53) ஜேம்ஸ் தாமஸினால் உருவாக்கப்பட்ட தாய்மொழிக் கல்விமுறைக்கு ஆதரவு கொடுத்தார்.

**மெக்காலே**

இந்திய இலக்கியம், தத்துவம், மருத்துவம் இவற்றில் எதிலும் மெக்காலே நல்லவற்றை காணவில்லை. 1835ஆம் ஆண்டு அவர் எழுதிய கல்வி குறித்த குறிப்பில் மெக்காலே கீழ்கண்டவாறு எழுதுகிறார் (இக்குறிப்பு பெரும் விவாதத்திற்கு உரியது):

…எனக்கு அரபு மொழியும் தெரியாது, சமஸ்கிருதமும் தெரியாது. ஆனால் அரபூ சமஸ்கிருத மொழிகளில் சிறப்பானவையாகக் கருதப்படும் நூல்களின் மொழியாக்கங்களைப் படித்திருக்கிறேன். எனது நாட்டிலும, இங்கும் (இந்தியாவில்) கிழக்கத்திய மொழிகளில் புலமை பெற்ற மனிதர்களுடன் உறவாடியிருக்கின்றேன். நல்லதோர் ஐரோப்பிய நூலகத்தில் உள்ள ஓர் அலமாரியில் இருக்கும் நூல்கள் அரேபியாவிலும், இந்தியாவிலும் உள்ள அனைத்து இலக்கிய நூல்களுக்கும் சமம் என்பதை அவர்களுள் ஒருவர் கூட மறுக்கமாட்டார்கள்.

…நமக்கு முன் உள்ள கேள்வி இதுதான்: நம்முடையவற்றிற்கு ஒப்பாக புத்தகங்கள் எந்த ஒரு பாடத்திற்கும் இல்லாதபோது நமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த மொழி (சமஸ்கிருதம்)யை நாம் கற்றுக்கொடுக்க முடியுமா?

…ஐரோப்பிய அறிவியலைக் கற்றுக்கொடுக்க முடியும்போது, ஐரோப்பிய முறைகளிலிருந்து மாறுபடுகிற அனைத்தும் மோசமானவை என்ற கருத்து எங்கும் நிலவும்போது, மேன்மைமிக்க தத்துவம், உண்மையான வரலாறு நம்மால் ஆதரிக்கப்படும்போது, பொதுமக்கள் நலத்திற்கு கேடான ஒன்றை ஆதரிக்க முடியுமா?

…ஆங்கிலேய குதிரைக்கு லாடங் கட்டுபவன் கூட நானத்தக்க மருத்துவக் கோட்பாடுகள், வானியல், 30 அடி உயர மன்னர்கள், முப்பதாயிரம் ஆண்டுகள் ஆண்டனர் என்ற வரலாறு, அமிர்த, பாற்கடல்களையும் கொண்ட புவியியல் போன்றவை ஆங்கிலேயரது உண்டு உறைவிடப்பள்ளியில் படிக்கும் சிறுமிகளுக்குக்கூட சிரிப்பை உண்டாக்கும்.

…அரபு, சமஸ்கிருத மொழிகளில்தான் பலநூறு மில்லியன் மக்களால் புனித நூல்கள் எழுதப்படுகின்றன. எனவே அவ்வடிப்படையில் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. உறுதியாக பிரிட்டீஷ்-இந்திய அரசின் கடமை மத சம்பந்தப்பட்டவற்றில் நடுநிலையோடும் சகிப்புத்தன்மையோடும் செயல்படுவதுதான். உள்நாட்டு மக்களைக் கிறித்தவர்களாக மதமாற்றம் செய்வோர்க்கு நாம் ஆதரவு தர மறுக்கிறோம்; எப்போதும் மறுப்போம் என நான் நம்புகிறேன். இவ்வாறு நாம் நடந்துகொள்ளும்போது எவ்வாறு நிச்சயமாக, கௌரவமாக அரசு நிதியிலிருந்து வாரி வீசி ஓர் கழுதையைத் தொட்டால் எப்படி சுத்தப்படுத்துவது, வேதத்தின் எப்பகுதியின் உரையை ஓர் ஆட்டைக் கொன்ற பாவத்திற்காகக் கூறவேண்டும் என்பனவற்றைக் கற்றுக் கொடுத்து எப்படி (இளைஞர்களின் இளமைக்காலத்தை வீணடிக்க முடியும்?

…தற்போது நமக்கும், நாம் ஆள்கின்ற லட்சக்கணக்கான மக்களுக்குமிடையே உரைபெயர்ப்பாளர்களாக ஒரு வர்க்கத்தை உருவாக்க நாம் முடிந்ததைச் செய்ய வேண்டும் - இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியர் ஆனால் சுவையில், கருத்தில், தார்மீகத்தில், அறிவில் ஆங்கிலேயராக இருக்கும் ஒரு வர்க்கம்.

…பிராந்திய மொழிகளைச் சீர்திருத்தி, மேற்கத்திய சொற்பட்டியிலிலிருந்து அறிவியல் தொடர்பான சொற்களைச் சேர்த்து செழுமைப்படுத்தி அனைத்து மக்களுக்கும் எவ்வழியில் அறிவைக் கொண்டு சேர்க்க முடியுமோ அவ்வழியில் கொண்டு சேர்க்கும் பொறுப்பை அவ்வர்க்கத்திடமே விட்டுவிடலாம்.

சார்லஸ் உட்டின் ‘கல்வி அறிக்கை (1854) ஆரம்பக்கல்வி முதல் உயர்நிலைப் பள்ளியையும், கல்லூரிப் படிப்பையும் உள்ளடக்கிய ஒரு விரிவான வரைவாகும். பொதுக் கல்வித்துறை துவங்கப்பட்டு மூன்று மாகாணத் தலைநகரங்களிலும் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே 1857இல் சென்னை பல்கலைக்கழகமும் பம்பாய், கல்கத்தா பல்கலைக்கழகங்களும் தோற்றுவிக்கப்பட்டன. டல்ஹளசி மெக்காலேயின் கொள்கையை மாற்றி, தாய் மொழியிலும் கல்வி நிலையங்கள் உருவாவதை ஆதரித்தார். அவர் சாதி சமயப் பாகுபாடு பார்க்காமல் தனியாரின் கல்விச்சேவையை ஆதரிக்கும் விதமாக கல்விச் சேவையில் ஈடுபட்ட தனியாருக்கும் மானியம் வழங்கினார்.

**பாதுகாப்பு முயற்சிகளும் வளர்ச்சி நடவடிக்கைகளும்**

**பிண்டாரிப் போர்**

பிண்டாரி கொள்ளைக்கூட்டத்தில் இஸ்லாமியர்கள், இந்துக்கள், இந்துக்கள் என்ற இரு சமயத்தைச் சார்ந்தவர்களும் இருந்தனர். துணைப்படைத் திட்டத்தினால் வேலையிழந்த பல வீரர்கள் இக்கொள்ளைக்கூட்டத்தில் சேர்ந்து கவலை கொள்ளும் அளவுக்குப் பெருகினர். பிரிட்டிஷ் அரசு பிண்டாரிகள் மீது போர்ப் பிரகடனம் செய்தது. ஆனால் அது மராத்தியருக்கு எதிரானப் போராக உருப்பெற்றது. இப்போர்கள் பல்லாண்டுகள் (1811-1818) நடைபெற்றாலும் மொத்த மத்திய இந்தியாவையும் இறுதியில் பிரிட்டிஷார் வசம் கொண்டு சேர்த்தது.

## தக்கர்களை அடக்குதல்

தக்கர்கள் பதினான்காம் நூற்றாண்டிலிருந்து தில்லிக்கும் ஆக்ராவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் கொள்ளையடித்துக்கொண்டிருந்த கூட்டத்தினர் ஆவார். அவர்கள் தங்கள் அமைப்பை உறுதிமொழி ஏற்பதன் மூலமாகவும், சில சடங்கு ஆச்சாரங்களைப் பின்பற்றுவதன் மூலமாகவும் பலப்படுத்தி அப்பாவி வழிப்போக்கர்களை எதிர்பாராத தருணத்தில் தாக்கி காளியின் பெயரால் கொலை செய்து வந்தனர். தக்கர்களின் அச்சுறுத்தலை அடியோடு நீக்க பெண்டிங் ஒரு திட்டத்தை வகுத்து அவர்களை அழிக்க வில்லியம் ஸ்லீமேனை நியமித்தார். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தக்கர்களின் குற்றங்கள் 1831 முதல் 1837 வரையான காலகட்டத்தில் நிரூபணமானது. ஐந்நூறு பேர் அரசு சாட்சிகளாக மாறினர். தக்கர்களை முன்னிட்டு எழுந்த பிரச்சினைகள் 1860ஆம் ஆண்டுவாக்கில் முடிவுக்கு வந்தன.

## சதி ஒழிப்பு

விதவைகளை அவர்களது கணவர்களின் சிதையோடு சேர்த்து எரிக்கும் சதி முறையை ஒழிக்க முடிவெடுத்ததின் மூலம் வில்லியம் பெண்டிங் தன் மனிதாபிமானத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு முன் பதவி வகித்த கவர்னர் ஜெனரல்கள் சமயம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் தலையிட யோசித்த பின்புலத்தில், பெண்டிங் தயக்கமில்லாமல் சட்டம் (சதி ஒழிப்புச் சட்டம், 1829) ஒன்றை இயற்றி, அதன் மூலம் இப்பழக்கத்திற்கு ஒரு முடிவு கொண்டுவர முயன்றார். இராஜா ராம் மோகன் ராயின் பிரச்சாரங்களும் முயற்சியும் இந்த மனிதத்தன்மையற்ற முறை ஒழிய முக்கியக் காரணமாக இருந்தன.

## இருப்புப்பாதையம், தபால்-தந்தி முறையும்

இருப்புப்பாதை அமைக்க முதல் கோரிக்கையை வைத்தது ஐரோப்பிய வியாபாரச் சமூகமே ஆகும். இந்தியாவில் வெற்றிகரமாக இருப்புப்பாதைப் போக்குவரத்துத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகம் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குனர்களிடம் இருக்கவே செய்தது. இருப்புப்பாதைப் போக்குவரத்தின் மூலமாக பொருளாதாரச் சாதகங்கள் ஏற்படும் என்று டல்ஹளசி வாதிட்டு அதை வலியுறுத்தினார். எனினும் 1857 பெருங்கிளர்ச்சிக்கு முன்பு வெறும் முந்நூறு மைல் தூரம் மட்டுமே இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருந்தது.

இந்தியாவிற்கும் லண்டனுக்குமிடையே தந்திப் போக்குவரத்தை உருவாக்க பல கோரிக்கைகள் வைக்கப்பட்டபோதும் தந்திப் போக்குவரத்து இந்தியாவில் 1854ஆம் ஆண்டுதான் தொடங்கியது. 1857ஆம் ஆண்டின் பெருங்கிளர்ச்சிக்குப் பின்

பம்பாய்க்கும் தானேவுக்கும் இடையே இருப்புப்பாதை 1853ஆம் ஆண்டு அமையவும், ஹௌராவுக்கும் ராணிகஞ்சிற்கும் இடையே 1854-55ஆம் ஆண்டுகயில் அமையவும் செய்தது. தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை 1856ஆம் ஆண்டு மதராஸுக்கும், அரக்கோணத்திற்கும் இடையே அமைக்கப்பட்டது. அவ்வாண்டில் திறந்து வைக்கப்பட்ட ரயில் நிலையங்களில் ராயபுரம் ரயில் நிலையமும் ஒன்றாகும்.

அது அதிமுக்கியத் தேவையென்ற நிலையை எட்டியது. லண்டனுக்கும், கல்கத்தாவிற்குமிடையே தொடர்பு கொள்ள பல மாதங்கள் ஆன சூழல் மாறி இருபத்தியெட்டு நிமிடங்களில் தொடர்பு கொள்ள தந்தி வழிசெய்தது. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்குமிடையே உள்ள தூரம் 1869ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதால் கிட்டத்தட்ட 4000 மைல்களாகக் குறைந்தது. இலண்டனின் இந்திய அலுவலகத்தில் (Indian Office) செயலாற்றி வந்த பிரிட்டிஷ் அரசின் செயல்தலைவரோடு தொடர்பு தவிர்க்கமுடியாததானது. இதன் பின் கர்சன் நீங்கலாக மற்ற கவர்னர் ஜெனரல்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமைச் செயலகமாகத் திகழ்ந்த ‘வெள்ளை மாளிகையைத்’ (Whitehall) தொடர்பு கொள்ளாமல் முடிவெடுக்கத தயங்கினார்கள்.

**நீர்ப்பாசன வசதி**

பாசனவசதி ஏற்படுத்திக் கொடுப்பதை பிரிட்டிஷ் அரசு புறக்கணித்தது. இந்திய அரசர்கள் வெட்டிச் சென்ற பழைய கால்வாய்களும் குளங்களும் பயனற்றுக் கிடப்பதை கண்டபோதும் அவற்றைத் தூர்வாரி பயன்பாட்டிற்குக் கொடுக்கவோ, புதுப்பிக்கவோ கம்பெனி முயற்சி செய்யவில்லை. சென்னையில், நாம் பின்வரும் பக்கங்களில் விரிவாகக் காணப்போவது போல, ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட ஆர்வத்தால் சிற்சில பாசன வேலைகள் நடந்தேறின. கொள்ளிடத்தின் குறுக்கே 1836இல் அணையைக் கட்டினார். கிருஷ்ணா நதியின் குறுக்கே அணை கட்டும் பணி 1853ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுபாட்டுக்குள் இந்தியா செல்வதற்கு முன்பாக வட இந்தியாவில் 1830இல் யமுனா கால்வாயும், 1857 இல் கங்கைக் கால்வாயை 450 மைல்கள் வரை நீட்டித்த பணியும், 1856இல் பஞ்சாப் பகுதியில் அமைந்த பாரி இடைத்துறைக் கால்வாய் தோண்டும் பணியும் பாசன வசதி மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முக்கிய பணிகளாகும். ஆனால் கால்வாய்கள் மண்ணில் உப்புத் தன்மையை கூட்டவும், தேவையில்லாத இடங்களில் தண்ணீர் தேங்கவும் வழிவகுத்தது.

**காடுகள்**

பிரிட்டிஷ் இந்திய அரசுக்கு வருவாய் ஈட்டிக்கொடுக்க கூடியதாக நிலமே விளங்கியது. அதனால் வேளாண் நிலத்தை விரிவுபடுத்தும் முயற்சி

மேற்கொள்ளப்பட்டு அதற்காகக் காடுகள் அழிக்கப்பட்டன. ஜங்கிள் மஹல் காடுகளிலிருந்து ஜமீன்கள் உருவாக்கப்பட்டு ஏலம் விடப்பட்டபின் முறையான வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டன. இந்நிலங்களின் பூர்வீக குடிகளான சந்தால் பழங்குடி மக்கள் விரட்டப்பட்டார்கள். ஆகவே சந்தால் இன மக்களே பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த முதல் பழங்குடி மக்களாகத் திகழ்கிறார்கள். ஐரோப்பிய நிறுவனங்களுக்கு மலைகளில் தோட்டப்பயிர் விவசாயத்திற்கு நிலங்கள் சொற்ப விலைக்கு விற்கப்பட்டது. ஆர்வ மிகுதியால் தோட்டப்பயிர்களைச் சாகுபடி செய்ய இந்திய அரசர்களும் ஜமீன்தாரர்களும் காடுகளை அழித்தார்கள். ஆனால் காப்பி பல இடங்களில் செழித்து வளரவில்லை. எனினும், விடாமல் காடுகளை அழித்துக் காப்பித் தோட்டங்களை உருவாக்க முயன்றுகொண்டே இருந்தார்கள். இருப்புப்பாதை பதிக்கும் பொருட்டு பெருமளவில் மரங்கள் வெட்டப்பட்டன. 1870களில் ஆண்டுக்கு கிட்டத்தட்ட பத்து இலட்சம் மரங்கள் என்ற அளவில் வெட்டப்பட்டு இருப்புப் பாதை அமைக்க தண்டவாளக் குறுக்குக்கட்டைகளாகப் பயன்படுத்தப்பட்டன. இந்திய மரங்களில் சால். தேவதாரு, தேக்கு போன்றவை அவற்றின் வலிமைக்காக பிற மரங்களைவிட அதிகம் வெட்டப்பட்டன. வங்காளம் மற்றும் பீகார் பகுதிகளை உள்ளடக்கிய ஜங்கிள் மஹால் காடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையில் அவை வெட்டப்பட்டன. இங்கிலாந்தில் இருப்புப்பாதை அமைக்கும்பொருட்டு இந்தியாவிலிருந்து மரப்பலகைகள் அனுப்பப்பட்டன. இந்தியக் காடுகளின் செல்வவளம் அழிக்க முடியாதது என்ற தொன்மக்கூற்று உடைப்பட்டது. இப்பின்னணியில் காடுகளின் வளங்களை மேலாண்மை புரிவதற்கும், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் 1865இல் இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பாரபட்சமான இச்சட்டம் காடுகளின் வளங்களைப் பூர்வீக குடிகள் பயன்படுத்தத் தடை விதித்ததால் அவர்களின் அதிருப்தியைப் பெற்றது. அவர்களின் எதிர்ப்பையும் புறக்கணிப்பையும் கட்டுக்குள் கொண்டுவரும் விதமாக கொடுமையான குற்றப் பழங்குடியினர் சட்டம், 1871இல் இயற்றப்பட்டது. காலனிய ஆதிக்கக்காலம் முழுமையும் அவ்வப்போது பழங்குடியின மக்கள் காலனி அரசுக்கு எதிராகக் கிளர்த்தெழுந்தனர். காலனி ஆட்சியில் இயற்றப்பட்ட வனச் சட்டங்கள் இன்றளவிலும் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றன.

**தொழில் முடக்கமும் செல்வச் சுரண்டலும்**

ஐரோப்பிய நாடுகள் கிழக்கிலிருந்து பெருமளவில் இறக்குமதி செய்துகொண்ட அளவிற்கு ஆரம்பத்தில் ஏற்றுமதி செய்ய முடியவில்லை. ஏற்றுமதியான நறுமணப் பொருட்கள், பருத்தி, ஆபரணங்கள் முதலானவற்றுக்கு மாற்றாகக் கிழக்கு நாடுகளுக்கு ஐரோப்பாவிலிருந்து எதுவும் தேவைப்படவில்லை. இந்த நிலையை இங்கிலாந்தின் ஜவுளி உற்பத்தியில் ஏற்பட்ட தொழிற்புரட்சி முதன்முறையாக மாற்றியமைத்தது. அதன்பின் திட்டமிட்டே இந்தியாவில் தொழில்கள் அழிவுக்குத் தள்ளப்பட்டன. உலகின் துணி ஏற்றுமதியில் முதன்மை பெற்று விளங்கிய இந்தியா, லங்காஷ்யரின் (இங்கிலாந்து) பருத்தி ஆடைத் தேவைக்குச் சந்தையாக மாற்றப்பட்டது. குறைந்த விலையில் இயந்திரங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட பிரிட்டிஷ் பொருட்கள் இந்தியச் சந்தைகளில் குவியலாயின. நீண்டகாலப் பயன்பாட்டுக்கு உகந்தமையாக இருந்ததனாலும், சொற்ப விலைக்கு விற்கப்பட்டதாலும் இயந்திரத் தயாரிப்பில் உருவான பொருட்களின் பயன்பாடு ஓங்கி, இந்தியப் கைவினைப் பொருட்கள் உற்பத்தி நலிவடையக் காரணமாகியது.

முதல் முப்பது ஆண்டுகளில் கம்பெனி அரசு பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான பொருட்களை இறக்குமதி வரி ஏதும்

விதிக்காமல் தங்குதடையின்றி அனுமதிக்கும் கொள்கையைப் பின்பற்றியது. இப்பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தியான பொருட்களைவிட விலை குறைவாக இருந்தன. அதே வேளை, இந்திய உற்பத்திப் பொருட்கள் மீது பாதுகாப்பு வரிகள் பலவற்றைத் திணித்து பிரிட்டிஷ் சந்தையில் பங்குபெற முடியாமல் செய்தனர். இக்கொள்கை இந்திய நெசவாளர்களையும் வணிகர்களையும் பெரிதும் பாதித்தது. நெசவாளர்கள் பெருமளவில் வேலையிழந்து வாழ்வாதாரத்திற்காக வேளாண்மைக்குச் செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஏற்கனவே நிலத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த மிக அதிக அளவிலான வேளாண் மக்களோடு நெசவாளர்களும் சேர்ந்ததால் நிலத்தின் மீதான அழுத்தம் அதிகமாகி நிலைமையை மேலும் சிக்கலாக்கியது.

இஸ்லாமியர் ஆட்சி முறையை பிரிட்டிஷ் அரசிடமிருந்து வேறுபடுத்திப் பார்த்த நௌரோஜி, முந்தைய ஆட்சியே நன்மை பயக்கக்கூடியதாகக் கருதியார். பெண்டிங் எழுதுகிறார். பல வகையிலும் இஸ்லாமியர் ஆட்சி நம்மை விஞ்சுகிறது. அவர்கள் படையெடுத்துச் சென்ற நாடுகளிலேயே குடியமர்ந்தார்கள். அவர்கள் உள்ளூர் மக்களோடு மண உறவு கொண்டார்கள், அவர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் வழங்கினார்கள், படையெடுத்தவர்களும், அடிபணிந்தவர்களும் ஒத்தக்கருத்தும், எண்ண ஓட்டமும் கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். இதற்கு மாறாக நம்முடைய ஆட்சியோ நேர்எதிரானதாக

> இங்கிலாந்து மக்களவையின் தேர்வுக்குழு (Select Committee) 1840 ஆம் ஆண்டு அங்கம் வகித்த சார்லஸ் ட்ராவல்யன் இவ்வாறு தன் பார்வையை முன் வைக்கிறார். வங்காளத்தில் முன்பு விளைந்த ஒருவகைப் பட்டு போன்ற பருத்தியிலிருந்து டாக்கா மஸ்லின் என்ற மெல்லிய துணியை நெய்வார்கள், அது போன்ற ஒன்றை பார்ப்பது அரிதாகிவிட்டது. டாக்கா நகரின் மக்கள் தொகை 1,50,000லிருந்து 30,000 அல்லது 40,000 என்ற அளவில் விழுந்து விட்டது என்பதோடு அந்நகரை மலேரியா நோயும், காடுகளும் வேகமாக சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் மான்செஸ்டர் என்று கருதப்பட்டு வந்த நகரம் இன்று சிறப்பிழந்து வறுமை சூழ்ந்து சிறுத்துவிட்டது. அங்கே நிலவும் அசாதாரணச் சூழல் உண்மையில் படு பயங்கரமானது.
>
> அபே டுபாய் என்ற பிரெஞ்சுக் கத்தோலிக்க சமயப் போதகர் தான் ஐரோப்பாவிற்குத் திரும்புவதற்கு முன் 1823ஆம் ஆண்டு இவ்வாறு கூறுகிறார். "கவலையும், இறப்பும் எங்கெங்கும் நிறைந்து சென்னை மாகாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் பசியால் செத்து மடிகிறார்கள்." "வணிக வரலாற்றில் இதற்கு சமமான ஒரு துயரம் நிகழ்ந்ததில்லை. பருத்தி நெசவாளர்களின் எலும்பு இந்தியாவின் கங்கைச் சமவெளிப் பரப்புகளை வெளுக்கச் செய்கின்றன" என்று கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் கூறுகிறார்.

உள்ளது – விரோதப் போக்கு, சுயநலம், இரக்கமின்மை ஆகியவையே அதன் கூறுகள்.

பிரிட்டிஷ் இந்தியாவின் வரவு செலவுக் கணக்கில் இராணுவ மற்றும் குடிமை நிர்வாகச் செலவுகள் 80 சதவீதமாகவும், எஞ்சிய 20 சதவீதம் மட்டுமே மற்ற துறைகளுக்குப் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிலை இருந்தது. வேளாண்மை புறக்கணிக்கப்பட்டது. பாசன வசதி ஏற்படுத்தப்படவில்லை. காவேரி, கோதாவரி, கிருஷ்ணா நதிகளில் தடுப்பணைகள் கட்டிய ஆர்தர் காட்டன், காலனி அரசு

நீர்ப்பாசனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்புப்பாதை பதிப்பதில் ஆர்வத்தைக் குறைத்துக்கொள்ளலாம் என்று பரிந்துரைத்தது நிராகரிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி கால்நூற்றாண்டில் ஏற்பட்ட தொடர் பஞ்சங்கள், பிரிட்டிஷ் முடியரசை அணைகள் கட்ட சில நடவடிக்கைகள் எடுக்கத் தூண்டின.

இரயத்துவாரி முறையின் நோக்கம் சீரழிந்துபோன வஞ்சகமான ஜமீன்தார்களிடமிருந்து விடுவிக்கப்பட்ட வேளாண் குடிகளை உருவாக்குவதே என்று சொல்லப்பட்டாலும், உண்மையில் பெரிய நிலக்கிழார்களே வலுவடைந்தார்கள். இரயத்துவாரி பகுதிகளில் குத்தகை விவசாயிகளின் நலன் பற்றி அரசு அக்கறை கொள்ளவில்லை. நில வரியே அரசின் பெரிய வருவாயாக இருந்ததால் கடுமையான முறைகளைப் பின்பற்றி வரி வசூலிப்பது முக்கியக் கொள்கையாக இருந்தது. கம்பெனி அரசால் சென்னையில் நியமிக்கப்பட்ட சித்திரவதை ஆணையம் 1855இல் சமர்ப்பித்த அறிக்கை, வருவாய் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் வரி வசூலிக்கும் சமயங்களில் பயிரிடுவோர் மீது கட்டவிழ்த்துவிட்ட அராஜகங்களை விளக்கமாக எடுத்தியம்பியது. எனினும் சித்திரவதைச் சட்டம் 1858ஆம் ஆண்டுதான் திரும்பப் பெறப்பட்டது.

**பஞ்சங்களும், ஒப்பந்தத் கூலிகளும்**

பஞ்சம் இந்தியாவுக்குப் புதியதல்ல என்ற போதும் பிரிட்டிஷ் ஆட்சியில் அது அடிக்கடி தோன்றியதோடு மிக கோரமானதாகவும் விளங்கியது. நான்கு பஞ்சங்களே 1800ஆம் ஆண்டிலிருந்து 1825ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தோன்றின. ஆனால் அந்நூற்றாண்டின் கடைசி இருபத்தைந்து ஆண்டுகளில் 22 பஞ்சங்கள் தோன்றின. இவற்றால் ஐம்பது இலட்சத்திற்கும் மேலானோர் இறந்ததாகக் கருதப்படுகிறது. முன்னாள் அரசு உயர் அதிகாரியான ரோமேஷ் சந்திர தத் 1901ஆம் ஆண்டில் கணக்கிடும் போது 1860ஆம் ஆண்டிற்கு பின் 10 பேரும் பஞ்சங்களைச் சுட்டுவதோடு, அதனால் ஒன்றரை கோடி மக்கள் இறந்ததாகவும் கூறுகிறார்.

தலையிடா வணிகக்கொள்கை (Laissez Faire) என்பதைக் கடைபிடிப்பதாக 1833இல் காலனி அரசு எடுத்த முடிவைப் பஞ்சக் காலத்திலும் பலமாகப் பின்பற்றியதாகத் தெரிகிறது. பல ஆண்டுகளாக மேற்கத்தியக் கல்வி முறையில் கற்ற இந்திய இளைஞர்கள் பிரிட்டிஷ் ஆட்சியே இந்தியாவை வறுமையின் பிடியில் வைத்திருக்கிறது என்று வாதிட்டனர். ஒரிசாவில் ஏற்பட்ட பஞ்சத்தில் மூன்றில் ஒருவர் என்ற அளவில் மக்கள் பசியாலும் நோயாலும் செத்து மடிந்ததே அக்கூற்றுக்குச் சான்றாக விளங்கியது. இந்நிகழ்வே தாதாபாய் நௌரோஜியை தமது வாழ்க்கை முழுக்க இந்திய வறுமை பற்றிய ஆய்வை மேற்கொள்ள வைத்தது.

அன்றை சென்னை மாகாணத்தின் குண்டூர் மாவட்டத்தில் 1833ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சம் பற்றிய ஒரு நேரடிப் பார்வையாளரின் (ஆங்கிலேயர்) கூற்று வருமாறு: மிகுந்த நெருக்கடியான சூழலில் மனிதர்கள் எத்தகைய அருவருப்பான உணவை உட்கொள்வார்கள் என்பதை யோசிக்கவே மிகவும் அச்சமாக உள்ளது. ஏனென்றால் உயிர் பிழைத்த சிலர் ஒரு செத்த நாயையும் குதிரையையும் பேராசையோடு சுவைப்பதைக் கண்டேன். மற்றொரு சமயம் ஒரு துரதிருஷ்டமான கழுதை கோட்டையை விட்டு வெளியேறிய அக்கணத்திலேயே அதன் மீது ஓநாய்கள் போல் பாய்ந்து முன்னங்கால், பின்னங்கால் வேறுபாடில்லாமல் பாய்ந்து அங்கேயே கொன்று சுவைத்ததைக் கண்டேன்.

தாது வருஷப் பஞ்சம், 1876-78: இரு ஆண்டுகளில் தொடர்ச்சியாக பருவகாலம் பொய்த்ததால் சென்னை மாகாணத்தில் 1876-78 ஆம் ஆண்டுகளில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. ஒரிஸ்ஸாவில் பின்பற்றியது போன்றே வைஸ்ராய் கைவிரிக்கும் போக்கை பின்பற்றினார். இதனால் மாகாணத்தில் முக்பத்தைந்து லட்சம் மக்கள் மடிந்தனர்.

தோட்டப்பயிர்களின் அறிமுகமும், மலைச் சரிவு நிலப் பயிரிடு முறையில் ஏற்பட்ட வளர்ச்சியும் இலங்கை, மொரீசியஸ், பிஜி, மலேயா, கரீபியன் தீவுகள், நேட்டால், தென்னாப்பிரிக்கா போன்ற பகுதிகளில் அதிகமான தொழிலாளர் தேவையை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் அடிமைகளே பயன்படுத்தப்பட்டார்கள். கம்பெனி அரசு 1843இல் இந்தியாவில் அடிமை முறையை ஒழித்த பின் ஒப்பந்தக் கூலிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையின் கீழ், தொழிலாளர்கள் ஐந்து ஆண்டுகளுக்குப் பணியமர்த்தப்பட்டு முடிவில் பயணச் செலவு வழங்கப்பட்டவுடன் தாய்நாட்டிற்குத் திரும்ப வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட பல தொழிலாளர்களும் நெசவாளர்களும் சிறிதளவேனும் பணம் ஈட்ட முடியும் என்று எண்ணி இம்முறைக்கு இசைந்தார்கள். ஆனால் அதற்கு மாறாக அவர்களுடைய நிலை அடிமை முறையைவிட மோசமானதாக விளங்கியது. காலனி அரசு நிலமற்ற விவசாயக்கூலிகளை ஏமாற்றியோ, ஆட்கடத்தல் முறையிலோ தொழிலாளர்களை கொண்டு வர கண்காணிகளை நியமித்தது. இவ்வாறு 150 ஒப்பந்த தொழிலாளர்கள் முதன்முறையாக 1828இல் தஞ்சாவூர் பகுதியிலிருந்து இலங்கையில் அமையப்பெற்ற பிரிட்டிஷ் காப்பித் தோட்டங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் பணியை விட்டு தப்பிச் சென்றார்கள். தப்பிச்செல்வது குற்றம் என்று கூறிய 1830களின் சட்ட விதிகளையும் இணைத்து நடந்த பணிநியமனம் இந்நிலைமையை மேலும் மோசமாக்கியது எனினும் பட்டினி சாவிலிருந்து தப்பிக்கப் பலர் தாமாக முன்வந்து இப்புதிய அடிமை முறையில் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

சென்னையின் ஆளுநர் 1815ஆம் ஆண்டு இலங்கையின் ஆளுநரிடமிருந்து காப்பித் தோட்டங்களில் பணி புரிய கூலித் தொழிலாளர்களைக் கேட்டு கடிதம் ஒன்றை பெற்றார். சென்னை ஆளுநர் அக்கடிதத்தை தஞ்சாவூர் ஆட்சியருக்க அனுப்ப, அவர் நிலைமையை ஆராய்ந்து அங்குள்ள மக்கள் நிலத்தோடு மிகுந்த பற்றுக்கொண்டவர்களாக விளங்குவதால் ஏதாவது ஊக்கமளிக்காவிட்டால் விஷயமில்லாமல் அவர்களை ஊரை விட்டுக் கிளப்புவது கடினம் என்று பதில் கொடுத்தார். ஆனால் அப்பகுதியை தாக்கிய இரு பெரும் பஞ்சங்கள் (1833 மற்றும் 1843ஆம் ஆண்டுகளில் அரசின் எந்தவித ஊக்கமோ, சலுகையோ இல்லாமல் அவர்களை இலங்கைக்குப் புலம் பெயர்த்து காப்பி மற்றும் தேயிலைத் தோட்டங்களில் ஒப்பந்த முறையின் கீழ் கூலித் தொழிலாளர்களாக

பணியில் அமரக் கட்டாயப்படுத்தின. கிட்டத்தட்ட பதினைந்து லட்சம் (1,444,407) மக்கள் இலங்கைக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாகச் சென்றார்கள்.

ஒப்பந்தக் கூலிமுறை: இன்றைய நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தத் தொழிலாளர் திட்டத்திற்கு முற்றிலும் மாறான, தண்டனைக்குரிய ஒப்பந்தமுறை ஆகும் இது. இம்முறையின்படி கூலி (ஒப்பந்தத் தொழிலாளரை அழைக்கும் பெயர்) சிறைச்சாலை போன்ற சூழலில் பணி செய்ய வேண்டும். பணியில் அலட்சியம் காட்டினாலோ அல்லது பணி செய்ய மறுத்தாலோ, மிடுக்காகத் திரிந்தாலோ உத்தரவுக்குக் கீழ்படிய மறுத்தாலோ, ஒப்பந்தக் காலம் முடியுமுன் பணியைவிட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறைத் தண்டனை வழங்கவோ முடியும். ஓர் அற்பப் பிரச்சனைக்காகக்கூட சட்டச் சரத்துக்களைக்காட்டி தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை மறுப்பதோ அவர்களை சிறையிலடைக்கவோ செய்தனர். கூலி உயர்வுக்காவோ அல்லது ஒப்பந்தத்தை முறிக்கவோ செய்திட சங்கம் வைத்துப் போராட ஒப்பந்தக் கூலிச் சட்டம் தோட்டத் தொழிலாளர்களை அனுமதிக்கவில்லை. பாரதி தனது 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலில் பெண் தோட்டத் தொழிலாளர்களின் பரிதாப நிலையை உருக்கமாக எடுத்துக்காட்டியிருக்கிறார். 1843-1868 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சென்னையிலிருந்து

**செல்வச் சுரண்டல்**

'வறுமையும் இந்தியாவில் ஆங்கிலேய முரண் ஆட்சியும்' (Poverty and UnBritish Rule in India) என்ற நூலில் ஆங்கிலேயருக்கு முன்பு படையெடுத்து வந்த ஆட்சியாளர்கள் எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்பதை தாதாபாய் நௌரோஜி விளக்குகிறார். ஆங்கிலேயருக்கு முன்பு படையெடுத்து வந்தவர்கள் கொள்ளையடித்து தங்கள் நாடுகளுக்குத் திரும்பச் சென்று விட்டார்கள். சந்தேகமில்லாமல் அவர்கள் மிகுந்த ரணங்களை ஏற்படுத்தினார்கள் என்றபோதும் செயலூக்கம் கொண்ட இந்தியா சிறிது காலத்தில் மீண்டெழுந்தது. அவ்வாறல்லாமல் படையெடுத்தோர் ஆட்சியாளர்களாக இந்த மண்ணில் குடியமர்ந்த போது அவர்கள் ஆட்சி முறை எவ்வாறு இருந்த போதும் இங்கிருந்து பொருட்கடத்தலோ, நன்னடத்தை சீர்கேடோ ஏற்படவில்லை. ஆங்கிலேய ஆட்சி இதிலிருந்து வேறுபடுகிறது. பொதுப்பணத்தில் நடத்தப்பட்ட முதற்போர்கள் பெரும் கடன் சுமையை ஏற்படுத்தின என்பதோடு காயத்தை ஆறவிடாமல் உயிர் பாய்ச்சும் உதிரத்தை உறிஞ்சும் போக்கில் தொடர் சுரண்டலே நடைபெற்றது. பழைய ஆட்சியாளர்கள் கசாப்புக்காரர் போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெட்டினர், ஆனால் ஆங்கிலேயரோ விஞ்ஞான அறிவோடு அறுவை சிகிச்சை நிபுணர்கள் கத்தியால் நேரடியாக இதயத்தை வெட்டினாலும், வடு தெரியாதவாறு நேர்த்தியைக் கையாளுவதோடு நாகரீகம், வளர்ச்சி போன்ற சொல்லாடல்களை பயன்படுத்திக் காயத்தை மறைக்கிறார்கள்.

நௌரோஜி தன் வாதத்தில் இந்தியாவிலிருந்து பெருந்தொகை உள்நாட்டின் செலவுக் கட்டணம் (Home Charges) என்ற வகையில் இங்கிலாந்து போய்ச் சேர்கிறது என்கிறார். உள்நாட்டு செலவுக் கட்டணம் கீழ்க்கண்ட கூறுகளை உள்ளடக்கியது.

- கம்பெனியின் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட இலாபம்.

- ஐரோப்பிய அதிகாரிகள், ஐரோப்பிய வியாபாரிகள், தோட்ட முதலாளிகள் போன்றோரின் சம்பளம், சேமிப்பு என்ற வகையில் இங்கிலாந்தில் வரவு வைக்கப்பட்டத் தொகை.
- இராணுவத்திலிருந்தும், குடிமைப் பணிகளிலிருந்தும் ஓய்வு பெற்றோருக்குச் சேர வேண்டிய ஓய்வு ஊதியத் தொகை.
- இலண்டனில் அமைந்திருந்த ‘இந்திய அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கும் செயலருக்குமான வேண்டிய பெருஞ் சம்பளம்.
- இந்தியாவில் நிகழ்ந்த போர்களுக்கான செலவுகள், போர் நடத்துவதற்காக வங்கியில் பெற்ற கடன்களுக்கான வட்டி மற்றும் இருப்புப்பாதை அமைக்க ஏற்பட்ட செலவுகள்.

இங்கிலாந்திற்கு இந்தியா 1837இல் கொடுக்க வேண்டிய கடன் 130 மில்லியன் பவுண்டுகளாகும். அது சிறிது காலத்தில் 220 மில்லியன் பவுண்டுகளாக உயர்ந்த போது அதில் 18 சதவீதம் ஆப்கானிஸ்தானோடும், பர்மாவோடும் போர் நடத்திய வகையில் செலவு செய்ததாகக் சொல்லப்பட்டது. ஒரு அரசு அறிக்கை 1908 ஆம் ஆண்டின் நிலவரத்தைக் குறிப்பிடும்போது இருப்புப்பாதை பதிக்கும் வகையில் மட்டும் இந்தியாவின் கடன் பாக்கி 177.5 மில்லியன் பவுண்டு என்றது. இந்தியாவில் முதலீடுகள் தொய்வு நிலையை எட்டியபோது பிரிட்டிஷ் அரசு இங்கிலாந்தின் தனியாரிடமிருந்து முதலீடுகளை பெற்றுக்கொண்டது. இவ்வாறு பெறப்பட்ட முதலுக்கு உறுதியாக 5 சதவீத வட்டியை ஸ்டெர்லிங்கில் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. இந்த வகையில் மட்டுமே இந்தியாவிற்கு 220 மில்லியன் பவுண்டுகள் என்ற அளவில் இழப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் நடந்த செல்வவளக் கடத்தல் (Drain of Wealth) என்று இப்போக்கை வர்ணிக்கும் தாதாபாய் நௌரோஜி இவ்வளங்கள் இந்தியாவிலேயே தங்கியிருந்தால் இந்த நாடு செழித்திருக்கும். மேலும் கூறுகையில் அவர் கஜினி முகமதுவின் கொள்ளை பதினெட்டு முறையோடு நின்றுவிட, பிரிட்டிஷாரின் கொள்ளையோ முடிவில்லாமல் தொடர்கிறது என்றார். ஆர்.சி. தத் மதிப்பீட்டில் மகாராணி விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தின் கடைசிப் பத்து ஆண்டுகளில் (1891-1901) மொத்த வருவாயான 647 மில்லியன் பவுண்டுகளில், 159 மில்லியன் பவுண்டுகள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது எனத் தெரிய வருகிறது. இது மொத்த வருவாயில் 24 சதவீதம் என்று சொல்லப்படுகிறது.